

நமது விரதங்களும்
பலன்களும்
அகில்
நர்மதா பதிப்பகம்

# உறவுகள் மேம்பட...

குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி, மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க:

- நானே பெரியவன். நானே சிறந்தவன் என்ற அகந்தையை(Ego) விடுங்கள்.
- அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள்.(Loose Talks)
- எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசுக்காக கையாளுங்கள். (Diplomacy) விட்டுக் கொடுங்கள் (Compromise).
- சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்பதை உணருங்கள் (Tolerance).
- எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- உங்கள் கருத்துகளில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள் (Flexibility).
- மற்றவர்களுக்குரிய மரியாதையை காட்டவும், இனிய, இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள் (Courtesy).
- புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும்கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- பிரச்சனைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள்.


இந்த இனிய,
என்றும் பயன் தரும்
நூலை பரிசாக
வழங்குவதில்
பெரு மகிழ்வு கொள்ளும்-
தங்கள்
அன்புள்ள,
..........................



# நமது விரதங்களும் பலன்களும்

கவிஞர் அகில்

நர்மதா பதிப்பகம்
நல்ல நூல் வெளியீட்டாளர்கள்
10, நாணா தெரு, (தி.நகர் தலைமை
அஞ்சலகத்தை ஒட்டிய தெரு), பாண்டிபஜார்,
தி. நகர், சென்னை – 600 017. தொலைபேசி : 24334397

சமர்ப்பணம் :

இவனை
உருவாக்கியவர்களுக்கு...

Pages : 176

**Price : Rs. 65.00**

Paper Used : 13.6 Kg. SPB N.S.

❑ Namadhu Viradhangalum Palangalum – Our religious fasts and their blessings – a guide to celebrate the Hindu festivals in Tamil by Poet Akil © ❑ First Edition : October 2003 ❑ Published by T.S. Raamalingam, Narmadha Pathipagam, Chennai – 600 017 ❑ D.T.P. Execution at : M/s P.S. Muthu Graphics, Chennai – 600 015. ❑ Printed at : M/s Malar Printers, Chennai - 600 034 ❑

நவஜோதி ஜோதிடாலயம்
வண்டன்.

## உட்பொதிவு


1) சித்திரா பௌர்ணமி 19
2) ஸ்ரீ இராம நவமி 22
3) வைகாசி விசாக விரதம் 25
4) முருகப் பெருமான் நூற்றெட்டு போற்றி 27
5) ஆனி உத்தரம் 31
6) சிவபெருமான் நூற்றெட்டு போற்றி 32
7) ஆடி அமாவாசை விரதம் 35
8) வரலக்ஷ்மி விரதம் 37
9) விநாயக சதுர்த்தி விரதம் 39
10) விநாயகர் ஷோடஸ நாமாவளி 42
11) விநாயக சதுர்த்தி பற்றிய கதை 43
12) ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி 46
13) ஸ்ரீ கிருஷ்ண அஷ்டோத்ர சத நாமாவளி 47
14) புரட்டாசிச் சனி 51
15) நவராத்திரி பற்றிய கதைகள் 54
16) கொலு வைப்பதனின் நோக்கம் 56
17) முப்பெரும் தேவியர் பற்றிய நாமாவளி 57
18) கந்த சஷ்டி விரதம் 59
19) முருகனை அர்ச்சிப்பதற்கான மந்திரங்கள் 60
20) கேதார கௌரி விரதம் 62
21) அம்பிகை நூற்றெட்டுப் போற்றி 66
22) வெள்ளிக்கிழமை விரதம் 71
23) கார்த்திகை விரதம் 74
24) கார்த்திகை விரதம் பற்றிய கதைகள் 75
25) பஞ்ச பூதத் தலங்கள் 75
26) தீபங்கள் ஏற்றுவதால் ஏற்படும் பலன்கள் 77
27) கார்த்திகை சோமவாரம் 78
28) விநாயக சஷ்டி விரதம் 80
29) விநாயகர் நூற்றெட்டுப் போற்றி 81
30) வைகுண்ட ஏகாதசி 86
31) திருவாதிரைத் திருநாள் [திருவெம்பாவை] 90
32) ஆருத்திரா தரிசனம் 91
33) திருவாதிரைக் களி 92
34) ஐயப்ப விரதம் 94

35) இருமுடியின் தத்துவம் 95
36) பதினெட்டுப்படிகளின் தத்துவம் 96
37) தை மாத விரதங்கள் 99
38) மாசி மகம் 105
39) மகா சிவராத்திரி 106
40) சிவராத்திரி பற்றிய கதைகள் 108
41) காரடையார் நோன்பு 110
42) பங்குனி உத்தரம் 113
43) பிரதோஷ விரதம் 114
44) சோம சூத்திரப் பிரதட்சணம் 118
45) நந்தி தேவரின் கதை 119
46) சிவ அஷ்டோத்தர சத நாமாவளி 123
47) நந்திகேச அஷ்டோத்தர சத நாமாவளி 127
48) ஸ்ரீ சந்தோஷிமாதா விரதம் 131
49) பிருந்தாவனத் துவாதசி 137
50) சுவர்ண கௌரி விரதம் 139
51) ஆவணி அவிட்டம் 140
52) சத்யநாராயண விரதம் 141
53) சிவனைப் பிடித்த சனிபகவான் 149
54) இராகு பகவான் விரதம் 151
55) கேது பகவான் விரதம் 153
56) நமது முன்னோர்கள் விரதமிருந்து கடைப்பிடித்த உபவாச முறைகள் 154
57) இரண்டு விரதங்கள் சேர்ந்திருந்தால் அனுஷ்டிக்க வேண்டிய விரத விதி 157
58) பூஜைக்குப் பயன்படுத்தப்படும் பூக்கள் தரும் பலன்கள் 159
59) பலன்கள் தரவல்ல அர்ச்சனை இலைகள் 160
60) திதி பூஜா பலன்கள் 163
61) குத்து விளக்கும் அதன் பலன்களும் 167
62) திருநீற்றை இடும்போது அனுசரிக்க வேண்டிய சில விதிகள் 171
63) அபிஷேகப் பொருட்களும் அவற்றினால் கிடைக்கும் பலன்களும் 174

# நூலாசிரியரைப் பற்றி...

வட இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் இந்நூலாசிரியர் கவிஞர் சாம்பசிவம் அகிலேஸ்வரன். இவரது ஆங்கிலக் கவிதைகள் சர்வதேச அளவில் பல பரிசுகளைப் பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

1997–ஆம் ஆண்டில் 'The Poem of the day' சஞ்சிகையின் 'Editor's Choice Award' இவரது கவிதைக்கு வழங்கப்பட்டது.

2001–ஆம் ஆண்டில் 'The International Library of Poetry' அமைப்பினரால் 'Editor's Choice Award' இவரது கவிதைக்கு வழங்கப்பட்டது.

2002–ஆம் ஆண்டில் இதே அமைப்பால் 'International Poet of Merit Award' அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்.

**வெளிவந்த நூல்**

திசை மாறிய தென்றல் (நாவல்)

**வெளிவர இருக்கும் நூல்கள்**

An Expression of My Soul
குறள் அமுதம் (கட்டுரைகள்)
அகிலின் கவிதைகள்

■

# ஆசியுரை

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்ற ஔவையின் கூற்றுப்படி எமது மனித வாழ்க்கைப் பயனுடையதாகவும், உயர்ந்த கொள்கைகளை உடைய தாகவும் அமைவது மிகவும் அவசியம். அவ்வகையில் எமது பாதை இறை பக்தியுடன் செயற்படுமாயின் அத்தகைய பிறவி நிச்சயமாகப் பயனுடையதாகவே அமையும்.

இந்த உயர் நோக்கம் நிறைவேறும் பணியில் உருவாகியதே "நமது விரதங்களும் பலன்களும்" எனும் இந்நூல். "நமது விரதங்களும் பலன்களும்" எவை என்பதை இந்து மதத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் அறிந்துகொள்வது இன்றியமையாததாகும். ஒவ்வோர் ஆலயத்திலும் நடைபெறும் வழிபாடும், விரதங்களும், வகைகளும், அவற்றுக்கான காரணமும், விளக்கமும் கூறும் இந்நூலைப் பெரும் பொக்கிஷமாகக் கருதுவது இன்றியமையாத தாகும். இந்நூலை ஆக்கியோனை முதலில் பாராட்டு வதும், எண்ணுவதும் சாலச் சிறந்தது. அதுமட்டுமல்லாமல் இந்நூலிலே தொகுக்கப்பட்ட விரதங்கள், பலன்கள் யாவும் புராண இதிகாச ஆதாரத் தோடு உள்ளமையை யான் உறுதிப்படுத்துவதோடு, இதே போல் பல ஆகம நூல்களை இந்நூல் ஆசிரியர் என்றென் றும் தொகுத்து வழங்க ஸ்ரீ கனக துர்க்கை அம்பாளின் திருவருள் ஆசி பெற மனதார வேண்டுகிறேன்.

**சிவஸ்ரீ கனக பாலகுமார சர்மா**
ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் தேவஸ்தானம்
ஆலயப் பிரதம குரு
ஈலிங்கு - இலண்டன்
05.03.2003

சுபமஸ்து

# ஆசியுரை

''மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்.''

புலம் பெயர்ந்து வாழ்ந்து வரும் சைவத்தமிழ் மக்களிடையே இருக்கின்ற ஆன்மீகப் பற்றுக்கு உறுதுணையாகவும், அவர்களிடையே ஏற்படக் கூடிய சந்தேகங்களும், குழப்பங்களும் ஒரு தெளிவைப் பெறுகின்ற வகையிலும், எதிர்கால சந்ததியினரையும் ஆன்மீக ஈடுபாட்டில் ஊக்குவிக்கும் வகையிலும், ஓர் இளைஞனின் பெருமுயற்சியாகப் புராண இதிகாசங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பெற்று 'நமது விரதங்களும் பலன்களும்' என்ற அமைவான தலைப்போடு நாம் பெரும்பாலும் அனுஷ்டிக்கின்ற விரதங்களையும், அவற்றை அனுஷ்டிக்கும் முறைகளையும், அனுஷ்டிப்பதால் கிடைக்கும் பலன்களையும் செவ்வனே தொகுத்துத் தந்துள்ளார்.

இலண்டன் மாநகரத்து வேலைப் பளுவுக்கு மத்தியிலும், ஆன்மீக சிந்தனையோடு, உருவாக்கப்பட்டுள்ள இந்நூலின் தேவையானது இன்றைய காலகட்டத்தில் மிக இன்றியமையாததாகும். இந்நூலினைத் தனிமனிதனாக முயன்று ஆக்கிய 'சைவத் தமிழ்ச் செல்வன்' திரு. அகில் அவர்களுக்கு எல்லாம் வல்ல பரம்பொருளின் பெருங் கருணை குறைவின்றி அமைய ஆசி கூறி அமைகின்றோம்.

முத்தமிழ்க் குருமணி
**சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள்,**
சுன்னாகம் [இலங்கை]

சிவாச்சார்ய சிரோண்மனி
**சிவஸ்ரீ ச. குமாரசாமி குருக்கள்,**
சித்தங்கேணி [இலங்கை]

# ஆசியுரை

## சிறந்த நூல்

சைவம் சிவ சம்பந்தமுடையது. சைவ சமயம் என்பதே அன்பு நெறியைக் காட்டி நிற்பது. அதாவது, ஆன்மாவை யும் இறைவனையும் அன்பால் இணைப்பது. எல்லா வற்றையும் இறைமயமாகப் பார்ப்பது – சரியான நெறியை – பாதையை எடுத்தியம்புவது சைவம். சைவ சமயத்தவர் களாகிய நாம் கடவுள் பற்றையும், சமயப் பற்றையும் கொண்டிருத்தல் அவசியம். இறைவன் திருவருளைப் பெறுவதற்குச் சிறந்த சாதனமாக வழிபாட்டையும், விரதங்களையும் மேற்கொள்ள வேண்டும். இந்த உடம்பிலே உயிர் இணைந்திருப்பதின் நோக்கமே அதுதான். இந்த உடலை இறைவன் எமக்குத் தந்ததே மலமாகிய அழுக்குகளையும், அறியாமையாகிய கொடிய இருளையும் நீக்கி இறைவனுடன் ஒன்றிய பேரின்பப் பெருவாழ்வு வாழ்வதற்கே. இந்த நெறியை மறந்தவர்கள் தம்மைத் தாமே மீளாத் துன்பக் கடலில் ஆழ்த்தி மூழ்கி விடுகின்றார்கள். சைவ சமயம் கூறியுள்ள கருத்துகள், பண்பாடு என்பன எமது வாழ்வின் நெறிமுறைகள், ஆசாரம், அனுஷ்டானம், ஒழுங்கு நடைமுறைகள் என்பவை எம்மால் முடிந்தவரை தளர்ச்சியுறாமல் கடைப்பிடிக்கப்பட வேண்டியவை.

முற்பிறப்பில் இறைவனை வழிபட்டவர் இப்பிறப்பில் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு வாழ்வார்கள்; அல்லாதவர்களோ வாழ்க்கையில் அல்லற்படுவர்.

''இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.'' (குறள் : 270)

என்கிறார் திருவள்ளுவப் பெருமான். பாம்பன் சுவாமிகளும் ''இரை தேடுவதோடு இறையையும் தேடு'' என்று கூறுகிறார். ஆகையால், அரியதான மனிதப் பிறப்பைப் பெற்ற நாம், இப்பிறப்பை நமக்கு வழங்கிய

இறைவனை நினைத்து விரதங்கள் இருந்து வேண்டுதல் அவசியம். விரதங்களைப் பற்றி சிந்திக்கும்போது ஒவ்வொரு விரதமும் பலவிதமான நல்ல பலன்களைத் தரவல்லது. திதி, வார, நட்சத்திர, மாத விரதங்களை அனுஷ்டிப்பதால் எமக்கு சர்வ தோஷங்களும், வினை வழிவந்த பாவங்களும் நிவர்த்தியாகின்றன. நமது மனம் செல்லும் வழிகளான மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற புலன்களை மனதானது அப்பொறி வழி போய்க் கெடாமல் தடுக்கின்ற சக்தி விரதங்களுக்கு இருக்கின் றது. இடையூறாக இருக்கும் எமது மனதைக் கட்டுப் படுத்தி இறைவயப்படுத்துவதற்கும், செய்வதற்கும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கின்ற முத்தி வழிகளில் எம்மை ஈடுபடுத்துவதற்கும் உணவுக் கட்டுப்பாடும் அவசியம்.

அவரவர் உடல் தகைமைக் கேற்ப விரதங்களை மேற்கொள்ளலாம். விழித்திரு, பசித்திரு, தனித்திரு என்பது ஆன்றோர் வாக்கு. உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கும், நோய் அணுகாமல் இருப்பதற்கும் விரதங்கள் துணை செய்கின்றன.

களைந்தெறியும் ஆடையைப் போன்ற இவ்வுடம்பிலே ஏதும் வியாதி ஏற்பட்டால் மருத்துவர் ஆலோசனை பெற்று உணவைக் கட்டுப்படுத்தும் நாம், ஏனோ உடல் நலனைப் பேணுகின்ற விரதங்களை நோற்பதில்லை. இனியாகினும் மக்கள் மனநலன், உடல் நலன் தரும் விரதங்களை நோற்க வேண்டும். அத்தோடு விரதங்களின் சிறப்புகளை யும், காரண காரியங்களையும் அறிந்து தெளிவு பெறல் அவசியம். இதனால் நாம் நோற்கின்ற விரதத்தினால் சிறப்பேற்படும்.

எமது மதத்தில் மட்டுமல்லாது மற்றைய மதங்களிலும் கூட விரதங்கள் நோற்கப்படுகின்றன. அதுவும் எமது விரதங்களை விடக் கடுமையான கட்டுப்பாட்டோடு

ஒன்றி நோற்கப்படுகின்ற விரதங்கள் ஆன்மீக ரீதியாகவும் மக்களை ஒன்றிணைக்கின்றன.

அவ்வகையில் தமிழ்ப் புத்தாண்டு ஆரம்ப மாதமாகிய சித்திரை மாதம் முதல் பங்குனி மாதம் வரையிலான திதி, வார, நட்சத்திர விரதங்களை இறை நாமாவளியுடன் சேர்த்து ஆன்மீக மணம் கமழும் அற்புதப் படைப்பாக திருவாளர் சாம்பசிவம் அகிலேஸ்வரன் அவர்கள் வெளி யிட்டுள்ளார். தமது கடுமையான உழைப்பாலும், ஆராய்ச்சி யாலும், ஆர்வத்தோடும், பொதுநலத்தோடும் இச் சேவையை உவகையுடன் செய்துள்ளார். அகில் என்னும் புனைபெயருடன் உலாவரும் அவர், ஏற்கனவே 'திசை மாறிய தென்றல்' என்ற நூலை வெளிக் கொணர்ந்தார். மேலும் அவர் வெளியிடும் 'நமது விரதங்களும் பலன்களும்' என்ற இந்த ஆன்மீக நூலிலே இருபத்தேழு விதமான விரதங்கள் நோற்கின்ற முறைகள், இறைவ னுக்குப் பிடித்தமான மலர்கள், நிவேதனப் பொருள்கள் பற்றியும், வார, மாத, திதி தாணங்களோடு மேலும் பல பயனுள்ள தகவல்களையும் முயன்று சேர்த்து வழங்கி யுள்ளார். ஆழ்ந்த சிந்தனையும், பரந்த மனமும், எழுத்தாற் றலும் மிக்க அகில் அவர்களுக்குக் கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவராகிய விநாயகப் பெருமான் திரு வருள் பாலிக்க ஐங்கரன் பதம் பணிந்து வாழ்த்துகிறோம்.

இவ்விரத நூல் ஆன்மீக அன்பர்களுக்கு ஒரு பெரும் வரப்பிரசாதம் என்பதில் ஐயமில்லை.

சுபமஸ்து

வேதாகமமணி சிவஸ்ரீ
**நா. விக்கினேஸ்வரக் குருக்கள்**
பிரதம குரு, விம்பிள்டன் பிள்ளையார் கோயில்
இலண்டன்
01.04.2003

■■■

ஸ்ரீ முருகன் துணை

# ஆசியுரை

இறைவன் கருணையோடு அளித்த மனிதப் பிறவியை பெரும் பேறாகக் கருதி இறையுணர்வோடு இயன்ற அளவு தானதர்மங்களைச் செய்து இல்லறக் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றி எல்லோரும் போற்றும் வண்ணம் வாழ்ந்து இறைவனடி சேர்வதே இப்பிறவியின் இலட்சியம்.

உயிர் பற்றி நிற்கும் இவ்வுடலைத் தூய்மையாக வைத்திருந்து உடலும், உள்ளமும் இணைந்து செய்யும் வழிபாடே மிக உயர்ந்தது. பஞ்சபூதங்களால் ஆக்கப்பட்ட சரீரத்தை நோய்கள் தீண்டாதவாறு பாதுகாக்கவும், தன்னை முழுமையாக இறைவனிடம் அர்ப்பணிக்கவும் வேண்டி பல விரத வழிபாட்டு நியமங்களைப் பெரியோர்கள் வகுத்துத் தந்துள்ளார்கள்.

ஒவ்வொரு தெய்வத்திற்குமான தனித்தனியான விரதங்களையும், பொதுவான பல விரதங்களையும் விளக்கமாகத் தந்துதவியுள்ளதோடு விரதங்களை அனுஷ்டித்துப் பயன்பெற்ற ரிஷிகள், தேவர்கள், அரசர்கள், பக்தர்கள் – இவர்களின் வரலாற்றையும் நமக்கு எடுத்துரைத்து நம்மை இறையுணர்வில் திரு. அகில் அவர்கள் ஈடுபடச் செய்துள்ளார்கள்.

பக்தப் பெருமக்கள் அனைவரும் இப்புத்தகத்தைப் பெற்று வாசித்து, விரதங்களை முறையாக மேற்கொண்டு வாழ்வில் சகல நலன்களையும் பெற்றுப் பேரானந்த மடைய வேண்டி எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிகளுடன்

**கயிலை சிவஸ்ரீ இராம நாகநாதசிவம்,**

இலண்டன், ஸ்ரீ முருகன் கோயில்.

# முன்னுரை

விரதம் என்ற சொல் பலவித அர்த்தங்கள் அல்லது விளக்கங்களை உடையது. 1) 'உண்ணாமல் இருந்து செய்யும் வழிபாடு' என்றும், 2) 'நோன்பு', 3) 'ஒன்றைச் செய்து முடிப்பது என்று கொள்ளும் உறுதி என்றெல்லாம் அர்த்தங்கள் அச்சொல்லுக்குக் கூறப்படுகின்றன. பொதுவாக நாம் இறைவனைப் போற்றி, நினைத்துத் துதித்து, மனம், வாக்கு, காயம் போன்ற கரணங்களைக் கட்டுப்படுத்தி ஒருநிலைப்படுத்தும் நிலையினையே விரத நிகழ்வாக ஏற்றுக் கொள்கின்றோம்.

எம்மால் அனுஷ்டிக்கப்படும் விரதங்கள் இகவாழ்வின் நற்சிறப்புக்காக மட்டுமின்றி ஆன்மீக ஈடேற்றத்திற்கும் உகந்தவையாகவே உள்ளன. காரணம், மனிதன் வாழ்வாங்கு வாழும் நல்வாழ்வு ஆன்மீக உணர்வு, ஆன்மீகச் சிந்தனையை வளர்க்கின்றது. ஆகவே, உலக வாழ்வு ஆன்மீக வாழ்வுடன் இணையும்போதே மனித வாழ்வு பூரணத்துவமடைகின்றது. அத்தகைய பூரணத் துவத்தை இறைவனை நினைத்து வணங்கும் விரதம் மூலம் அடையலாம் என்பதை என் அனுபவம் மூலம் நான் உணர்ந்தமையே என்னை இந்நூலை எழுதத் தூண்டியது.

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் முதுமொழியை எண்ணி என்னுள் இருந்த – நான் அறிந்த விரதச் செய்திகளை வெளிக்கொணர முயன்றமையின் வெளிப்பாடே இந்நூல். நூலை நான் ஆக்க எண்ணியிருந்ததை அறிந்த ஈலிங்கு கனகதுர்க்கை அம்மன் ஆலய நிர்வாகக் குழுத் தலைவர் தர்மதீபம் திரு. சொ. கருணைலிங்கம் அவர்கள் என்னைப் பாராட்டி ஊக்கமளித்து அன்போடு வாழ்த்தினார். அவர் ஊட்டிய ஊக்கமே இந்நூலை நான் எழுதி வெளிக்கொணர முதற் காரணமாயிருந்தது என்றால் மிகையாகாது.

எமது விரதங்களிற் பல, நமது விழாக்களுடனும், பண்டிகைகளுடனும் மிகத் தொடர்புடையனவாக

இருப்பதை அவதானிக்கலாம். உதாரணமாக, கார்த்திகை, மார்கழி மாதங்களில் வரும் விரதங்களை இக்கூற்றுக்கு எடுத்துக்காட்டாக குறிப்பிடலாம். கார்த்திகைத் தீபத் திருநாளில் விளக்கேற்று வைபவமும், கார்த்திகை புத்திரனான கார்த்திகேயன் – முருகனை நினைத்து விரதமிருப்பதையும் குறிப்பிடலாம். அவ்வாறே மார்கழி நன்னாளில் பெண்கள் மேற்கொள்ளும் பாவை நோன்பும், சிவனை நினைத்து விரதமிருப்தையும் அறியலாம். இவ்வாறு ஒரு வருடத்திலேயே பல விரதங்களை நாம் அனுஷ்டிக்கின்றோம். இவற்றை மறவாது போற்றி, துதித்து அனுஷ்டிப்பதன் மூலமே பிறவிப்பயனையும், ஆன்மீகச் செல்வத்தையும் நாம் அடையலாம்.

இந்நூலுக்கு ஆசியுரை வழங்கியருளிய, 1) கனக துர்க்கை அம்மன் தேவஸ்தான ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ கனக பாலகுமார சர்மா அவர்களுக்கும், 2) முத்தமிழ்க் குருமணி சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் (சுன்னாகம், இலங்கை) அவர்களுக்கும், 3) சிவஸ்ரீ ச. குமாரசாமி குருக்கள், சித்தங்கேணி (இலங்கை) அவர்களுக்கும், 4) இலண்டன் விம்பிள்டன் பிள்ளையார் கோயிலின் பிரதம குரு வேதாகமமணி சிவஸ்ரீ நா. விக்கினேஸ்வரக் குருக்கள் அவர்களுக்கும், 5) இலண்டன் ஸ்ரீ முருகன் கோயிலின் பிரதம குரு கயிலை சிவஸ்ரீ இராம நாகநாதசிவம் அவர்களுக்கும், தோத்திரப் பாடல்களைச் சரிபார்த்து உறுதிப்படுத்திய திரு. மு. சிவராசா அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கியருளிய கவிஞர் திரு. க. இராஜமனோகரன் அவர்களுக்கும், அணிந்துரை வழங்கிய திரு. நாகர்கோவில் கிருஷ்ணன் அவர் களுக்கும், நூலாக்கப் பணியில் இடையறாது எனக்கு ஊக்கமூட்டிய திருமிகு. பா. சசிகுமார் அவர்களுக்கும், இந்நூலில் சந்தி முதலிய இலக்கணப் பிழைகள் தென்படாவண்ணம் கையெழுத்துப் படியைச்

சரிபார்த்துதவிய பேராசிரியர் அரங்க முருகையன் அவர்களுக்கும், நூலை வெளியிட்ட நர்மதா பதிப்பகத்தாருக்கும், என்னை பல்லாற்றானும் ஊக்கி, உற்றுழி உதவிவரும் என் உடன்பிறப்பன்ன நண்பர்களுக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலில் கண்ட விரதங்களை நாமும் எம்மால் இயன்றளவு அனுஷ்டித்து இறையருள் பெற துர்க்கை அன்னையை வேண்டிப் பணிந்து வணங்குகிறேன்.

Website : poetahil.com
E-mail : poetakil@hotmail.com

பிரியமுடன்,

அகில்.

■■■

## வாழ்த்துரை

அன்பான சைவ உள்ளங்களே, வணக்கம்!

நாம் எந்தச் சமயத்திலே பிறந்தவராக இருந்தாலும் எமக்கு வாழ்வளித்து வருபவர் - எல்லோருக்கும் பொது வானவரான பரம்பொருள். அவனை நாம் அப்பன் சிவனும், அவனுடைய அருட்சக்தியான அம்மை சிவகாமியுமாகக் காண்கின்றோம். அதனாலேயே தென்னாடுடைய சிவனே போற்றி என்று கூறிய மாணிக்கவாசகர் அடுத்த வரியிலேயே எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்றார். இதுவே சைவ சித்தாந்தத்தின் பதி பற்றிய கொள்கை. எவரெவர் எச்சமயத்திலே பிறந்தாலும் அவரவர் அச்சமயம் சொல்லும் வழியிலே நெறிபட வாழ்வதே சைவநீதி. இதனாலேயே சைவத்திலே மதமாற்றம் என்பது இல்லை. அதுமட்டுமல்ல; சைவத்திலே பிறந்தோர் கூடச் சைவ நெறியிலே ஒழுக்கம் பேணுவதற்கென எத்தனையோ நெறிமுறைகளைக் கொண்டிருந்தும், நாம் இப்படித்தான் யாராவது இருக்க வேண்டுமெனக் கட்டளையிடுவது கிடையாது. காரணம், உலகத்திலே பிறந்தவையும், பிறக்காதவையுமான எல்லா உயிர்களுமே சைவநீதிக்கு ஆட்பட்டவை. இதனாலேயே ஒவ்வொருவரும் தமக்கு ஏற்ற அளவிலே நல்வாழ்வு வாழ்வதை ஏற்கும் பண்பு சைவத்திலே என்றும் உண்டு. தமது நிலையை உயர்த்த விரும்புவோர் தாமாக முன்வந்து அதற்குரிய வாழ்வியல் நெறிகளைக் கைக்கொள்ளலாம்.

இந்நூல் ஒவ்வொரு விரதத்திற்கும் உரிய வரலாறு அல்லது புராணம், அதனை நோற்கும் முறை, நோற்பதாலாகும் பயன் என்பவற்றைத் தந்து நிற்கின்றது. இந்த அறிவு எமக்கு மிகவும் தேவையானது. எனவே இந்நூல் ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்க வேண்டிய ஒன்று. இந்நூல் வழி, இயலுமான விரதங்களை நோற்பதே நன்மை தருவதாகும். இந்நூலிலே பலவகையான

விரதங்களையும் பற்றி விளக்கமாக கூறப்பட்டுள்ளது. இவை எல்லாவற்றையும் ஒவ்வொருவரும் நோற்க வேண்டும் என்பது அல்ல. எல்லா விரதங்களையும் எல்லோரும் நோற்க முடியாது. தம்மால் இயன்றவற்றைத் தம் வசதிக்கேற்ற முறையிலே நோற்கலாம். மேலும், இந்நாட்டுச் சூழலுக்கும், காலநிலை வேறுபாடுகளுக்கும் ஏற்பச் சிலவற்றை மாற்றியும் ஆக வேண்டி வரலாம்.

விரதங்கள் அடிப்படையிலே எமது உடலை நோயற்ற நிலையிலே பேணும் வழிகளாகவும், உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும் நெறிகளாயும் அமைவன. விரதங்களை நோற்பதென்பது ஆன்மாவைக் கழுவும் செயலாகும். இறைவன் தூயவடிவினன். முற்றாகத் தூய்மையான உள்ளத்திலேயே இறைவன் நிரந்தரமாகக் குடிகொள்வான். இவ்வாறு குடிகொண்டுவிட்டால் மரணம் பொய்யாகிவிடும்.

''கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு'' (குறள் : 269)

என்கிறது தமிழ் மறை. நாம் ஒவ்வொருவரும் எமக்குத் தேவையானவற்றையும், பொருத்தமானவற்றையும், இயலக்கூடியவையுமான விரதங்களைத் தெரிவுசெய்து அவற்றை முறையாக நோற்போமாக. விரதங்கள் எம்மைத் தூய்மைப்படுத்த மட்டுமே. ஆண்டவனை விரதங்களின் மூலமாகவோ, வேறு எவற்றின் மூலமாகவோ ஏமாற்ற முடியாது என்பது என்றும் எம் நினைவிலே நிற்க வேண்டும்.

எனவே நாம் தெரிவுசெய்த விரதங்களை முறைப்படி நோற்று, நோய் நொடியற்ற உறுதியான உடலையும், அவ்வுடலிலே வாழும் உயிருக்கான தூய்மையான உள்ளத்தையும், அவ்வுள்ளத்திலே வாழும் இறைவனை யும் எய்துவோமாக. இதுவே யாம் மனிதராகப் பிறந்ததன்

பயன். அப்பயனை இனிதே எய்த எல்லாம் வல்ல எம்பெருமாட்டியான அருள்மிகு அன்னை கனக துர்க்கையின் அருள் என்றும் துணைநிற்க அவளுடைய அரவிந்தத் தாள்களிலே என் மனமலர் பதிக்கின்றேன். இந்நூலை வெளிக்கொணரும் அன்பர் அகிலுக்கு எமது வாழ்த்துக்கள்.

''மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்''

நன்றி. வணக்கம்.

கவிஞர் க. இராஜமனோகரன்
B.Sc. Eng.; C.Eng.; M.I.E. Aust.;
M.Inst.Pet.(Lond.); M.ASME(USA)

Reading,
Berkshire, U.K.
25.04.2003



## ஆன்மீகச் செல்வர், பன்னூல் ஆசிரியர்
## திரு. நாகர்கோவில் கிருஷ்ணன் அவர்களின்

# அணிந்துரை

செந்தமிழ்ச் செல்வர் திரு. அகில் அவர்கள் இயற்றியுள்ள 'நமது விரதங்களும் பலன்களும்' எனும் இந்நூல் அவரது எழுத்து ஆற்றலுக்கும், தான் வாழும் சமூகத்தின்பால் கொண்டிருக்கும் அக்கறைக்கும் ஒரு சோற்றுப் பதமாக அமைந்துள்ளது.

பருவம்தோறும் பண்டிகைகளை அதிகம் கொண்டாடும் இந்துக்களுக்கு இந்நூல் கிடைத்தற்கரிய வழிகாட்டியாக விளங்குகிறது. பண்டிகைகளைப் பற்றிய சுவையான பல புராண நிகழ்ச்சிகளை தொன்மையான நூல்களை படித்து ஆதாரங்களைத் திரட்டி சொல்லியுள்ள ஆசிரியரின் திறமையை எத்தனை போற்றினாலும் தகும்.

அத்தோடு அந்தந்த பண்டிகைகளுக்குரிய வழிபாட்டு முறைகள், போற்றி, தோத்திரம், நாமாவளி போன்ற பயனுள்ள பூஜா விதான முறைகளும் சொல்லப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பண்டிகையையும் கொண்டாட வேண்டிய தாத்பர்யம், எதற்காக கொண்டாட வேண்டும், கொண்டாட அனுஷ்டிக்க வேண்டிய விரத முறைகள் பற்றிய அத்தனை சிறப்பான விஷயங்களையும் ஆழமாக எல்லோரும் புரிந்துகொள்ளும் வண்ணம் அவருக்கே உரிய நடையில் பக்திச் சுவையுடன் சொல்லியுள்ளார்.

இச்சிறு வயதிலேயே நல்ல பக்தி விஷய ஞானம் பெற்றுள்ள ஆசிரியர் திரு. அகில் அவர்களின் ஆன்மீகப் பயணம் சிறக்க இனிய வாழ்த்துக்கள்!

- நாகர்கோவில் கிருஷ்ணன்

■■■



# நமது விரதங்களும் பலன்களும்

## சித்திரை மாதம்

### சித்திரா பௌர்ணமி

சித்திரை மாதம் என்றால் தமிழ்ப் புத்தாண்டு மட்டுமல்லாது சித்திரைப் பௌர்ணமி விரதமும் எமக்கு ஞாபகத்துக்கு வரும். இலங்கையில் உள்ள ஆலயங் களிலே சித்திரபுத்திரனார் கதை படித்து, கஞ்சியும் சமைத்துக் கொடுப்பார்கள். இதனால் அவர்கள் இவ்விரதத்தை 'சித்திரைக் கஞ்சி விரதம்' என்று அழைப்பார்கள். பெண்கள், ஆண்கள் ஆகிய இரு பாலாரும் இவ்விரதத்தை அனுஷ்டிக்கலாம். தெரிந்தோ தெரியாமலோ நாம் செய்த பாவங்கள் இவ்விரதத்தை அனுஷ்டிப்பதால் அகலும் என்பார்கள்.

#### கதை

உலக உயிர்களின் பாவ புண்ணியக் கணக்கை எழுத ஒருவரை நியமிக்க வேண்டும் என்று எண்ணிய சிவபெருமான், பொற்பலகையில் ஓர் அழகான உருவத்தை வரைந்தார். சிவன் வரைந்த உருவம் உயிர்பெற்றது. சித்திரத்தில் இருந்து வந்ததாற் சித்திர புத்திரன் எனப் பெயர் வழங்கலாயிற்று.

ஒரு நாள் சிவன், சித்திரபுத்திரனைக் கூப்பிட்டு, ''சித்திரபுத்திரா, உன்னை நான் உருவாக்கியது மூவுலகத்திலும் வாழ்பவர்களுடைய பாவ புண்ணியங் களை எழுதுவதற்காக. ஆனால், தேவலோக அதிபதி யான இந்திரனும், அவனுடைய மனைவியும் பிள்ளை வரம் வேண்டி என்னை நோக்கிக் கடும் தவம் இருக்கின்றார்கள்.

''இந்திரனுடைய மாளிகையிற் காமதேனு*, காராம் பசு உருவத்தில் வாழ்ந்து வருகின்றது. நீ அதனுடைய வயிற்றில் மூன்றே முக்கால் நாழிகை மட்டும் தங்கிக் குழந்தையாகப் பிறந்து வளர்ந்துவா. பெரியவன் ஆனதும் கைலாயத்துக்கு வந்து உயிர்களின் பாவ புண்ணியங்களை எழுதி வா'' என்றார். சிவபெருமான் சொன்னதற்கு அமைய இந்திரன் மாளிகையில் வளர்ந்து வருகின்ற காராம் பசு வயிற்றிலே மூன்றே முக்கால் நாழிகை தங்கிப் பிறந்த சித்திரபுத்திரன் கூடவே கைகளில் ஏடு, எழுத்தாணியுடன் பிறந்தார். தேவேந்திரனும் அவன் மனைவி இந்திராணியும் பிள்ளையைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

பெரியவன் ஆக வளர்ந்த சித்திரபுத்திரனுக்குப் பழைய பிறப்பு ஞாபகத்துக்கு வரவே, தனது படைப்புக்கான காரணத்தைத் தேவேந்திரனுக்கும், இந்திராணிக்கும் சொல்லிவிட்டுக் கைலாயத்துக்குச் சென்று சிவனை வணங்கி நின்றார். ''சித்திரபுத்திரா! இன்று முதல் நீ உலக உயிர்களின் பாவ புண்ணியக் கணக்கை எழுதிவா!'' என்று சிவன் சொல்லி, அவரை வாழ்த்தினார். அன்றிலிருந்து சித்திரபுத்திரனார் தனது கடமையைச் செய்து வருகின்றார். இவரே யமனின்

---

* காமதேனு - மெய்யடியார் வணங்கி நினைத்தவற்றைக் கொடுக்கும் தெய்வீகப் பசு.

கணக்குப்பிள்ளையாவார். இப்படியாக ஒரு கதை அவரைப் பற்றி வழங்குவதோடு, வேறு இரண்டு கதைகள் வேறுவிதமாகச் சொல்கின்றன. பிரம்மாவின் உடலில் இருந்து தோன்றியவர் என்று ஒரு கதையும், சூரிய பகவானுக்கும், நிலா தேவிக்கும் பிறந்தவர்தான் சித்திரபுத்திரனார் என்ற ஆதித்திய புராணக் கதையும் உண்டு.

## விரத முறை

சித்திரா பௌர்ணமியன்று காலையில் எழுந்து நீராடிப் பூஜை அறையிற் கோலம் இட்டு, கும்பம் வைத்து வணங்க வேண்டும். சித்திரபுத்திரர் அக்கும்பத்தில் எழுந்தருளுவதாக நம்பிக்கை. சித்திரபுத்திரரின் படம் வைத்திருப்பவர்கள் படத்தை வைத்து வணங்கலாம்.

சித்திரபுத்திரர் காராம்பசுவின் வயிற்றில் இருந்து பிறந்தார் என்பதால், அன்றைய தினம் பசுவில் இருந்து கிடைக்கின்ற பால், தயிர், நெய் எதையும் பயன்படுத்தக் கூடாது என்பர். நைவேத்தியத்தில் உப்பு சேர்க்கக் கூடாது. அன்னம், இளநீர், கொழுக்கட்டை என்பனவற்றைப் படைத்து வழிபடலாம். நம் வீட்டில் உள்ள பசுவைக் குளிப்பாட்டி, மஞ்சள் தடவி, குங்குமம் வைத்து, ஆரத்தி எடுக்க வேண்டும். அத்தோடு பசுவுக்குப் பூஜையில் வைத்த நைவேத்தியத்தைக் கொடுக்கலாம். இவ்விரதம் சனி, ஞாயிறு, வியாழக் கிழமை வருமாயின் சிறப்பானது என்பர். ஆலயத்தில் அல்லது வீட்டிற் சித்திரபுத்திரருடைய கதையை ஒருவர் வாசிக்க, மற்றவர்கள் கேட்பது நல்லது.

சித்திரபுத்திரருக்குக் காஞ்சிபுரத்திலே தனிக் கோயில் உண்டு. வலது கையில் எழுத்தாணியையும், இடது

கையில் பனை ஓலை ஏட்டையும் கொண்டு மூலவர் உள்ளார். சித்திரை மாதப் பௌர்ணமியன்று இவருக்குச் சிறப்புப் பூஜை நடைபெற்று வருகின்றது.

## விரதத்தின் பலன்

தோஷ நிவர்த்தி, மாங்கல்ய பலம், நீண்ட ஆயுள் போன்ற பலன்கள் கிடைக்கும்.



## ஸ்ரீ இராம நவமி

ஸ்ரீ இராமர் சித்திரை மாதம், சுக்ல பட்ச (வளர்பிறை) நவமித் திதியிற் பிறந்தார். அந்த நாளையே நாம் ஸ்ரீ இராம நவமி விரதமாகக் கொண்டாடுகின்றோம். இவ்விரதம் இரண்டு விதமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது. முதல் வகை, சித்திரை மாதம் சுக்ல பக்ஷம் பிரதமைத் திதியில் இருந்து நவமித் திதி வரையும் உள்ள ஒன்பது நாளுமாகும். அதற்கு 'கர்ப்போஸ்தவம்' என்று பெயர். இரண்டாவது முறை, நவமி திதியில் ஆரம்பித்து அடுத்துவரும் ஒன்பது நாளும் அனுஷ்டிப்பது. இதற்கு 'ஜன்மோதீஸவம்' என்று பெயர்.

எந்தக் காரியத்தையும் அஷ்டமி, நவமித் திதிகளில் செய்யாமல் மக்கள் தவிர்த்து விடுவர். இதனால்

வேதனையடைந்த அஷ்டமி, நவமி திதிகள் ஸ்ரீ கிருஷ்ணரிடம் முறையிட்டன. ''நாங்கள் மட்டும் கெட்ட திதிகளாக ஒதுக்கி வைக்கப்படுவது ஏன்?'' என்று கேட்டன. அதற்கு பகவான், ''மக்கள் உங்களையும் போற்றித் துதிக்கும் நாள் வரும்'' என்று உறுதி அளித்தார். அதன்படி அஷ்டமித் திதியிலே ஸ்ரீ கிருஷ்ணர் வாசுதேவர் - தேவகி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். இராமர் நவமி திதியில், தசரதர் – கௌசலை தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார்.

## விளக்கக் கதை

இலங்கை வேந்தனான இராவணன், தேவர்களையும், முனிவர்களையும் இதர மனிதர்களையும் கொடுமைப் படுத்தி வந்தான். அவனை அழிப்பதற்கு எண்ணிய மஹாவிஷ்ணு, அயோத்தியை ஆண்டு வந்த தசரத மன்னனுக்கு மகனாகப் பிறந்தார். உரிய நேரம் வந்தபோது இராவணனையும் அவனது கூட்டத்தையும் அழித்தார். அதர்மம் அழிக்கப்பட்டு தருமம் நிலை நாட்டப்பட்டது.

## விரத முறை

விரதத்துக்கு முதல் நாள், வீட்டைத் துப்புரவு செய்ய வேண்டும். விரத ஆரம்ப நாளன்று தொடக்கம் ஒரு வேளை மட்டும் உண்டு, இராம நாமத்தை ஜெபித்துக் கொண்டே இருக்க வேண்டும். ஒன்பது நாளும் சர்க்கரைப் பொங்கல், பாயசம் என்பன நைவேத்தியம் பண்ணுவதோடு, இராமருக்குத் துளசி மாலையும், அனுமனுக்கு வடைமாலையும் சாத்தலாம். அல்லது ஒன்பது நாளும் சாத்த முடியாதவர்கள் நவமியன்றாவது சாத்துவது நல்லது. நவமித் திதிக்கு மறுநாள் பாரணைச் செய்ய வேண்டும்.

இவ்விரத நாட்களில் மட்டும் அல்லாது எப்பொழுதும் இராம ஜாதகத்தைப் படமாகக் காகிதத்தில் வரைந்து வைத்தோ, அல்லது செப்புத் தகட்டில் வரைந்து வைத்தோ வழிபடுவது சிறந்தது. காரணம், இராம ருடைய ஜாதகத்தின்படி சூரியன் – மேஷத்திலும், செவ்வாய் – மகரத்திலும், குரு – கடகத்திலும், சுக்கிரன் – மீனத்திலும், சனி – துலாமிலும் என ஐந்து முக்கிய கிரகங்களும் உச்சஸ்தானத்தில் இருக்கின்ற இராம பிரானுடைய ஜாதகத்தைப் பூஜை அறையில் வைத்து வழிபடுவது சிறப்புடையது.

## ஸ்ரீ இராமபிரான் ஜாதகம்

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் | சூரியன் புதன் | | கேது |
| | | | சந்திரன் / குரு லக்கினம் |
| செவ்வாய் | | | |
| ராகு | | சனி | |

### பலன்

நினைத்த காரியம் கைக்கூடும். செல்வம், புகழ் என எண்ணற்ற பலன்கள் கிடைக்கும்.

# வைகாசி மாதம்

## வைகாசி விசாக விரதம்

விசாக நட்சத்திரம் ஒவ்வொரு மாதமும் வந்தாலும், வைகாசி மாத விசாக நாள் சிறப்பாகப் பேசப்படுவதற்குக் காரணம், அன்றுதான் முருகப் பெருமான் அவதரித்த நாள். அவருடைய ஜென்ம நட்சத்திரம் விசாகம். இதனாலேயே முருகனை விசாகன் என்றும் அழைக்கிறார்கள்.



### கதை

சூரன் என்ற அசுரன் உள்ளிட்ட அசுரர் கூட்டத்தினர், தேவர்களையும் இதர மனிதர்களையும் கொடுமைப் படுத்தினார்கள். தேவர்கள் சிவபெருமானிடம் போய் முறையிட்டார்கள். அசுரர்களை அழித்துத் தேவர்களைக் காக்க சிவபெருமான் தம் நெற்றிக் கண்ணைத் திறந்தார். நெற்றிக்கண்ணில் இருந்து ஆறு பொறிகள் தோன்றின. அக்கினி பகவான் அந்தப் பொறிகளைச் சரவணப் பொய்கையில் விட்டார். அப்பொறிகள் ஆறு குழந்தைகள் ஆகின. உமையம்மை அந்த ஆறு குழந்தைகளையும்

ஒன்றாகத் தூக்கி ஆறு திருமுகங்கள் உடைய ஒரு குழந்தையாக உருவாக்கிக் கொடுத்தாள். அந்த நாளே வைகாசி விசாக நட்சத்திர நாள்.

வைகாசி மாத விசாகம் மிகவும் சிறப்பானது. அந்த நட்சத்திரத்திலே பல ஞானியர்கள் பிறந்திருக்கின் றார்கள். புத்தபெருமான் பிறந்தது, ஞானம் பெற்றது, பரிநிர்வாண நிலையை அடைந்தது யாவுமே வைகாசி விசாக நட்சத்திரத்திலேயே ஆகும்.

முருகன் பிறந்த நாளாகிய வைகாசி விசாகத்தன்று உலகெங்கும் இருக்கும் முருகன் கோயில்களில் பெருவிழாக்கள் நடக்கும். திருச்செந்தூர், சுவாமிமலை, மற்றும் பழனியிலும், இலங்கையிலே கதிர்காமம், செல்வச்சன்னிதி, நல்லூர் ஆகிய முருகன் ஆலயங்களி லும் சிறப்பாக விழா நடக்கும். சில பக்தர்கள் அன்றைய தினம் பாற்காவடி எடுப்பார்கள்.

## விரத முறை

அதிகாலையிலே துயில் நீங்கி எழுந்து, நீராடி, வீட்டைச் சுத்தம் செய்து, பகற்பொழுதில் உண்ணாமல் இருக்கலாம். அல்லது நீர் ஆகாரத்துடன் இருக்கலாம். இதனை அவரவர் உடல்நிலைக்கு ஏற்பச் செய்யலாம். மாலையில் ஆலயத்துக்குச் சென்று முருகனுக்கு நடக்கும் விசேட பூஜையிலே கலந்து கொள்ளலாம். அன்றைய தினம் முழுவதும் முருகன் பாடல்களைப் பாடுவது நன்மை தரும்.

## பலன்

இவ்விரதத்தைக் கடைபிடிப்பவர்களுக்கு வாழ்விலே சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும். மனதுக்கு நிம்மதி கிடைக்கும். காரியத்தில் வெற்றி கிடைக்கும்.

## முருகப் பெருமான் நூற்றெட்டு போற்றி

### திருச்சிற்றம்பலம்

அருவாம் உருவாம் முருகா போற்றி
திருவார்மறையின் செம்பொருள் போற்றி
ஆறுமுகத்தெம் அரசே போற்றி
மாறுகொள் சூரரை வதைத்தாய் போற்றி
இருள்கெடுத் தின்பருள் எந்தாய் போற்றி 5

உளருள்பூங் கடம்பணி உரவோய் போற்றி
ஈசற் கினிய சேயே போற்றி
மாசறு திருவடி மலரோய் போற்றி
உறுநர்த் தாங்கும் உறவோய் போற்றி
செறுநர்த் தேய்த்த செவ்வேள் போற்றி 10

ஊனில் ஆவியாய் உயிர்ப்போய் போற்றி
கானில் வள்ளியின் கணவ போற்றி
எழில்கொள் இன்ப வாரிதி போற்றி
அழிவிலாக் கந்தனாம் அண்ணல் போற்றி
ஏறு மயிலூர்ந் தேகுவாய் போற்றி 15

கூறுமன் பர்க்குக் குழைவாய் போற்றி
ஐயனாய் உலகை ஆக்குவாய் போற்றி
செய்யமே னியனே தேவே போற்றி
ஒருவனாய் உலகெங்கும் ஒளிர்வாய் போற்றி
பருவம் முதிராப் பண்பு போற்றி 20

ஓவற இமைக்கும் ஒளியே போற்றி
மாமுதல் தடிந்த மறவ போற்றி
ஔவியல் அறுத்தோர்க் கருள்வோய் போற்றி
தெய்வம் எலாம்தொழும் செய்யாய் போற்றி
அஃகுதல் இல்லா அறிவே போற்றி 25

வெஃகுதல் அற்ற அறிவே போற்றி
கந்தா மணமார் கடம்பா போற்றி
நந்தா விளக்கே நாயகா போற்றி
காப்பாய் படைப்பாய் கழிப்பாய் போற்றி
மூப்பீ றற்ற முதல்வா போற்றி

கிள்ளை மொழியுமை பிள்ளாய் போற்றி
கள்ளப் புலனைக் களைவாய் போற்றி
கீழுறும் அடியர் கிழவோய் போற்றி
ஏழுல குந்தொழும் இறைவா போற்றி
குன்றும் குழைதோட் குமர போற்றி

என்றும் இளைய ஏறே போற்றி
கூப்புகைத் தேவர் கோவே போற்றி
பாம்பணி சிவனார் பாலக போற்றி
கெண்டைக் கண்ணியர் கேள்வ போற்றி
அண்டினர்க் கருளும் அங்கண போற்றி

கேடில் முருகனாய்க் கிளர்ந்தாய் போற்றி
வீடில் வீடருள் விமல போற்றி
கைவேல் கொண்ட காவல போற்றி
நைவேற் கருள்வாய் நாயக போற்றி
கொடைக்கடன் கொண்ட குழக போற்றி

படைக்கடல் தலைவ பரனே போற்றி
கோதில் அமிழ்தே குருமணி போற்றி
போதில் அமர்ந்த பொன்னே போற்றி
சிவபிரான் கண்வரு சேயே போற்றி
நவசர வணத்தில் நகர்ந்தாய் போற்றி

அறுவுறு அமைந்தே ஆடினாய் போற்றி
அறுமீன் பாலுண் அமர போற்றி

உருவுமை சேர்க்க உற்றாய் போற்றி
பெருமை பிறங்கு பெரியோய் போற்றி
நான்முக னைச்சிறை நாட்டினாய் போற்றி 55

மான்மகள் வள்ளியை மணந்தாய் போற்றி
செங்கண் கடாவைச் செலுத்தினாய் போற்றி
அங்கண் குறிஞ்சிக் கரசே போற்றி
இறைவனுக் கரும்பொருள் இசைத்தாய் போற்றி
மறையிடைப் பொருளாய் வளர்ந்தாய் போற்றி 60

பரங்குன் றமர்ந்த பரம்ப போற்றி
திருச்செந் தில்வளர் சேவக போற்றி
ஆவி னன்குடி ஆண்டாய் போற்றி
மேவிஏ ரகம்வாழ் மிக்கவ போற்றி
குன்றுதோ றாடும் குழந்தாய் போற்றி 65

துன்று பழமுதிர் சோலையாய் போற்றி
திசைமுகம் விளங்கும் செம்முக போற்றி
இசைபெரு வேள்வி இன்முக போற்றி
செங்களம் ஓர்க்கும் திருமுக போற்றி
மங்கல மான வானவ போற்றி 70

வள்ளிபால் நகைகொள் மாமுக போற்றி
திங்களின் ஒளிரும் சீர்முக போற்றி
ஆர்வலர் ஏத்த அருள்முக போற்றி
சீர்வளர் அழகின் செல்வா போற்றி
மணிமுடி புனையா றணிமுடி போற்றி 75

துணையடி தொழுவார்க் கணைவாய் போற்றி
செவியீ ராறுடைச் செம்மால் போற்றி
கவித்தொடை புனைதோட் கந்தா போற்றி

பன்னிரு கண்ணுடைப் பண்ணவ போற்றி
என்னிரு கண்ணில் இலகுவோய் போற்றி

பொருவில் ஒருவனாம் புலவ போற்றி
அருண கிரிக்கருள் அமல போற்றி
நக்கீ ரற்கருள் நாதா போற்றி
தங்கசங் கத்தமிழ்த் தந்தாய் போற்றி
குமர குருபரற் கருளினை போற்றி

அமரர் அஞர்களை அழிப்போய் போற்றி
பந்த பாசங்களைப் பறிப்போய் போற்றி
கந்த புரிவாழ் வுகந்தோய் போற்றி
தெய்வானை யம்மையைச் சேர்ந்தோய் போற்றி
பொய்யிலா மனத்துட் புகுவோய் போற்றி

கோழி வெல்கொடிக் கோவே போற்றி
ஊழிதோ றூழி உள்ளாய் போற்றி
செய்யாய் சிவந்த ஆடையாய் போற்றி
மெய்யெலாம் வெண்ணீ றணிவோய் போற்றி
மேவலர் மடங்கலாம் விசாக போற்றி

மூவர்கள் போற்றும் முத்த போற்றி
தேவர்கள் சிறைமீள் சீர்வலாய் போற்றி
சேவலும் மயிலும் சேர்த்தோய் போற்றி
போர்மிகு பொருந புரவல போற்றி
ஏர்மிகு இளஞ்சேய் எம்மிறை போற்றி

தாரகற் கொன்ற தாழ்விலாய் போற்றி
பாரகம் அடங்கலும் பரவுவோய் போற்றி
தமிழ்மொழி இன்பில் தழைப்பாய் போற்றி
அமிழ்திற் குழைந்த அழகா போற்றி
கல்வியும் செல்வமும் கனித்தருள் போற்றி

பல்வகை வளனும் பணித்தருள் போற்றி
இன்பார் இளைய ஏந்தால் போற்றி
எம்பால் அருள்புரி என்றும் போற்றியே.

திருச்சிற்றம்பலம்

## ஆனி மாதம்



### ஆனி உத்தரம்

ஆனி மாதம் என்றாலே இந்துக்களுக்கு ஆனி உத்தர விரதம் ஞாபகத்துக்கு வரும். சிதம்பர நடராசப் பெருமானுக்கு ஒரு வருடத்தில் ஆறு அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. அவற்றில் ஆனி உத்தர நாளில் நடக்கும் அபிஷேகமும் ஒன்று. மனிதர்களுக்கு ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஒரு நாள். எமக்கு ஒரு நாளிலே வைகறை, காலை, உச்சி, மாலை, இரவு, அர்த்த ஜாமம் ஆகிய ஆறு பொழுதுகள் உண்டு.

இந்த வகையில் தேவர்களின் வைகறைக்குச் சமமானது மார்கழி மாத ஆருத்திரா தரிசனத்தன்று நடைபெறும் அபிஷேகமாகும். மாசி மாதப் பூர்வ பட்சச் சதுர்த்தசி திதியில் வரும் அபிஷேகம் காலை அபிஷேக மாகும். சித்திரை மாதத் திருவோண நட்சத்திரத்தில் வரும் அபிஷேகம் உச்சிக்கால அபிஷேகமாகவும், ஆனி

மாத உத்தர நட்சத்திரத்தில் வரும் அபிஷேகம் மாலைக்கால அபிஷேகமாகவும், ஆவணி மாதப் பூர்வ பட்சச் சதுர்த்தசி திதியில் வரும் அபிஷேகம் இரவு அபிஷேகமாகவும், புரட்டாசி மாதப் பூர்வ பட்சச் சதுர்த்தசி திதியில் வரும் அபிஷேகம் அர்த்த ஜாம அபிஷேகமாகவும் அமைந்துள்ளன.

சிதம்பரத்திலே ஆனி உத்தர விழா மிகவும் சிறப்பாக நடந்து வருவதைப் போலவே இலங்கையிலே திருக்கேதீஸ்வரம், ஈழத்துச் சிதம்பரம், திருக்கோணேஸ் வரம் ஆகிய ஆலயங்களில் மட்டுமல்லாது ஏனைய ஆலயங்களிலும் ஆனி உத்தர விழா மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இந்த உன்னத நாளில் விரதம் இருந்து நடராஜப் பெருமான், சிவகாமசௌந்தரியின் அருளைப் பெறு வோமாக.

## சிவபெருமான் நூற்றெட்டு போற்றி

### திருச்சிற்றம்பலம்

கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லும்கதியே போற்றி
அற்றவர்கட் காரமுதம் ஆனாய் போற்றி
அல்லல் அறுத் தடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவர் ஒப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரம்எரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

வங்கமலி கடல் நஞ்சம் உண்டாய் போற்றி
மதயானை ஈருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி

கொல் புலித்தோல் ஆடையாக் குழகா போற்றி
அங்கணனே அமரர்கள் தம் இறைவா போற்றி
ஆலமர நீழல் அறம் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

மலையான் மடந்தை மணாளா போற்றி
மழவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி
நிலையாக என்நெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றிமேல் ஒற்றைக்கண் உடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைவேல் ஏந்தி போற்றி
ஏழ்கடலும் ஏழ்பொழிலும் ஆனாய் போற்றி
சிலையாலன்று எயிலெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

பொன்னியலும் மேனியனே போற்றி போற்றி
பூதப்படையுடையாய் போற்றி போற்றி
மன்னியசீர் மறைநான்கும் ஆனாய் போற்றி
மறிஏந்து கையானே போற்றி போற்றி
உன்னுமவர்க் குண்மையனே போற்றி போற்றி
உலகுக்கு ஒருவனே போற்றி போற்றி
சென்னி மிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனே நின்பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதியங் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருளில் ஆடல் உகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதீ போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலும் காணா
அனல் உருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
வான் பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற்றி
குரை கழலால் கூற்றுதைத்த கோவே போற்றி
நம்புமவர்க்கு அரும்பொருளே போற்றி போற்றி
நால் வேதம் ஆறங்கம் ஆனாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

உள்ளமாய் உள்ளத்தே நின்றாய் போற்றி
உகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர்கோன் தோள்துணித்த மைந்தா போற்றி
வெள்ளை ஏறேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி
தெள்ளுநீர்க் கங்கை சடையாய் போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்கும் தேவே போற்றி
திருமாலுக்கு ஆழி அளித்தாய் போற்றி
சாவாமே காத்தென்னை ஆண்டாய் போற்றி

சங்கொத்த நீற்றெம் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

பிரமன்தன் சிரம்அரிந்தாய் பெரியோய் போற்றி
பெண்ணுருவோடு ஆணுருவாய் நின்றாய் போற்றி
கரம்நான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க்கு ஆற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க்கு அரசே போற்றி
அன்றரக்கன் ஐந்நான்கு தோளும் தாளும்
சிரம்நெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

*நினைவிற்கு : வடமொழியில் செய்யப்படும் அஷ்ட தோத்திரம் என்னும் 108 அருச்சனை போலவே தமிழில் நம்சமயாசாரியர் அருளிய இதனை அன்பர்கள் மனம் உருக ஓதிச் சிவபிரான் திருக்கோயில்களில் திருமூலட் டான நாதருக்கு அருச்சனை செய்விப்பதுச் சிறப்பாகும். இப்பதிகம் நூற்றெட்டுப் போற்றிகளை உடையதாக இருப்பது கருதத்தக்கது.*

## ஆடி மாதம்

### ஆடி அமாவாசை விரதம்

*மாதம் தோறும் வரும் அமாவாசை நாள் இறந்த நமது முன்னோர்களை நினைத்து விரதம் அனுஷ்டிக்க ஏற்றதாகும். இவற்றிலே தை மாதம், ஆடி மாதம், புரட்டாசி மாதங்களில் வரும் அமாவாசை ஆகிய மூன்றும் விசேஷமானவை. இவற்றில் மிகவும் விசேஷ மானது ஆடி அமாவாசை விரதம் ஆகும். இதற்குக்*

காரணம், ஆடி மாதத்திலே சந்திரன் உச்சம் பெற்ற கடக இராசியிலே சூரியன் சஞ்சரிக்கின்றமையாகும். சூரியன் சிவ அம்சமாகும். அதைப் போலே சந்திரன் சக்தியின் அம்சமாகும். இவ்விரண்டு அம்சங்களும் ஒன்று சேர்வதே ஆடி அமாவாசை விரதத்தின் விசேஷத்துக்கான காரணம் ஆகும்.

இவ்விரதம் இறந்த நமது முன்னோர்களை வேண்டி வணங்கும் விரதம் எனினும், இறந்த தந்தைக்காகப் பிள்ளைகள் அனுஷ்டிக்கும் விரதம் என்று கூறுவர்.

## விரத முறை

காலையில் எழுந்து ஆற்றிலோ, குளத்திலோ நீராடிவிட்டுக் கரையோரத்தில் இருக்கும் அந்தணர்கள் மூலம் தர்ப்பணம் செய்ய வேண்டும். ஆற்றிலோ, குளத்திலோ நீராட முடியாதவர்கள் வீட்டில் நீராடி விட்டு அருகில் உள்ள ஆலயத்துக்குச் சென்று அங்குள்ள அந்தணர்கள் மூலம் தர்ப்பணம் செய்து கொள்ளலாம். தர்ப்பணம் செய்வதற்கு இந்தியாவில் காசியும், இலங்கையில் கீரி மலைக் கடற்கரையும், மாமாங்கப் பிள்ளையார் கோயிலும் விசேஷமான இடங்கள் ஆகும்.

வீட்டில் உள்ளவர்கள் சுத்தமாகக் குளித்துவிட்டுச் சமையல் செய்வார்கள். யார் யாரை வணங்க வேண்டுமோ அவர்களை நினைத்தபடி இலைகள் போட்டு உணவை அதில் படைத்து தூபதீபம் காட்டி, பின்பு இலையில் இருந்து எல்லா பதார்த்தங்களிலும் சிறிது சிறிது எடுத்துத், தனியாக ஓர் இலையில் இட்டு, காகம் உண்ணக்கூடியதான உயரமான இடத்தில் வைப்பார்கள். அவ்வுணவைக் காகங்கள் உண்ணத் தொடங்கிய பின் விரதம் இருப்பவர்களும், வீட்டில் உள்ளவர்களும் உணவு உண்பார்கள்.

## பலன்

இப்படியாக விரதத்தை அனுஷ்டித்தால் இறந்தவர்களின் அருள் கிடைக்கும் என்பார்கள்.

## வரலக்ஷ்மி விரதம்



வரலக்ஷ்மி விரதம், திருமணமான பெண்களும், கன்னிப் பெண்களும் கடைப்பிடிக்கின்ற விரதம் ஆகும். ஆவணி மாதம் பௌர்ணமிக்கு முன்பு வரும் வெள்ளிக் கிழமையில் இதை அனுஷ்டிக்க வேண்டும். இத்தினத்தில்தான் மகாலக்ஷ்மி சாயங்காலத்தில் பாற்கடலில் தோன்றினாள் என்றும், மகாலக்ஷ்மியே சாருமதி என்ற பெண்ணின் கனவில் தோன்றி இவ்விரதத்தை எப்படி அனுஷ்டிப்பது என்பதையும், அனுஷ்டிப்பதால் கிடைக்கும் பலனையும் கூறினாள் என்றும், பின்னர் சாருமதி இவ்விரதம் கடைப்பிடிக்கின்ற முறையை பலருக்கும் சொல்லிக் கொடுத்தாள் என்றும், இந்த விரதம் ஆந்திராவிலிருந்து காலப்போக்கில் தமிழகத்துக்கு வந்தது என்றும் சொல்லப்படுகின்றது.

## விரத முறை

விரதத்துக்கு முதல் நாள் வீட்டைக் கழுவி, மஞ்சள் தண்ணீர் தெளித்துச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

வீட்டுப் பூஜை அறைக்குள் ஓர் இடத்தில் சுத்தமான பலகையை வைத்து, அதற்கு மேலே கோலம் போட வேண்டும். கோலத்திற்கு நடுவே ஒரு தட்டை வைத்து, அதில் நெல்லைப் பரப்பி வைக்க வேண்டும். அதன் மீது நிறைகுடத்தை வைத்து, குடத்துக்குப் பட்டுப் பாவாடை கட்டி, நகைகள் போட்டு அலங்காரம் செய்ய வேண்டும். அப்படியாக அமைந்த கும்பத்துக்கு மஞ்சள், குங்குமப் பொட்டு வைத்து, பூ வைப்பதோடு அக்கும்பத்துக்கு முன்னால் தேங்காய், பழம், கல்கண்டு, பலகாரங்கள், மலர்கள் வைக்கப்பட வேண்டும். அவற்றோடு மகாலக்ஷ்மியின் படத்தை வைப்பது நல்லது.

கட்ட வேண்டிய நோன்புக் கயிற்றைக் கும்பத்தோடு வைத்து, ''என் வீட்டுக்கு வந்திருக்கும் வரலக்ஷ்மியே! என்றைக்கும் நீங்காமல் வரம் கொடு தாயே!'' என்று வேண்டி, நெய் விளக்கு ஏற்றி, வரலக்ஷ்மி ஸ்தோத்தி ரங்களைச் சொல்லித் தூப தீப ஆராதனை பண்ணிக் கும்பிட வேண்டும். பூஜை முடிந்ததும் நோன்புக் கயிற்றை எடுத்துக் கன்னிப் பெண்களின் வலது கரத்தில் சுமங்கலிப் பெண்கள் கட்டிவிட வேண்டும். சுமங்கலிப் பெண்களுக்குச் சுமங்கலிப் பெண்களே கட்டிவிட வேண்டும்.

பின்னர், பூஜையில் கலந்து கொண்டவர்களுக்கு மங்கலப் பொருள்களான மலர்ச்சரம், மஞ்சள், குங்குமம் அளித்துத் தாங்களும் மற்றவர்களும் உணவு உண்ண வேண்டும்.

### பலன்

இவ்விரதத்தை அனுஷ்டித்த கன்னிப் பெண்களுக்கு விரைவில் திருமணமும், சுமங்கலிப் பெண்களுக்கு மாங்கல்ய பலமும் கிடைக்கும்.

# ஆவணி மாதம்



## விநாயக சதுர்த்தி விரதம்

ஆவணி மாதம் என்றால், இந்துக்களுக்கு உடனே ஞாபகத்தில் வருவது, ஆவணி மாதத்தில் சுக்கிலபட்ச நான்காவது நாளாகிய சதுர்த்தியில் வரும் விநாயக சதுர்த்தி விரதம் ஆகும்.

### விநாயகர்

'ஓம்' என்ற பிரணவ மந்திரத்தைத் திருவுருவமாகக் கொண்டவர் விநாயகர். அவருடைய உருவ அமைப்பு தன்னகத்தே ஒரு தத்துவக் கருத்தைக் கொண்டுள்ளது. அது யாதெனில், விநாயகரின் இடுப்புக்கு மேல் கழுத்து வரை தேவ உடம்பு, யானைத் தலை, இடுப்புக்குக் கீழ் மனிதத் தோற்றம். மனிதன், மிருகம் முதலிய எல்லா உயிர்களி லும் விநாயகர் இருக்கின்றார் என்பதே இதன் தத்துவம் ஆகும்.

உலகில் முதல் முதலில் தோன்றியது அறுகம்புல் என்பார்கள். அறுகம்புல்லே விநாயகப் பெருமானுக்கு மிகவும் பிடித்தது. விநாயக பூஜை செய்வதற்கு அன்னம், மோதகம், அவல், பழங்கள் இல்லாமல் போனாலும்

அறுகம்புல்லும், தண்ணீரும் இருந்தால் போதும் என்பார்கள்.

அறுகம்புல் விநாயகருக்குப் பிடிப்பதற்குக் காரணம் என்ன? என்பதைப் பார்ப்போம்.

இயமனுடைய மகனான அனலாசுரன், தேவர்களையும், முனிவர்களையும் கொடுமைப்படுத்தினான். தேவர்களும் முனிவர்களும் விநாயகரிடம் போய் முறையிட்டார்கள். விநாயகர் அனலாசுரனை தமது தும்பிக்கையால் பிடித்து தனது வாயில் போட்டு விழுங்கினார். அதனால் ஏற்பட்ட வெப்பம் தாங்க முடியாமல் உயிர்கள் எல்லாம் தவித்தன. அந்த வெப்பத்தைத் தணிப்பதற்காக முனிவர்கள் இருபத்தொரு அறுகம்புல்லை எடுத்து சேர்த்துக் கட்டி அவரது உடல் எங்கும் நீவிவிட்டார்கள். அதைத் தொடர்ந்து வெப்பம் தணிந்தது. அன்று தொட்டு அறுகம்புல் விநாயகருக்கு உகந்த பொருள் ஆனதைப் போலவே பிள்ளையாருக்கு உரிய நிவேதனப் பொருள்கள் ஒவ்வொரு வகையிலும் 21 வைக்கின்ற முறையும் புழக்கத்துக்கு வந்தது.

## பிள்ளையாருக்குத் தோப்புக்கரணம் போடும் முறை வந்தக் கதை

கஜமுகன் என்ற அசுரன் தவம் செய்து சிவபெருமானிடம் எண்ணற்ற வரங்களைப் பெற்றிருந்தான். அரியவரத்தைப் பெற்றதால் ஆணவம் அவனது தலைக்கு ஏறியது. தேவர்களைக் கொடுமைப்படுத்தினான். தேவர்களைத் தனக்கு முன்னால் நின்று காதுகளைக் கரங்களால் பற்றிக்கொண்டு ஆயிரத்தெட்டு தோப்புக் கரணம் (காலை, உச்சி, மாலை) மூன்று வேளையும் போடச் சொன்னான். அத்தோடு இருகரங்களால்

தலையில் குட்டிக் கொள்ள வேண்டும் என்றும் ஆணையிட்டான். அவனால் துன்பப்பட்ட தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டார்கள்.

சிவபெருமான், கஜமுகனை அழிப்பதற்காகத் தன் மகனான விநாயகரை அனுப்பினார். கஜமுகனுக்கும் விநாயகருக்கும் நடந்த போரில் கஜமுகன் படை அழிந்தது. ஆனால், அவன் அழியவில்லை, காரணம் அவன் எந்த ஆயுதத்தாலும் அழியா வரத்தைப் பெற்றிருந்தான். அதை உணர்ந்த விநாயகர், தன்னுடைய கொம்பு எனும் மருப்பை ஒடித்து, சிவ மந்திரத்தைச் சொல்லி ஏவினார். கஜமுகனின் அசுர உருவம் அழிந்து அவன் பெருச்சாளியாக வந்தான். பெருச்சாளியாக வந்த அவன் மீது விநாயகர் அருள் பார்வையைச் செலுத்த, அவன் விநாயகரின் பாதத்தில் சரண் அடைந்தான். விநாயகர் அதைத் தனது வாகனமாக ஆக்கிக் கொண்டார்.

தேவர்களும் முனிவர்களும் மகிழ்ந்தார்கள். தங்களைக் காப்பாற்றிய விநாயகருக்கு நன்றி செலுத்து வதற்காக விநாயகரின் முன் நின்று நெற்றியில் மூன்று தரம் குட்டி, தோப்புக்கரணம் போட்டார்கள். அப்படி நாமும் விநாயகரின் முன் நின்று நெற்றியில் குட்டி, தோப்புக் கரணம் போட்டால் நினைத்தது நிறைவேறும் என்பார்கள்.

இந்து மதம் தன்னகத்தே பல சிறந்த தத்துவங்களைக் கொண்ட மதம் ஆகும். விநாயகருக்கு முன் நெற்றியில் குட்டுவதற்குக் காரணம் நெற்றியில் குட்டிக் கொள்வ தால், குண்டலினி சக்தி தட்டியெழுப்பப்படுகின்றது. அதனால் உடலில் சுறுசுறுப்பு ஏற்படுகின்றது. தொடர்ந்து இறைவழிபாட்டில் ஈடுபடுவதற்கு மனத்தைக் கட்டுப்படுத்துகின்றது. இதைத் தவிர நெற்றிப் பொட்டில் உடலின் சகல நரம்புகளும் ஒன்று

சேருவதால் அங்கே குட்டிக்கொள்வது உடலுக்கு நல்லது.

தோப்புக்கரணம் போடுவதற்குக் காரணம் நம் அகந்தை அழிவதைக் காட்டுவதே ஆகும். விநாயகரின் முன் நெற்றியில் குட்டிக்கொள்ளும் போது கீழ்வரும் சுலோகத்தை சொல்லிக் குட்டிக்கொள்ள வேண்டும்.

**சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்**
**ப்ரஸன்ன வதநம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே**

## 1) விநாயகர் ஷோடஸ நாமாவளி

ஓம் ஸுமுகாய நம:
ஓம் ஏகதந்தாய நம:
ஓம் கபிலாய நம:
ஓம் கஜகர்ணகாய நம:
ஓம் லம்போதராய நம:
ஓம் விகடாய நம:
ஓம் விக்னராஜாய நம:
ஓம் விநாயகாய நம:
ஓம் தூம கேதவே நம:
ஓம் கணாத்யக்ஷாய நம:
ஓம் பாலசந்த்ராய நம:
ஓம் கஜான னாய நம:
ஓம் வக்ரதுண்டாய நம:
ஓம் சூர்ப்பகர்ணாய நம:
ஓம் ஹேரம்பாய நம:
ஓம் ஸ்கந்த பூர்வஜாய நம:

## 2) விநாயகர் மூல மந்திரம்

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் கலௌம்
கம் கணபதயே நம:

### 3) விநாயகர் காயத்ரி

ஓம் தத் புருஷாய வித்மஹே
வக்ர துண்டாய தீமஹி
தந்நோ தந்தி ப்ரசோத யாத்

### 4) விநாயகர் துதி

மூஷிக வாஹன மோதக ஹஸ்த
சாமர கர்ண விலம்பித சூத்ர
வாமன ரூப மகேஸ்வர புத்ர
விக்ந விநாயக பாத நமஸ்தே

### விநாயக சதுர்த்தி பற்றிய கதை

*பிரம்மாவின் மகனான தட்சன் சிவபெருமானை நோக்கி உமையம்மை தனக்கு மகளாகப் பிறக்க வேண்டும் என்று கடும் தவம் செய்ததின் பயனாகப் பார்வதி தாட்சாயினி என்ற பெயரில் தட்சனுக்கு மகளாகப் பிறந்தாள். அவளைச் சிவனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான் தட்சன். அதன் பின்னர், தட்சன் பெரிய யாகம் ஒன்று செய்தான். அந்த யாகத்துக்கு விஷ்ணு, பிரம்மா, தேவேந்திரன் எனப் பலரும் வந்தனர். மருமகனான சிவனையும், தன் மகளையும் அவன் அந்த யாகத்துக்கு அழைக்கவில்லை. ஆனாலும் அந்த யாகத்துக்குப் போகத் தாட்சாயினி தீர்மானித்தாள். அழையாதவர்கள் வீட்டுக்குப் போக வேண்டாம் என்று சிவன் தடுத்தார். தாட்சாயினி பிடிவாதமாய் நின்று யாகத்துக்குப் போனாள்.*

*அங்கு உரிய மரியாதை கிட்டப்பெறாமல் அவமானப் பட்டாள். ''யாகசாலை சுடுகாடாக மாறட்டும்'' என்று சபித்துவிட்டுத் திரும்பினாள். ''தாங்கள் தடுத்தும் போன என்னை மன்னியுங்கள்'' என்று சிவனின் பாதத்தில்*

பணிந்தாள். சிவன் அவளை மன்னித்து அருளினார். அந்த நிகழ்ச்சியால் சிவன், தட்சன் மீது கடுங்கோபம் கொண்டார். அந்த நேரத்தில் வீரபத்திரன் உதயமானான். ''வீரபத்ரா! நீ போய் தட்சன் யாகம் செய்யும் இடத்தை அழி'' என்று சிவபெருமான் ஆணையிட்டார். அதைத் தொடர்ந்து யாகம் நடக்கும் இடத்துக்கு சென்ற வீரபத்திரன், யாகம் நடக்கும் இடத்தையும், தட்சனின் ஆட்களையும், இறுதியில் தட்சனையும் வெட்டி வீழ்த்தினான். இருப்பினும் தந்தையின் மீது கொண்ட பாசத்தால், உமையின் விருப்பத்துக்கு இணங்க வீரபத்திரர் வெட்டப்பட்ட தட்சனின் தலைக்குப் பதிலாக ஓர் ஆட்டுத் தலையைப் பொருத்தி உயிர் கொடுத்தார். இந்தச் சமயத்தில் தட்சனுக்கு மகளாகப் பிறந்ததை நினைத்து வருத்தப்பட்ட தாட்சாயணி, தட்சன் வளர்த்த இந்த உடம்பு இருக்கக் கூடாது என்று யாகாக்கினியில் தன் தேகத்தை எரித்துத் தன்னை மாய்த்துக் கொண்டாள்.

அதன் பிறகு, பர்வதராஜனுக்கு மகளாகப் பார்வதியாக பிறந்த தாட்சாயணி, சிவபெருமானை அடைய ஆவணி மாதத்தில் வரும் சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்துச் சிவனையே கணவனாக அடைந்தாள்.

## விரத முறை

விரதத்துக்கு முதல் நாள் வீட்டைச் சுத்தப்படுத்தி, விரதநாளன்று காலையில் எழுந்து நீராடிக் களிமண்ணில் அல்லது சந்தனத்தில் பிள்ளையாரைச் செய்து வைத்து, அன்று முழுவதும் உபவாசம் இருந்து விநாயகர் கவசம், மற்றும் விநாயகர் துதிப் பாடல்களைப் படிப்பதோடு கற்பூர ஆரத்தியும் செய்ய வேண்டும். மறுநாள் காலை விநாயகருக்கு மோதகம், கொழுக்கட்டை, பாயசம், சர்க்கரைப் பொங்கல், அவல், பொரி, கனி வகைகளை

நிவேதனமாக வைத்து, கற்பூர ஆரத்தி காட்டிப் பூஜையை முடிக்க வேண்டும். அதன் பின் விரதம் இருப்பவர், முதல் நாளிலிருந்து செய்து வழிபட்ட பிள்ளையாரை ஆற்றிலோ, கடலிலோ கொண்டுபோய் விட்டுவிட்டு வந்த பின் உண்ணலாம்; அல்லது வேறு ஒருவர் மூலம் பிள்ளையாரை அனுப்பிவிட்டு விரதம் இருப்பவர் விரதத்தைப் பூர்த்தி செய்யலாம்.

## பலன்கள்

புத்திர பாக்கியம், செல்வம் ஆகிய பலன்கள் ஆவணி மாதத்தில் வருகின்ற சதுர்த்தி விரதத்தை அனுஷ்டிப்ப தால் கிடைப்பதைப் போல ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற பூர்வபட்ச சதுர்த்தியன்று விரதம் இருந்தால் என்னென்ன பலன்கள் கிடைக்கும் என்பதை இப்போது பார்ப்போம் :

| | |
|---|---|
| சித்திரையில் | – விஷ்ணு லோகம் |
| வைகாசியில் | – சங்கர் ஷணலோகம் |
| ஆனி | – சுவர்க்க லோகம் |
| ஆடி | – நினைத்தச் செயல் கைகூடும் |
| ஆவணி | – எல்லா விருப்பமும் நிறைவேறும் |
| புரட்டாசி | – சுகம் பெறலாம் |
| ஐப்பசி | – பரமசிவனுக்குப் பூஜை செய்த பலன் கிட்டும் |
| கார்த்திகை | – பெண்களுக்குச் சகல சௌபாக்கியங்களும் கிட்டும் |
| மார்கழி | – இக, பர சுகம் |
| தை | – தனலாபம் |
| மாசி | – ஆரோக்கியம் |
| பங்குனி | – எல்லாவிதமான செல்வங்களையும் பெறலாம் |



## ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி

கிருஷ்ண பகவான் ஆவணி மாதம் சுக்ல பட்ச அட்டமி தினத்தன்று நள்ளிரவு 12 மணிக்கு அவதரித்தார். இவரது பிறந்தநாளே இந்துக்களால் கோகுலாஷ்டமி என்றும், கிருஷ்ண ஜெயந்தி என்றும் கொண்டாடப் படுகிறது.

### கதை

கம்சன் என்ற அரசன், அதர்ம வழியில் ஆட்சி செய்து வந்தான். அது மட்டுமன்றி தன் சகோதரி தேவகிக்குப் பிறக்கும் குழந்தையால் தனக்கு அழிவு வரும் என்று அறிந்ததால், கம்சன் தன் சகோதரியையும், அவளது கணவன் வசு தேவரையும் மதுராவில் உள்ள சிறையில் அடைத்தான். தனது சகோதரிக்குப் பிறந்த முதல் ஏழு பிள்ளைகளையும் கொன்றான். எட்டாவது பிள்ளையாகப் பிறந்தார் கண்ணன். கண்ணன் பிறந்த நேரம் இரவு 12 மணி, அஷ்டமி திதி. வசுதேவர், குழந்தை கண்ணனை யார் கண்ணிலும் படாமல் இரவோடு இரவாக கோகுலத்திற்குக் கொண்டு போகவே அங்கு இரகசியமாக வளர்க்கப்பட்டார் என்பதும் பின்னர் கம்சனை அழித்துத் தாய், தந்தையரைச் சிறையில் இருந்து விடுவித்தார் என்பதும் வழங்கிவரும் கதையாகும்.

## விரத முறை

இரவு 12 மணிக்கு ஸ்ரீ கிருஷ்ணன் அவதரித்ததால், இரவு அவருக்குப் பிடித்தமான வெண்ணெய், நாவல்பழம், வெல்லச் சீடை, உப்புச் சீடை, அவல், அப்பம் எனும் நைவேத்தியங்களைக் கண்ணனின் திருவுருவப் படத்துக்கு முன்னால் வைத்து வழிபடுவர்.

கண்ணனுக்குப் படைக்கப்பட்ட நைவேத்தியங்களை நள்ளிரவில் வந்து கண்ணன் ஏற்றுக் கொள்வார் என்ற ஐதீகத்தால் கால் பாதங்கள் பதிக்கும் வழக்கம் இருக்கிறது. வீட்டு வாசலில் இருந்து பூஜை அறை வரை காலடி போன்று பதிப்பார்கள். பகல் எல்லாம் விரதம் இருந்து, இரவில் வழிபாடு செய்தபின் உணவருந்தி, அன்று இரவு தூங்காது கண்விழித்துப் பஜனை செய்து இவ்விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

## ஸ்ரீ கிருஷ்ண அஷ்டோத்ர சத நாமாவளி

| | | | |
|---|---|---|---|
| ஓம் | கிருஷ்ணாய | நம: | |
| ஓம் | கமலாநாதாய | நம: | |
| ஓம் | வாசுதேவாய | நம: | |
| ஓம் | ஸநாதநாய | நம: | |
| ஓம் | வஸுதேவாத்மஜாய | நம: | |
| ஓம் | புண்யாய | நம: | |
| ஓம் | லீலாமாநுஷ விக்ரஹாய | நம: | |
| ஓம் | யஸோதாவத்ஸலாய | நம: | |
| ஓம் | ஹரயே | நம: | 10 |
| ஓம் | சதுர்புஜாத்த சக்ராஸி கதாஸாங்காத்யுதாயுதாய | நம: | |
| ஓம் | தேவகீ நந்தாய | நம: | |
| ஓம் | ஸ்ரீ ஸாய | நம: | |

ஓம் நந்தகோப ப்ரியாத் மஜாய நம:
ஓம் யமுநா வேக ஸம் ஹாரிணே நம:
ஓம் பலபத்ர ப்ரியாநுஜாய நம:
ஓம் பூதநாஜீ விதஹராய நம:
ஓம் ஸகடாஸுரபஞ்ஜநாய நம:
ஓம் நந்தவ்ரஜ ஜநாநந்திநே நம:
ஓம் ஸச்சிதாநந்த விக்ரஹாய நம: 20

ஓம் நவநீதநவாஹாராய நம:
ஓம் முசுகுந்தப்ரஸாதகாய நம:
ஓம் ஷோடஸ ஸ்த்ரீஸஹ ஸ்ரேஸாய நம:
ஓம் த்ரியங்கிநே நம:
ஓம் லலிதாக்ருதயே நம:
ஓம் ஸுகவாகம்ருதாப்தீ ந்தவே நம:
ஓம் கோவிந்தாய நம:
ஓம் வத்ஸவாடசராய நம:
ஓம் அநந்தாய நம:
ஓம் தேநுகாஸுரபஞ்ஜநாய நம: 30

ஓம் த்ருணீ க்ருத த்ருணாவர்த்தாய நம:
ஓம் யமளார்ஜுநபஞ்ஜநாய நம:
ஓம் உத்தாலதாலபேத்ரே நம:
ஓம் தமாலஸ்யாமலாக்ருதயே நம:
ஓம் கோபகோபீஸ்வராய நம:
ஓம் யோகிநே நம:
ஓம் கோடிஸூர்யஸமர்ப்ரபாய நம:
ஓம் இளாபதயே நம:
ஓம் பரஸ்மைஜ்யோதிஷே நம:
ஓம் யாதவேந்த்ராய நம: 40

ஓம் யதூத்வஹாய நம:
ஓம் வநமாலிநே நம:

ஓம் பீதவாஸஸே நம:
ஓம் பாரிஜாதாபஹாரகாய நம:
ஓம் கோவர்த்தநாசலோத்தர்த்ரே நம:
ஓம் கோபாலாய நம:
ஓம் ஸர்வபாலகாய நம:
ஓம் அஜாய நம:
ஓம் நிரஞ்ஜநாய நம:
ஓம் காமஜநகாய நம: 50

ஓம் கஞ்ஜ லோசநாய நம:
ஓம் நவநீதவிலிப்தாங்காய நம:
ஓம் நவநீதநடாய நம:
ஓம் அநகாய நம:
ஓம் மதுக்நே நம:
ஓம் மதுராநாதாய நம:
ஓம் த்வாரகாநாதாய நம:
ஓம் பலிநே நம:
ஓம் ப்ருந்தாவநாந்தஸ் ஸஞ்சாரிணே நம:
ஓம் துலஸிதாம பூஷணாய நம: 60

ஓம் ஸ்யமந்தகமணேர் ஹர்த்ரே நம:
ஓம் நரநாராயணாத்மகாய நம:
ஓம் குப்ஜாக்ருஷ்ணாம்பரதராய நம:
ஓம் மாயிநே நம:
ஓம் பரமபுருஷாய நம:
ஓம் முஷ்டிகாஸுரசாணூரமல்ல
யுத்தவிஸாரதாய நம:
ஓம் ஸம்ஸாரவைரிணே நம:
ஓம் கம்ஸாரயே நம:
ஓம் முராரயே நம:
ஓம் நரகாந்தகாய நம: 70

| | | | |
|---|---|---|---|
| ஓம் | அநாதி ப்ரஹ்மசாரிணே | நம: | |
| ஓம் | க்ருஷ்ணாவ்யஸநகர்ஸகாய | நம: | |
| ஓம் | ஸிஸுபாலஸிரச்சேத்ரே | நம: | |
| ஓம் | துரியோதநகுலாந்தகாய | நம: | |
| ஓம் | விதுராக்ரூரவரதாய | நம: | |
| ஓம் | விஸ்வரூபப்ரதர்ஸகாய | நம: | |
| ஓம் | ஸத்யவாசே | நம: | |
| ஓம் | ஸத்யஸங்கல்பாய | நம: | |
| ஓம் | ஸத்யபாமாரதாய | நம: | |
| ஓம் | ஜயிநே | நம: | 80 |
| ஓம் | ஸுபத்ராபூர்வஜாய | நம: | |
| ஓம் | விஷ்ணவே | நம: | |
| ஓம் | பீஷ்மமுக்திப்ரதாயகாய | நம: | |
| ஓம் | ஜகத்குருவே | நம: | |
| ஓம் | ஜகந்நாதாய | நம: | |
| ஓம் | வேணுநாதவிஸாரதாய | நம: | |
| ஓம் | வ்ருஷபாஸுரவித்வம்ஸிநே | நம: | |
| ஓம் | பாணாஸுரபாலாந்தகாய | நம: | |
| ஓம் | யுதிஷ்டிரப்ரதிஷ்டாத்ரே | நம: | |
| ஓம் | பர்ஹிபர்ஹாவதம்ஸகாய | நம: | 90 |
| ஓம் | பார்த்தஸாரதயே | நம: | |
| ஓம் | அவ்யக்தாய | நம: | |
| ஓம் | கீதாம்ருதமஹோத்தயே | நம: | |
| ஓம் | காளீயபண மாணிக்ய ரஞ்ஜித ஸ்ரீபதாம்புஜாய | நம: | |
| ஓம் | தாமோதராய | நம: | |
| ஓம் | யக்ஞபோக்த்ரே | நம: | |
| ஓம் | தாநவேந்த்ர விநாஸகாய | நம: | |
| ஓம் | நாராயணாய | நம: | |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | பரப்ரஹ்மணே | நம: | |
| ஓம் | பந்நகாஸந வாஹநாய | நம: | 100 |
| ஓம் | ஜலக்ரீடாஸமாஸக்த கோபீவஸ்த்ராபஹாரகாய | நம: | |
| ஓம் | புண்யஸ்லோகாய | நம: | |
| ஓம் | தீர்த்தபாதாய | நம: | |
| ஓம் | வேதவேதாத்யாய | நம: | |
| ஓம் | தயாநிதயே | நம: | |
| ஓம் | ஸர்வதேவதாத்மகாய | நம: | |
| ஓம் | ஸர்வக்ரஹரூபிணே | நம: | |
| ஓம் | பராத்பராய | நம: | |

[நாநாவித பரிமளபத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி]

### பலன்

இவ்விரதத்தை அனுஷ்டிப்பவர்களுக்கு எண்ணற்ற நற்பலன்கள் கிடைக்கும் என்பர்.

## புரட்டாசி மாதம்

### புரட்டாசிச் சனி

இது சனீஸ்வரனை வேண்டி இருக்கும் விரதம் ஆகும். புரட்டாசி மாதத்தில் வரும் எல்லாச் சனிக்கிழமைகளிலும் விரதம் அனுஷ்டித்துச் சனி பகவானின் வாகனமான காகத்திற்கு உணவு படைத்த பின்னரே விரதம் இருப்பவர்கள் உணவு உட்கொள்வார்கள். புரட்டாசி மாதத்தில் வரும் எல்லாச் சனிக்கிழமைகளிலும் எள் எண்ணெய் விளக்கெரித்தல் பயனைத் தரவல்லது.

## சனி பகவான்

சூரியனுக்கும் சாயாதேவிக்கும் மகனாகப் பிறந்தவர் தான் கிருதகர்மா. இவனது பார்வை யார் மீது விழுகின்றதோ அவர்களுக்கு ஆபத்து விளையும். ஆதலால் அவன் அன்னை சாயாதேவி அவனை வெளியே விடாது தன் பக்கத்திலேயே வைத்துக் கொண்டாள்.

ஒருநாள் கயிலையில் விநாயகப் பெருமானுக்குப் பிறந்தநாள் வரவே, எல்லோரும் அப்பிறந்தநாள் விழாவைக் காணக் கயிலைக்குச் சென்றார்கள். தானும் அவ்விழாவுக்குப் போக வேண்டும் என்று கிருதகர்மா அடம்பிடித்தான். ''சரி, யாருக்கும் தெரியாமல் அவ்விழாவைப் பார்த்து வா'' என்று சாயாதேவி அனுப்பி வைத்தாள்.

கிருதகர்மா இங்கு வந்துவிட்டான் என்பதை அறிந்த பார்வதி, விநாயகரைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டாள். ஆனால், கிருதகர்மா விநாயகரைப் பார்த்துவிடவே விநாயகரின் தலை தெறித்து விழுந்தது. பார்வதி பதைபதைத்துப் போனாள். சிவபெருமான் வடக்குத் திக்கில் தலை வைத்துப் படுத்திருக்கும் யானையின் தலையைக் கொண்டு வரும்படி பைரவரிடம் கட்டளையிட்டார். பைரவரும் ஒரு யானையின் தலையைக் கொண்டுவந்து கொடுத்தார். அது முதல் விநாயகர் கஜமுகன் ஆனார்.

யானைத் தலையுடன் விநாயகரைக் காணப் பார்வதிக்குக் கோபம் வந்தது. ''உன் பாதம் ஊனமாகட்டும்'' என்று கிருதகர்மாவைச் சபித்தாள். அதற்குப் பிறகு அவன் விந்தி விந்தி நடக்கத் தொடங்கினான். விந்தி விந்தி நடப்பதால் கிருதகர்மா சனி பகவான் ஆனார். பார்வதியின் சாபத்தால் தனது மகனது கால் ஊனமானதைப் பார்த்த சாயாதேவி விநாயகரின் வயிறு

பெரு வயிறாகட்டும் என்று சபித்தாள். அன்று முதல் விநாயகர் 'லம்போதரன்' ஆனார். விநாயகருக்கு யானை முகம் எப்படி வந்தது என்பதற்கு இக்கதையை தவிர வேறு பல கதைகளும் உண்டு.

சனி பகவானால் பீடிக்கப்படாதவர்களே கிடையாது என்பர். நிடத நாட்டு மன்னன் நளன், இராமர், பாண்டவர்கள், தேவேந்திரன், சிவன் என்று பலர் அவன் பிடியில் சிக்கியவர்கள். அவர்களுக்கே இந்த நிலையென்றால் நாம் எம்மாத்திரம்?

சனி பகவானுக்கு பிடித்த உணவு எள் கலந்த நைவேத்தியம். பிடித்த நிறம் கருநீலம் அல்லது கருப்பு. விருப்பமானவை நீல நிறப் பூக்கள்.

## நவராத்திரி



நவம் என்பதற்கு ஒன்பது என்று பொருள். நவராத்திரி என்பது ஒன்பது இரவுகளைக் குறிக்கும். புரட்டாசி மாதத்தில் அமாவாசையைத் தொடர்ந்து வருகின்ற பிரதமை முதலான ஒன்பது நாட்களையும் நவராத்திரி

என்றும், பத்தாவது நாளை விஜயதசமி என்றும் சொல்லுகிறோம்.

இந்தியா, இலங்கை, மற்றும் ஆசிய நாடுகளில் உள்ள இந்து மக்களால் மட்டுமல்லாது உலகம் எங்கும் உள்ள இந்து மக்களாலும் இவ்விரதம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இவ்விரதம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள் ளது. அவை முறையே, முதல் மூன்று நாட்களும் வீரத்தைக் கொடுக்கும் துர்க்கை விரதமாகவும், அடுத்த மூன்று நாட்களும் செல்வத்தைத் தருகின்ற திருமகளுக் காகவும், அடுத்த மூன்று நாட்களும் கல்வியைத் தருகின்ற கலைமகளுக்காகவும், கடைசி நாளான பத்தாம் நாள் விஜயதசமி என்றும் கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் பிள்ளைகளுக்கு ஏடு தொடங்குவதற்கு ஏற்ற நல்ல நாள் ஆகும். வேலை செய்பவர்கள் தாம் உபயோகிக்கின்ற ஆயுதங்களை பூஜையில் வைத்து வழிபடுவர். மாணவர்கள் தங்கள் பாடப் புத்தகங்களை வைத்து வழிபடலாம். அன்றைய தினமே அன்னை மகிடாசுரனை வதைத்த தினமும் ஆகும்.

## நவராத்திரி பற்றிய கதைகள்

*1)* மகிஷாசுரன் என்ற அரக்கன் தேவர்களைக் கொடுமைப்படுத்தினான். அவனது கொடுமையைத் தாங்க முடியாத தேவர்கள் மகாவிஷ்ணுவிடம் போய்ச் சொன்னார்கள். ''மகிஷாசுரனின் மரணம் ஆண் மகனால் அல்ல, ஒரு பெண்ணால்தான் சாத்தியம்'' என்று விஷ்ணு சொல்ல, அதைக் கேட்ட தேவர்கள் சக்தியை நோக்கி பிரார்த்திக்க, அதன் பயனாக அவர்கள் முன் மகாலட்சுமி தோன்றினாள். 'மகாலட்சுமி' என்பதன் பொருள் எல்லாவிதமான இலட்சணங்களையும் உடையவள் என்பதாகும்.

தேவர்கள் தன்னைப் பிரார்த்தித்ததின் நோக்கத்தைப் புரிந்துகொண்ட அன்னை போருக்குப் புறப்பட்டாள். சிவன் அவளுக்குச் சூலம் தர, விஷ்ணு சக்கரத்தைத் தர, அக்கினி சக்தியையும், வாயு வில்லாயுதத்தையும் தர, அப்படியாக ஒவ்வொருவரும் ஒவ்வோர் ஆயுதத்தைத் தர, அவற்றைப் பெற்ற அன்னை மகிடாசுரனை அழிக்கப் போர்க்களம் புகுந்தாள்.

அங்கு போன அன்னை ஒரு கணம் சிந்தித்தாள். மகனைப் போன்ற இவனைக் கொல்வதா என சிந்தித்த வள், முதன் முதலில் பாசத்தை அவன் மீது ஏவினாள். அரக்க குணம் உடைய அவனுக்கு அவளது பாச உணர்வு விளங்கவில்லை. முடிவில் இவனைக் கொல்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதை உணர்ந்த அன்னை, மகிஷாசுரனை அழித்தாள். போர் நடந்தபோது தேவர்கள் பொம்மைகளைப் போல நின்று வேடிக்கை பார்த்தார்கள். அதில் இருந்துதான் கொலு வைக்கிற வழக்கம் வந்தது என்பர்.

கொடியவனான மகிஷாசுரன் அழிந்ததால் தேவர்கள் மகிழ்ந்தார்கள். மகிஷாசுரனை அழித்து வெற்றி பெற்ற நாளான பத்தாவது நாளை விஜயதசமி என்று நாம் அழைத்து வருகின்றோம். இந்தியாவில் சில இடங்களில் 'தசரா' என்ற பெயரில் இவ்விரதம் ஒரு விழாவாக நடைபெற்று வருகின்றது.

2) இலட்சுமி, அலமேலு (அலர்மேல்மங்கை) என்ற நாமத்துடன் பிறந்து, திருப்பதி வெங்கடேசப் பெருமாளை அடையும் பொருட்டு ஒன்பது நாட்கள் விரதம் இருந்து பெருமாளை அடைந்ததாகவும் ஒரு கதையுண்டு. இந்த நாட்களை வைணவர்கள் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள். இதுபோன்று நவராத்திரி பற்றிப் பல கதைகள் உண்டு.



## கொலு வைப்பதனின் நோக்கம்

இவ்விரத நாளில் கலையுணர்வு, பக்தி இவற்றை வெளிப்படுத்துவதாக இது அமைந்துள்ளது. இதன் தத்துவம், தாமஸ குணம், ரஜோ குணம், சத்துவ குணம் என்ற மூன்று குணங்களையும் குறிக்கும். முதல் இரண்டு குணங்களைக் கடந்து சத்துவ குணத்தை அடையும் வழியையே இந்த நவராத்திரிக் கொலுப்படிகள் நமக்கு உணர்த்துகின்றன.

### பலன்

இவ்விரதத்தை அனுஷ்டித்ததின் பயனாக இந்திரன் விருத்திராசுரனை அழித்தார் எனப் புராணம் கூறுகின்றது. இவ்வாறு பலரும் இந்த நவராத்திரி விரதத்தை அனுஷ்டித்துக் தாங்கள் விரும்பிய பலனைப் பெற்றார்கள்.

ஒருவர் இவ்விரதத்தை அனுஷ்டித்தால் வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்று பலன்களும் கிடைக்கும்.



# முப்பெரும் தேவியர் பற்றிய நாமாவளி

## துர்க்கா தேவி (மலைமகள்)

ஓம் துர்க்காயை நம:
ஓம் மகாகாள்யை நம:
ஓம் மங்களாயை நம:
ஓம் அம்பிகாயை நம:
ஓம் ஈஸ்வர்யை நம:
ஓம் சிவாயை நம:
ஓம் க்ஷமாயை நம:
ஓம் கௌமார்யை நம:
ஓம் உமாயை நம:
ஓம் மகா கௌர்யை நம:
ஓம் வைஷ்ணவ்யை நம:
ஓம் தயாயை நம:
ஓம் ஸ்கந்த மாத்ரே நம:
ஓம் ஜகன் மாத்ரே நம:
ஓம் மகிஷ மர்தின்யை நம:
ஓம் சிம்ஹவாகின்யை நம:
ஓம் மாகேஸ்வர்யை நம:
ஓம் திரிபுவனேஸ்வர்யை நம:

## இலட்சுமி தேவி (திருமகள்)

ஓம் மகாலக்ஷ்ம்யை நம:
ஓம் வரலக்ஷ்மியை நம:
ஓம் இந்த்ராயை நம:
ஓம் சந்த்ரவதநாயை நம:
ஓம் சுந்தர்யை நம:
ஓம் சுபாயை நம:
ஓம் ரமாயை நம:
ஓம் ப்ரபாயை நம:
ஓம் பத்மாயை நம:
ஓம் பத்மப்ரியாயை நம:
ஓம் பத்மநாபப்ரியாயை நம:
ஓம் சர்வ மங்களாயை நம:
ஓம் அம்ருதாயை நம:
ஓம் ஹரிண்யை நம:
ஓம் ஹேம மாலின்யை நம:
ஓம் சுபப்ரதாயை நம:
ஓம் நாராயணப் ப்ரியாயை நம:

## சரஸ்வதி தேவி (கலைமகள்)

ஓம் சரஸ்வத்யை நம:
ஓம் சாவித்ர்யை நம:
ஓம் சாஸ்திர ரூபிண்யை நம:
ஓம் ஸ்வேதா நநாயை நம:
ஓம் ஸுரவந்திதாயை நம:
ஓம் வரப்ரதாயை நம:
ஓம் வாக்தேவ்யை நம:
ஓம் விமலாயை நம:
ஓம் வித்யாயை நம:
ஓம் ஹம்ஸ வாகனாயை நம:
ஓம் மகாபலாயை நம:

| | |
|---|---|
| ஓம் புஸ்தகப் ருதே | நம: |
| ஓம் பாஷா ரூபிண்யை | நம: |
| ஓம் அக்ஷர ரூபிண்யை | நம: |
| ஓம் கலாதராயை | நம: |
| ஓம் பாரத்யை | நம: |
| ஓம் ஞானமுத்ராயை | நம: |

## ஐப்பசி மாதம்



### கந்த சஷ்டி விரதம்

ஒவ்வொரு வருஷமும் ஐப்பசி மாதம் சுக்கில பட்சத்துப் பிரதமை முதல் சஷ்டி வரையிலான ஆறு நாட்களில் முருக பக்தர்கள் கந்த சஷ்டி விரதத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். முருகன் கோயில் கொண்டுள்ள எல்லா ஆலயங்களிலும் கந்த சஷ்டி விரதம் ஒரு பெருவிழாவாக நடக்கும். ஆறுபடை வீடுகளான திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், பழனி, சுவாமிமலை, திருத்தணிகை, பழமுதிர்சோலையிலும், இலங்கையில் நல்லூர், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்களிலும் சிறப்பாக இவ்விழா நடைபெற்று வருகின்றது.

## விரத முறை

பூஜை அறையைச் சுத்தம் செய்து அறுகோணக் கோலம் வரைந்து, விளக்கேற்றி முருகனைப் பூஜிக்க வேண்டும். ஆலயங்களில் முருகனுக்குச் சிறப்பாக நடக்கும் பூஜைகளில் கலந்துகொண்டு முருகனை வழிபடலாம்.

ஊனை உருக்கி உள்ளொளி பெருக்கும் இவ்விரதத்தை தம் உடல் நிலைக்குத் தக்கதாக அனுஷ்டிப்பார்கள். சிலர் ஆறு நாட்களும் எவ்வித அன்ன ஆகாரமின்றியும், சிலர் பானம் மட்டும் அருந்தியும், பலர் முதல் ஐந்து நாட்களும் ஒரு நேரம் உணவு உண்டு கடைசி நாள் முழு உபவாசத்துடன் நித்திரை விழித்திருந்தும் அடுத்த நாள் காலை பாரணை மூலம் விரதத்தைப் பூர்த்தி செய்வார்கள்.

## முருகனை அர்ச்சிப்பதற்கான மந்திரங்கள்

| | | |
|---|---|---|
| ஓம்ஸாம் | குமாராய | நம: |
| ஓம்ஸாம் | பாலசுந்தராய | நம: |
| ஓம்ஸாம் | கார்த்திகேயாய | நம: |
| ஓம்ஸாம் | குக்குடத்வஜாய | நம: |
| ஓம்ஸாம் | கலிப்ரத்யக்ஷ தேவாய | நம: |
| ஓம்ஸாம் | குஹாய | நம: |
| ஓம்ஸாம் | கௌரிதனயாய | நம: |
| ஓம்ஸாம் | கிரிநிவாசாய | நம: |
| ஓம்ஸாம் | அக்னிஸூனவே | நம: |
| ஓம்ஸாம் | தண்டபாணயே | நம: |
| ஓம்ஸாம் | ஞான பண்டிதாய | நம: |
| ஓம்ஸாம் | ஸ்கந்தாய | நம: |
| ஓம்ஸாம் | வள்ளி தேவஸேனாபதயே | நம: |
| ஓம்ஸாம் | சரவணபவாய | நம: |

| | | |
|---|---|---|
| ஓம்ஸாம் | வேததத்வோபதேசகாய | நம: |
| ஓம்ஸாம் | மகேஸ்வர குரவே | நம: |
| ஓம்ஸாம் | ஷடானனாய | நம: |
| ஓம்ஸாம் | ஸ்வாமி நாதாய | நம: |
| ஓம்ஸாம் | சிகிவாஹநாய | நம: |
| ஓம்ஸாம் | வேதமந்த்ர ஸ்வரூபாய | நம: |
| ஓம்ஸாம் | ஓம் தாரக ஜேத்ரே | நம: |
| ஓம்ஸாம் | ஸேனான்யே | நம: |
| ஓம்ஸாம் | ருத்ரசம்பவாய | நம: |
| ஓம்ஸாம் | ரூபலாவண்ய விக்ரஹா | நம: |
| ஓம்ஸாம் | ஸூராராத்யாய | நம: |
| ஓம்ஸாம் | நாதபிந்து கலாதீ தாய | நம: |
| ஓம்ஸாம் | ஸூப்ரஹ்மண்யாய | நம: |

## சுப்பிரமண்ய மூல மந்திரம்

ஓம் ஸாம் ஸாம் சுப்பிரமண்யாய நம:

## சுப்பிரமண்ய காயத்ரி

ஓம் தத் புருஷாய வித்மஹே
மஹா ஸேநாய தீமஹி
தந்ந: ஷண்முக: ப்ரசோதயாத்

## விளக்கக் கதை

சூரன், சிங்கன், தாரகன் ஆகிய அசுரர்கள் தேவர்கள், முனிவர்கள் எனப் பலதரப்பட்டவர்களைக் கொடுமைப் படுத்தினார்கள். தேவர்கள் சிவபெருமானிடம் முறை யிட்டார்கள். சிவபெருமான் தருமத்தை நிலைநாட்டத் திருவுளங்கொண்டு தனது நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு பொறிகளாகத் தோற்றுவித்தவரே ஆறுமுகன் ஆவார். ஆறுமுகன் ஆறு குழந்தைகளாகக் கார்த்திகைப் பெண்களிடம் வளர்ந்தார். உமையம்மை ஞானசக்தி

வேலையும் கொடுத்து, ''வெற்றியுடன் திரும்புக'' என்று வாழ்த்தி அனுப்பி வைத்தார். முருகன் அசுரப்படையுடன் ஆறு நாட்கள் போர்புரிந்து அசுரப்படையையும், அசுர குலத்தையும் அழித்து சஷ்டியன்று சூரனை வேலாயுதத்தால் இரண்டாகப் பிளந்து ஒரு பகுதியை தனக்கு மயில் வாகனமாகவும், மறு பகுதியைத் தனக்கு சேவல் கொடியாகவும் ஆக்கி ஆட்கொண்டார்.

இக்கதை தனக்குள்ளே ஒரு தத்துவத்தைக் கொண்டுள்ளது. இறைவனை உணரவிடாமல் ஒவ்வோர் உயிரிடத்தும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள் ஆட்டிப்படைக்கின்றன. அம்மலங்கள் ஒடுங்கினால்தான் இறைவனை உணர முடியும், இந்த மும்மலங்கள்தான் சூரன், சிங்கன், தாரகன் ஆகியோர்.

இம் மும்மலங்கள் நீங்கிய ஆத்மாவை இறைவன் தன்னோடு சேர்த்துக் கொள்கின்றான் என்பது இதன் தத்துவம் ஆகும்.

### பலன்

குடும்பத்தில் கஷ்டங்கள் நீங்கவும், வேலைவாய்ப்பு, கடன் தொல்லை நீங்கவும் இவ்விரதத்தை அனுஷ்டிப்பது சிறந்தது. ''சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்'' என்பது பழமொழி. இதன் உண்மையான பொருள், சஷ்டியில் விரதமிருந்தால் கருப்பையில் குழந்தை உண்டாகும் என்பது ஆகும். எனவே குழந்தை வரம் வேண்டும் பெண்களுக்கு இது மிகவும் சிறந்த விரதமாகும்.

## கேதார கௌரி விரதம்

கேதாரம் இமயமலையில் உள்ள ஒரு சிவத் தலம். கேதாரம் என்றால் வயல், விளைநிலம் என்று பொருளும்

உண்டு. அதனால்தான் அவ்விடத்துக்குக் கேதாரம் என்று பெயர் வந்தது என்பர். மேலும் அம்பாளுக்குக் கௌரி என்று ஒரு பெயரும் உண்டு. எனவே இவ்விரதத்தை மக்கள் கேதார கௌரி விரதம், கௌரி விரதம் என்றும் அழைத்து வருகின்றார்கள். இவ்விரதம் புரட்டாசி மதம் சுக்கில பட்ச தசமி தொடங்கி ஐப்பசி மாதம் கிருஷ்ண பட்சம் தீபாவளி அமாவாசை வரை 21 நாட்கள் அனுஷ்டிக்கப்படுகின்றது.



**கதை**

பிருங்கி என்ற முனிவர் கைலாயத்தில் சிவன், உமை உட்பட்ட பலர் முன் நடனம் ஆடினார். பலரும் அவரைப் பாராட்டினார்கள். பின்னர் பிருங்கி முனிவர், சிவபெருமானை மட்டும் வலம் வந்து தொழுதார். இதைப் பார்த்த உமாதேவியாருக்குக் கோபம் வந்தது. ''முனிவரே! நீர் என்னைப் புறக்கணித்து பரமேஸ்வரனை மட்டும் வணங்கினபடியால் நீர் சக்தியின்றிப் போவீர்'' என்று சாபம் கொடுத்தார். உடனே முனிவர் சக்தி எல்லாம் குன்றி நிற்க முடியாமல் நிலத்தில் விழுந்தார். சிவபெருமான் அவருக்கு மூன்றாவது காலைக் கொடுத்து உதவினார்.

பிருங்கி முனிவரின் செய்கையால் மனவருத்தம் அடைந்த உமாதேவியார், நானும் சிவனும்

தனித்தனியாக இருந்ததால் அல்லவா பிருங்கி முனிவன் இப்படிச் செய்தான். இருவரும் ஒன்றாகிவிட்டால் இப்படி நடக்காது என்று எண்ணி, திருக்கைலாயத்தை விட்டுப் பூமிக்கு வந்தார். அங்கு இருந்த கௌதம முனிவரின் ஆசிரமத்துக்குச் சென்றார். அன்னையின் வரவால் கௌதமரின் ஆசிரமம் பொலிவடைந்தது. கைலாயத்தில் நடந்த சம்பவத்தை முனிவரிடம் அன்னை சொன்னாள். ''இதற்கு என்ன செய்ய வேண்டும்?'' என்று முனிவரிடமே கேட்டாள். ''கேதார கௌரி விரதம் என்ற விரதம் இருக்கின்றது, அவ்விரதத்தை நீங்கள் 21 நாட்கள் தொடர்ந்து பிடிக்க வேண்டும். அப்படி நீங்கள் பிடித்தால் இறைவன் உங்களுக்குத் தனது உடலின் பாதியைத் தருவார்'' என்றார். அவர் சொன்னதைப் போல அன்னை அவ்விரதத்தைப் பிடித்து அர்த்தநாரீஸ்வரரானார். அப்பொழுதும் பிருங்கி முனிவர் தமது தவ ஆற்றலால் வண்டு உருவம் கொண்டு அர்த்தநாரீவரரின் மார்பினூடாக துளைத்துச் சிவனை மட்டுமே வழிபட்டார். அதைப் பார்த்த அன்னை கோபிக்காது, ஆசீர்வதித்து அவரைப் புத்திரனாக்கிக் கொண்டாள். மேலும் இவ்விரதத்தை மேற்கொள்பவருக்கெல்லாம் அருள் வழங்கும்படி அன்னை சிவனை வேண்டிக் கொண்டாள்.

அன்னை விரதம் இருந்தபோது சித்திராங்கதன் என்பவன் அன்னைக்குப் பணிவிடை செய்தான். அவன் அவ்விரதத்தைப் பற்றி வச்சிரந்தன் என்ற அரசனுக்குச் சொல்ல, அவ்வரசன் இவ்விரதத்தை உலகம் எங்கும் பரப்பினான்.

புண்ணியவதி, பாக்கியவதி என்ற இரு ஏழைப் பிராமணப் பெண்கள் இவ்விரதத்தைப் பற்றி அறிந்து அனுஷ்டித்தார்கள். இவ்விரதத்தை முறையாகப் பிடித்ததின் பயனாக உஜ்ஜயினியின் மன்னன் புண்ணியவதியை மணந்தான். சோழ மன்னன் பாக்கியவதியை

மணந்தான். இருவரும் விரதத்தின் பயனாக சிறப்பான வாழ்வைப் பெற்றார்கள். ஆனால், சில காலம் செல்லப் பாக்கியவதி செல்வச் செருக்கு காரணமாக அனுஷ்டித்து வந்த விரதத்தைக் கைவிட்டாள். அதன் காரணமாக கணவனால் காட்டுக்குத் துரத்தப்பட்டாள். எந்தவிதமான காரணமும் இல்லாமல் தன் கணவன் தன்னைக் காட்டுக்கு அனுப்பியதற்குக் காரணம் தான் பிடித்து வந்த விரதத்தைக் கைவிட்டதே என எண்ணினாள். இறைவனின் கருணையினால் மீண்டும் இவ்விரதத்தைப் பிடித்தாள். அதன் பயனாக மீண்டும் நாட்டை அடைந்து கணவனுடன் சிறப்பாக வாழ்ந்தாள்.

## விரத முறை

இவ்விரதத்தின் தொடக்க நாளிலிருந்து ஒரு வெற்றிலை, ஒரு பாக்கு, ஒரு பழம், பலகாரம், அன்னம் முதலியவற்றை வைத்து வழிபாடு செய்ய வேண்டும். இந்த எண்ணிக்கையை ஒவ்வொன்றாக ஒவ்வொரு நாளும் கூட்டிக் கடைசி நாள் அன்று 21 எண்ணிக்கை கொண்ட பொருள்களை வைப்பதோடு, 21 இழையிலா தன நோன்புக் கயிற்றைத் தயாரித்து, அக்கயிற்றுக்குத் தீபம் காட்டி, பூஜை செய்து இறுதி நாளன்று நோன்புக் கயிற்றை ஆண்கள் வலது கையிலும், பெண்கள் இடது கையிலும் அணிந்து கொள்ள வேண்டும்.

21 நாட்கள் இந்த விரதத்தைப் பிடிக்க முடியாதவர்கள் கேதார கௌரி விரதத்தன்று உபவாசத்துடன், உறக்க மின்றி இருந்து அடுத்த நாள் பாரணை பண்ணுதல் வேண்டும்.

## பலன்

வறுமை நீங்கும், குடும்ப ஒற்றுமை ஏற்படும், புத்திரபாக்கியம் கிடைக்கும்.

## அம்பிகை நூற்றெட்டுப் போற்றி

திருநிலை நாயகி தேவி போற்றி
கருந்தார்க் குழலுமை கௌரி போற்றி
மங்கள நாயகி மாமணி போற்றி
எங்கும் நிறைந்த இன்பொருள் போற்றி
இளமை நாயகி எந்தாய் போற்றி

வளமை நல்கும் வல்லியே போற்றி
யாழைப் போல்மொழி யாயே போற்றி
பேழை வயிற்றனைப் பெற்றாய் போற்றி
பர்வனை நாயகி பார்ப்பதி போற்றி
சூல்கொண் டுலகெலாம் தோற்றினாய் போற்றி

அறம்வளர் நாயகி அம்மே போற்றி
மறங்கடி கடைக்கண் மனோன்மணி போற்றி
போகம் ஆர்த்த பொற்கொடி போற்றி
பாகம் பிரியாப் பராபரை போற்றி
உலகுயிர் வளர்க்கும் ஒருத்தி போற்றி

மலர்தல் குவிதலில் மணமலர் போற்றி
கத்து கடல்வரா முத்தே போற்றி
நத்தும் அடியார் நட்பே போற்றி
கற்றவர்க் கின்பக் கடலே போற்றி
மற்றவர்க் கெட்டா வான்வெளி போற்றி

சிவகாமி யம்மைச் செல்வி போற்றி
புவனப் பொருள்களிற் பொருந்தினாய் போற்றி
வலிதா யத்தமர் வண்தாய் போற்றி
கலிசூழா வகை காப்பாய் போற்றி
வண்டுவார் குழலி மாதா போற்றி

செண்டா டும்விடைச் சிவையே போற்றி
உண்ணா முலையெம் உயர்தாய் போற்றி
கண்ணார் கமுகுக் கழுத்தாய் போற்றி
பெருந்துறை அரசி பெண்கனி போற்றி
முருந்தேர் முறுவல் முதல்வி போற்றி

வேற்கண் அம்மை மீன்கணி போற்றி
நாற்பெரும் பயன்தரும் நங்காய் போற்றி
மின்னொளி யம்மையாம் விளக்கே போற்றி
மன்னொளிப் பிழம்பாய் வளர்ந்தாய் போற்றி
பச்சை நிறத்துப் பைங்கிளி போற்றி

இச்சைக் கிசைந்த இன்பமே போற்றி
குவளைக் கண்மலர்க் கொம்பே போற்றி
தவள வெண்நீற்றோன் தலைவி போற்றி
பவள வரைமேற் பசுங்கொடி போற்றி
துவளிடை சிறுத்த தூயோய் போற்றி

குயில்மொழி மிழற்றும் மயிலியல் போற்றி
எயில் மூன்றெரித்த இலங்கிழை போற்றி
தையல் நாயகித் தாயே போற்றி
வைய மீன்றளிக்கும் வளத்தாய் போற்றி
மெய்யுரு கடியர் விருப்பே போற்றி

ஆவடை நாயகி அன்னாய் போற்றி
தேவிற் சிறந்த திருமகள் போற்றி
தொண்டர் அகத்தமர் தூமணி போற்றி
அண்டர் அருந்தா அமிழ்தே போற்றி
பனங்காட் டூருறை பவளே போற்றி

அனங்காட்டும் நடை அழகி போற்றி
தமிழிலும் இனிமை சார்ந்தோய் போற்றி

குமிழ் தாமரைமலர்க் கொடியிடை போற்றி
அமரி குமரி ஆனாய் போற்றி
இமவான் பெற்ற இளையாய் போற்றி 55

மலையத் துவசன் மகளே போற்றி
கலையாய்க் கனிந்த தலைமகள் போற்றி
தக்கன் மகளாய்த் தனித்தாய் போற்றி
முக்கட் சுடரின் முதல்வி போற்றி
அலைமகள் அடிபணி நலமகள் போற்றி 60

கலைமகள் தலைபணி கருத்தே போற்றி
திருவார் கூடலில் திகழ்வாய் போற்றி
அருமறைப் பொருளாம் ஆதி போற்றி
உயிருள் ஓவிய உருவே போற்றி
செயிரில் காட்சிச் சேயிழை போற்றி 65

செந்தமிழ்ப் பாவின் தெளிவே போற்றி
எந்தம் மனத்தில் இருப்பாய் போற்றி
நீலி சூலி நெடுங்கணி போற்றி
மேலை வினைகடி விமலை போற்றி
ஒளிக்குள் ஒளியாய் உயர்வாய் போற்றி 70

வெளிக்குள் வெளியாய் மிளிர்வாய் போற்றி
நீல மேனி வாலிழை போற்றி
கோலக் கொண்டல் நிறத்தாய் போற்றி
மண்முதல் ஐம்பொருள் வளனே போற்றி
பெண்ஆண் அலியுருப் பெற்றோய் போற்றி 75

ஆப்பனூர் மேவிய ஆத்தாள் போற்றி
மூப்பிறப் பற்ற முதல்வி போற்றி
எண்குணத் தொருவன் இடத்தோய் போற்றி
பண்கனி மென்சொற் பாவாய் போற்றி

பச்சிளம் பெண்ணாய்ப் பகர்வோய் போற்றி 80

எச்சம யத்தும் இசைந்தோய் போற்றி
யாழிசைப் பண்ணா யமர்ந்தாய் போற்றி
ஏழிசைப் பயனாய் இருந்தாய் போற்றி
அருள்மலி கண்ணுடை ஆயே போற்றி
மருளினர் காணா வான்பொருள் போற்றி 85

வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை போற்றி
பற்றிலா நற்றவர் பற்றே போற்றி
இழையாய் நன்மை இழைப்பாய் போற்றி
குழையாய் அகத்தைக் குழைப்பாய் போற்றி
திருநணா மங்கைச் செல்வி போற்றி 90

உருவும் திருவும் உடையாய் போற்றி
அருந்தவர்க் குதவும் அருளே போற்றி
அருந்துறைத் தமிழின் அமைபொருள் போற்றி
கருநிற ஒளிவளர் கடலே போற்றி
பருவரை மருந்தே பகவதி போற்றி 95

சூளா மணியே சுடரொளி போற்றி
ஆளாம் அடியர்க் கருள்வாய் போற்றி
மதுரை அரசியாய் வந்தோய் போற்றி
குதிரைச் சேவகன் கொண்டோய் போற்றி
உலகம் உவப்புற வாழ்வருள் போற்றி 100

பல நல்லனநீ படைத்தருள் போற்றி
உயிர்களின் பசிப்பிணி ஒழித்தருள் போற்றி
பயிர்கள் பயன்தரப் பரிந்தருள் போற்றி
செல்வம் கல்விச் சிறப்பருள் போற்றி
நல்லன் பொழுக்கம் நல்குவாய் போற்றி 105

போற்றிஉன் பொன்னடிப் போது போற்றி
போற்றி புகழ்நிறை திருத்தாள் போற்றி
போற்றி தாயுமையே போற்றி போற்றியே.

## மங்கள ஆரத்தி

ஓம் ஜெய ஜெய ஜெய சக்தி – ஓம்ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம் பாடிப் பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா
– ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் மறைய – அம்மம்மா
தேவையெல்லாம் மறைய
பக்தி பெருகிடப் பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை
– ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி வரமருள்வாய் – அம்மம்மா
ஈஸ்வரி வரமருள்வாய்
கரங்குவித்தோம் இனிக் காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய்
– ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

காசினியெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் – அம்மம்மா
கருத்தினில் அன்பருள்வாய்
தேசுடன் வாழக் காட்டடி காட்சி
தேவியுன் அடைக்கலமே
– ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து – அம்மம்மா
நல்லொளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா
– ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி





## வெள்ளிக்கிழமை விரதம்

வெள்ளிக்கிழமை விரதம் மிகவும் சிறப்பான விரதம் ஆகும். வெள்ளிக்கிழமை விரதம் முருகன், மகாலட்சுமி, சுக்கிரன் ஆகியோரின் அருள் பெறும் விரதம் என்று சொல்லுவார்கள். ஆக, இவ்விரதத்தை அனுஷ்டித்தால் மேலே சொல்லப்பட்ட மூன்று தெய்வங்களின் அருள் கிடைக்கும் எனலாம். இவ்விரதத்தைப் பற்றி அருளாளர் ஒருவர் பின்வருமாறு தம் பாடலில் சொல்கின்றார்.

**துள்ளித்திரியும் மனம் உள்ளடங்க நின் தோத்திரங்கள்**
**அள்ளிக்குடித்தேன் உடலம் கூத்தாட அகக்கதவை**
**மெள்ளத்திறந்து தெளிந்து குளிர்ந்து**
**விளக்கேற்றினேன்**

**வெள்ளிக்கிழமையில் வந்தருள்வாய் ஞான
வித்தகியே.**

கந்த புராணத்தில் வரும் பின்வரும் பாடல் இப்படிச் சொல்கின்றது.

**எள்ளருஞ் சிறப்பின் மிக்க எழுவகை வாரம் தன்னுள்
வெள்ளி நாள் விரதம் தானே விண்ணவர் உலகம் காத்த
வள்ளல் தன் விரதமாகும் மற்றது புரிந்த மேலோர்
உள்ளமேல் நினைந்த எல்லாம் ஒல்லையின்
முடியுமன்றோ.**

இவ்விரதத்தை ஏதாவதொரு மாதத்தில் வருகின்ற மூன்றாவது வெள்ளிக்கிழமை அல்லது கடைசி வெள்ளிக் கிழமை அன்று தொடங்கிப் பதினொரு வாரம் மட்டும் அனுஷ்டிக்க வேண்டும். வயதினைப் பொறுத்து ஆயுள் முழுவதும் இவ்விரதத்தை அனுஷ்டிக்கலாம்.

### கதை

வைகுண்டத்தில் மகாலட்சுமியும், மகாவிஷ்ணுவும் பேசிக் கொண்டிருந்தார்கள். இலட்சுமி மகாவிஷ்ணு விடம், ''மனிதர்கள் எல்லோரும் சமம்தானே! பின்னர் ஏன் அவர்களுக்குள்ளே ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன?'' என தனது சந்தேகத்தைக் கேட்டாள். அதற்கு மகாவிஷ்ணு ''அவர்களுடைய ஏற்றத் தாழ்வுக்குக் காரணம் அவர்களுடைய விதிப்பயன்; அதற்கு ஏற்றாற்போல் தான் ஒருவருடைய வாழ்வில் ஏற்றத் தாழ்வும் அமையும். ஆனால் அப்படிப் பட்டவர்கள் நல்ல வழிமுறைகளை அனுஷ்டித்தால் அவர்கள் வாழ்விலும் நல்ல மாற்றம் கிடைக்கும். அது கிடைப்பதற்கு அவர்களுக்கு இலட்சுமி கடாட்சம் கிடைக்கவேண்டும்; அது கிடைக்க அவர்கள் என்ன வழிமுறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும் என்பதை நீ

ஒருமுறை பூலோகம் போய்ப் பார்த்துவிட்டு வா'' என்றார்.

பூலோகம் வந்த இலட்சுமி, முதலில் ஒரு வீட்டை பார்த்தாள். அந்த வீடு குப்பையாகவும், அசுத்தமாகவும் இருந்தது. இலட்சுமி அந்த வீட்டுக்குள் போகாது வேறு ஒரு வீட்டுக்குப் போனாள். அந்த வீடு சுத்தமாக இருந்தது. அது தான் வாசம் செய்வதற்கு ஏற்ற வீடு என எண்ணிய இலட்சுமி, அந்த வீட்டுக்குள் போய் அந்த வீட்டுத் தலைவி சோமதேவம்மாவுக்கு வெள்ளிக்கிழமை விரதம் எப்படி அனுஷ்டிக்கின்றது என்று கற்றுக் கொடுத்தாள். இலட்சுமி புகுந்த வீடு செல்வத்தால் நிறைந்தது. இலட்சுமியே இவ்விரதத்தைப் பற்றிச் சிறப்பாகச் சொல்லியிருக்கின்றாள் என்றால் இவ்விரதம் எத்தகைய சிறப்பு வாய்ந்தது என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

இவ்விரத நாளில் இலட்சுமி, மகாவிஷ்ணு, முருகன் ஆகியோரை வழிபடுவதோடு பொதுவாக ஆலயங்களில் நவக்கிரகங்களில் ஒன்றான சுக்கிரனையும் வழிபடுவது நல்லது. ஒருவருடய இல்வாழ்க்கை நல்லறமாக அமைவது அவன் ஜாதகத்தில் சுக்கிரன் எங்கு அமைந்துள்ளது என்பதைப் பொறுத்தே என்பார்கள். எனவே, இவ்விரத நாளில் சுக்கிரனை நினைத்துக் கீழ் வரும் பாடலைப் படிப்பது நல்லது.

**சுக்கிரமூர்த்தி சுபமிக ஈவாய்**
**வக்கிரமின்றி வரமிகத் தருவாய்**
**வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே**
**அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே**

## விரத முறை

வீட்டைச் சுத்தப்படுத்தி, கோலம் போடுவதோடு நீங்களும் நீராடி, வீடு முழுவதுமாகச் சாம்பிராணி புகை

காட்டி, சாமி படத்துக்குப் பூஜை பண்ணி அன்று முழு நாளும் உபவாசம் இருக்கலாம். முடியாதவர்கள் பால், பழத்தோடு விரதத்தை முடிக்கலாம். சுத்தம் சுகம் தருவதோடு வீட்டுக்கு இலட்சுமி கடாட்சத்தையும் கொண்டு வருவதால் எப்பொழுதும் வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பது நல்லது இல்லையா?

### பலன்

பகீரதன் இவ் விரதத்தை அனுஷ்டித்ததின் பயனாக இழந்து போன தன்னுடைய அரசுரிமையைத் திரும்பப் பெற்றான். சகல சௌபாக்கியங்களையும் கொடுக்கின்ற இவ் விரதத்தை அனுஷ்டித்துச் சிறப்பாக வாழுங்கள்.

## கார்த்திகை மாதம்



### கார்த்திகை விரதம்

இவ் விரதம் கார்த்திகை மாதப் பரணி நாளில் தொடங்கி மூன்றாவது நாளான உரோகினியன்று நிறைவு பெறும் விரதம் ஆகும். முருகன் கோயில், சிவன் கோயிலில் மட்டுமல்லாது விஷ்ணு கோயில்களிலும் பெரும் விழாவாக இத் தீபத் திருவிழா நடைபெற்று வருகின்றது.

## கார்த்திகை விரதம் பற்றிய கதைகள்

*(1)* பிரம்மாவும், விஷ்ணுவும் தம்முள் யார் பெரியவர் என வாதிட்டு முடிவு அறிய நடுவரான சிவனிடம் சென்றார்கள். அப்பொழுது அவர்களின் முன் ஜோதிவடிவமாகத் தோன்றிய சிவபெருமான் "என்னுடைய இந்த ஜோதிவடிவத்தின் அடியினையோ, முடியினையோ யார் முதலில் காண்கிறாரோ அவரே பெரியவர்" என்றார். பிரம்மா அன்னப்பறவை வடிவம் எடுத்து முடியை நோக்கிச் சென்றார். விஷ்ணு பன்றி உருவம் எடுத்து அடியை நோக்கிச் சென்றார். இறுதியில், அடியையும் முடியையும் கண்டு பிடிக்க முடியாமல் இருவரும் சிவனே பெரியவர் என ஏற்றுக் கொண்டார்கள். பிரம்மாவும், விஷ்ணுவும் கண்ட ஜோதி வடிவமான காட்சியை எல்லோருக்கும் காட்டிட எண்ணிய சிவபெருமான் கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரத்தை அதற்கான நாளாக எடுத்துக்கொண்டார். கார்த்திகை தீப விழாவைத் திருவண்ணாமலையில் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். பஞ்சபூதத் தலங்களில் ஒன்றான இத் தலத்தில் அமைந்துள்ள மலை உச்சியில் பெரிய பானை வைத்து அதற்குள்ளே துணியைப் போட்டு நெய் வார்த்து அத்துணிக்கு நெருப்பு வைப்பார்கள். அத்தீயின் ஒளி பல மைல்களுக்கு அப்பால் உள்ள மக்களும் பார்க்கக் கூடியதாக இருக்கும். உபவாசம் இருந்து அவ்வொளியைப் பார்ப்பது மிகுந்த புண்ணியமாகும்.

### பஞ்ச பூதத் தலங்கள்

i*)* சிவன் நில வடிவமாகக் காட்சி தரும் தலங்கள் – காஞ்சிபுரம், திருவாரூர்

ii*)* சிவன் நீர் வடிவமாகக் காட்சி தரும் தலம் – திருவானைக்கா

iii) சிவன் தீ வடிவமாகக் காட்சி தரும் தலம் – திருவண்ணாமலை

iv) சிவன் காற்று வடிவமாகக் காட்சி தரும் தலம் – திருக்காளத்தி

v) சிவன் விசும்பு (ஆகாய) வடிவமாகக் காட்சி தரும் தலம் – சிதம்பரம்

(2) முனிவர்களுக்குள் உயர்ந்த நிலையை அடைய விரும்பிய நாரதர், விநாயகருடைய ஆலோசனையைக் கேட்டு 12 ஆண்டுகள் முருகனை நினைத்து விரதம் இருந்து தான் நினைத்த நிலையை அடைந்தார்.

(3) முன்னொரு காலத்தில் அரக்கர்கள் உலக மக்களுக்கு பல துன்பங்களைச் செய்து வந்தார்கள் என்றும், சிவபெருமான் அவர்களைப் புன்சிரிப்பால் எரித்தார் என்றும் அந்நாளே கார்த்திகை நட்சத்திர நாள் என்றும் ஒரு கதை உண்டு. அதை நினைவு கூரும் முகமாகவே ஆலயங்களில் சொக்கப்பனை கொளுத்துவார்கள். அதாவது ஆலயத்துக்கு முன்னால் வெட்டி எடுக்கப்பட்ட பனை மரத்தை நடுவில் வைத்து, அதனைச் சுற்றிக் காய்ந்த பனை ஓலையால் குடிசை போலக்கட்டி, தீ வைப்பார்கள். திருவண்ணாமலையில் ஏற்றப்படும் தீபத்தைக் காண முடியாத மக்கள் இக்காட்சியைத் தாங்கள் வாழும் பகுதியில் உள்ள ஆலயங்களில் கண்டு களிப்பார்கள்.

## தத்துவம்

தீபமானது இருளை அகற்றுவதைப்போல ஜோதி வடிவமான இறைவன் தன்னை அடைந்த ஆன்மாக்களின் ஆணவ இருளை அகற்றித் தன்மயமாக்குவான் என்ற தத்துவத்தை இத்தீபத் திருவிழா எமக்கு உணர்த்துகின்றது.

## விரத முறை

கார்த்திகை மாதத்தில் வரும் பரணி நாளுக்கு முதல் நாள் வீட்டைச் சுத்தப்படுத்திப் பரணி நாள் அன்று ஒரு வேளை உணவு உண்டு, அடுத்த கார்த்திகையன்று முழு உபவாசம் இருந்து, அதற்கு அடுத்த நாள் பாரணை பண்ணுவார்கள்.

இத் தீப விழாவை விஷ்ணு ஆலய தீபம், குமராலய தீபம், சர்வாலய தீபம் என மூன்று பிரிவாகக் கொண்டாடுவார்கள். விஷ்ணு ஆலயங்களில் தீபம் ஏற்றி வணங்குதலை விஷ்ணு ஆலய தீபம் என்றும், முருகன் கோயில்களில் தீபம் ஏற்றி வழிபடுவதை குமராலய தீபம் என்றும், ஏனைய கோயில்களிலும், வீடுகளிலும் தீபம் ஏற்றி வழிபடுவதை சர்வாலய தீபம் என்றும் கொண்டாடுவார்கள். அன்றைய தினம் மாவிளக்குப் போடும் வழக்கமும் உண்டு.

## தீபங்கள் ஏற்றுவதால் ஏற்படும் பலன்கள்

எத்தனை தீபம் ஏற்றி வைத்தால் என்ன என்ன பலன்கள் கிடைக்கும் என்பதைக் கீழே பார்ப்போம்.

ஒரு தீபம் ஏற்றினால் மன அமைதி கிடைக்கும். ஒன்பது தீபம் ஏற்றினால் நவக்கிரக பிணிகள் அகலும். பன்னிரெண்டு தீபம் ஏற்றினால் சக்தி கிடைக்கும். இருபத்தொரு தீபம் ஏற்றினால் நல்லவை நடக்கும். நாற்பத்தெட்டு தீபம் ஏற்றினால் தொழில் விருத்தி, பயம் நீங்கும். நூற்றெட்டு தீபம் ஏற்றினால் நினைத்த காரியம் கை கூடும். ஆயிரத்தெட்டு தீபம் ஏற்றினால் திருமணத்தடை நீங்கும். நாங்களும் இந்த தீபத் திருநாளில் தீபம் ஏற்றி வழிபட்டுப் பயன் பெறுவோம்.

## தீபம் ஏற்றும் திசைகளும் பலன்களும்

இவ் விசேஷ தினத்தில் எத்திசையில் தீபம் ஏற்றினால் என்ன பலன்கள் கிடைக்கும் என்பதைப் பார்ப்போம். கிழக்குத் திசையில் தீபம் ஏற்றினால் துன்பம் ஒழியும். மேற்குத் திசையில் தீபம் ஏற்றினால் கிரக தோஷம், கடன் தொல்லை நீங்கும். வடக்குத் திசையில் தீபம் ஏற்றினால் தடைகள் நீங்கும், செல்வம் கிடைக்கும். தெற்குத் திசை யமனின் திசை ஆகையால் அத் திசையில் தீபம் ஏற்றக் கூடாது.

### பலன்

இவ் விரதத்தை முறைப்படி அனுஷ்டிப்பவர்கள் வாழ்வில் சகல சௌபாக்கியங்களையும் பெறுவார்கள். இவ்விரதத்தை அனுட்டித்த நாரதர் ஏழு முனிவர்களுக் குள் மிக உன்னத நிலையை அடைந்தார். பகீரதன் என்பவன் தான் இழந்த நாட்டைத் திரும்பப் பெற்றான்.

## கார்த்திகை சோமவாரம்

கார்த்திகை மாதத்தில் பல முக்கிய விரதங்கள் வருகின்றன. அவற்றில் சிறப்பான சிவ விரதம் கார்த்திகை சோமவாரம் திங்கட்கிழமை ஆகும். சோமன் என்றால் உமையுடன் கூடிய சிவன் என்பதோடு சந்திரன் என்ற பொருளும் உண்டு. கார்த்திகை முதல் சோம வாரத்தில் இருந்து சோம வார விரதத்தை ஆரம்பித்தல் வேண்டும். இவ் விரதத்தை ஒருவர் தனது வாழ்நாள் நெடுகிலும் அனுஷ்டிக்கலாம். அல்லது 1, 2, 3, 12, 14 ஆண்டுகள் விரதம் அனுஷ்டிப்பேன் எனச் சங்கற்பித்து விரதத்தை ஆரம்பிக்க வேண்டும்.

சந்திரன், கார்த்திகை மாதம் சுக்கில பட்ச அஷ்டமியில் தோன்றினான். அவன் பெரியவன் ஆனதும், இராஜ சூய வேள்வி நடத்திப் பெரும் புகழ் பெற்றான். சந்திரனுக்கு

இருக்கும் புகழை அறிந்த தட்சன் தனது இருபத்தேழு பெண்களையும் சந்திரனுக்கு மனைவிகளாகக் கொடுத்தார். ஆனால் சந்திரன் அவர்களில் உரோகினியிடம் மட்டும் அதிக அன்பு காட்டினான். அதனால் கவலையடைந்த மற்றப் பெண்கள் தங்கள் தந்தையான தட்சனிடம் முறையிட்டார்கள். அவர் சந்திரனிடம் ''எனது பெண்கள் எல்லோரிடமும் சமமாக அன்பு செலுத்துக'' என்று கூறினார். அதன் பிறகும் சந்திரன் திருந்துவதாகத் தெரியவில்லை. கோபம் கொண்ட தட்சன் ''நீ நாளுக்கு நாள் தேயக்கடவாய்'' என்று சந்திரனுக்கு சாபம் கொடுத்தார்.

சாபத்தால் தான் தேய்ந்து வருவதைக் கண்ட சந்திரன், பிரம்மாவிடம் முறையிட்டான். அவர், சிவனைத் தஞ்சம் அடையுமாறு சொல்ல, சந்திரன் சிவனைத் தஞ்சம் அடைந்தான். சிவன் மனமிரங்கிச் சந்திரனைத் தனது சடைமுடியில் வைத்துக் கொண்டார். சந்திரன் அன்று முதல் வளர்ந்தான். ஆனால், பின்னர் தட்சனது சாபத்தால் தேய்ந்தான். இப்படியாகத் தேய்வதைக் கிருஷ்ண பட்சம் என்றும், வளர்வதைச் சுக்கில பட்சம் என்றும் வழங்கலாயினர். இந்தக் கார்த்திகை சோம வாரத்தில் தான் சந்திரன் சிவனுடைய தலை முடியில் அமர்ந்து கொண்டான். அப்படியமர்ந்து கொண்ட சந்திரன் சிவனிடம் பின்வருமாறு வேண்டிக்கொண்டான். ''சோமவாரம் தோறும் பூஜை செய்து விரதம் இருக்கின்றவர்களுக்கு நற்கதியைக் கொடுக்க வேண்டும்'' என்று வரம் கேட்டான்.

இவ்விரத்தை அனுஷ்டிப்பவர்கள் அன்று முழுவதும் உபவாசம் இருப்பது நல்லது. முடியாதவர்கள் இரவில் பால், பழம் உண்ணலாம். இதற்கும் இயலாதவர்கள் மதியத்தின் பின் உண்ணலாம். அல்லது இரவில் உண்ணலாம்.

### பலன்

இவ் விரதத்தை அனுஷ்டிப்பவர்கள் செய்த பாவங்கள் அகலும்; நோய் அண்டாது என்பர்.



## விநாயக சஷ்டி விரதம்

கார்த்திகை மாதத்துக் கிருஷ்ண பட்சப் பிரதமை தொடக்கம் மார்கழி மாதத்துச் சுக்கில பட்சத்துச் சஷ்டி வரையுள்ள 21 நாட்கள் அனுஷ்டிக்கப்படும் விரதம் விநாயக சஷ்டி விரதம் ஆகும்.

### விரத முறை

இவ்விரதம் அனுஷ்டிப்பவர்கள் 21 இழையிலான நூல் காப்பை விரத ஆரம்ப நாளில் ஆண்கள் வலது கையிலும், பெண்கள் இடது கையிலும் கட்டிய வண்ணம், ஒரு நேரம் உணவு உண்டு, அவரவர் வசதிக்கேற்ப விநாயகருக்கு விருப்பமானவையான இளநீர், கடலை, எள்ளுருண்டை போன்றவற்றை நைவேத்தியமாகப் படைத்து, அறுகம்புல், எருக்கம்பூ, பன்னீர்பத்திரம் ஆகியவற்றால் அர்ச்சித்து, வீட்டிலோ அல்லது ஆலயத்திலோ பிள்ளையார் கதை வாசித்தோ, கேட்டோ வரவேண்டும். இறுதி நாளான சஷ்டியன்று முழு உபவாசம் இருந்து, மறுநாள் காலையில்

கட்டியிருந்த நோன்புக் கயிற்றைக் கழற்றிய பின் பாரணை செய்து விரதத்தை முடிப்பர்.

இவ்விரதத்தைப் பயபக்தியோடு பிடிக்க வேண்டும். விக்கிரமாதித்தனின் மனவியான இலக்கணசுந்தரி ஆணவ மிகுதியால் நோற்ற விரதத்தை இடையில் நிறுத்தி நோன்புக்கயிற்றைக் கழற்றி எறிந்தாள். அதன் விளைவாக கணவன் விக்கிரமாதித்தனால் துரத்தப்பட்டு, காட்டிலே சிலகாலம் வாழ்ந்த இலக்கணசுந்தரி, மீண்டும் விநாயக சஷ்டி விரதம் இருந்து, பிரிந்த தனது கணவனான விக்கிரமாதித்தனுடன் சேர்ந்தாள்.

பிள்ளையாருக்குப் பிரியமான மோதகத்தின் வெளித் தோற்றம் மாவாலானது. உள் பாகத்தில் வெல்லமும் தேங்காயும் கலந்த சுவைமிக்க ''பூரணம்'' என்ற பொருள் கொண்டது. மேலே உள்ள மாவுப்பொருள் தான் அண்டம். உள்ளே இருக்கின்ற சுவையான பொருள் பரிபூரணனாகிய பரம்பொருளைக் குறித்து நிற்கின்றது. எமது நற்குணங்களை மா போன்ற மாயை மறைத்து நிற்கின்றது. அந்த மாயையை உடைத்தால் பூரணத்துவமான நற்குணங்கள் வெளிப்படும் என்பதே இதன் அர்த்தம் ஆகும்.

### பலன்

இவ்விரதத்தை அனுஷ்டித்தால் வாழ்வில் எல்லாப் பேறுகளும் பெற்று வாழ்வதோடு, எடுக்கின்ற காரியங்களும் வெற்றியாக அமையும்.

### விநாயகர் நூற்றெட்டுப் போற்றி

திருச்சிற்றம்பலம்

ஓம்எனும் பொருளாய் உள்ளோய் போற்றி
பூமனும் பொருள்தொறும் பொலிவாய் போற்றி

அகரம் முதலென ஆனாய் போற்றி
அகர உகர ஆதி போற்றி
மகரமாய் நின்ற வானவ போற்றி

பகர்முன் னவனாம் பரனே போற்றி
மண்ணாய் விண்ணாய் மலர்ந்தாய் போற்றி
கண்ணுள் மணியாய்க் கலந்தாய் போற்றி
நீர்தீக் காற்றாய் நின்றாய் போற்றி
கார்குளி ராகக் கனிந்தாய் போற்றி

பகலவன் நிலவாய்ப் பரந்தாய் போற்றி
நிகர் மீன் கணமாய் நிலைத்தாய் போற்றி
மலைபொவி இமய வல்லிசேய் போற்றி
தழைசெவி எண்தோள் தலைவ போற்றி
திங்கட் சடையோன் செல்வ போற்றி

எங்கட் கருளும் இறைவா போற்றி
அறுமுகச் செவ்வேட்கு அண்ணா போற்றி
சிறுகண் களிற்றுத் திருமுக போற்றி
செம்பொன் மேனிச் செம்மால் போற்றி
உம்பர் போற்றும் உம்பல் போற்றி

பண்ணியம் ஏந்துகைப் பண்ணவ போற்றி
எண்ணிய எண்ணியாங் கிசைப்பாய் போற்றி
அப்பமும் அவலும் கப்புவாய் போற்றி
முப்புரி நூல்மார்பு அப்பா போற்றி
எள்ளுருண் டைபொரி ஏற்போய் போற்றி

தெள்ளுறு தெவிட்டாத் தேனே போற்றி
மூவர் மொழியிடம் மொழிந்தாய் போற்றி
தேவர்க்கரிய தேவா போற்றி
மாலுக்கருளிய மதகரி போற்றி

பாலெனக் கடல்நீர் பருகினாய் போற்றி

பாரதம் எழுதிய பரூஉக்கர போற்றி
மாரதம் அச்சொடி மதவலி போற்றி
மாங்கனி அரன்பால் வாங்கினோய் போற்றி
ஈங்கினி எம்பால் எழுந்தருள் போற்றி
கரும்பா யிரங்கொள் கள்வா போற்றி

அரும்பொரு ளேயெம் ஐயா! போற்றி
திணைபால் கடந்த தேவே போற்றி
புணையாய் இடர்க்கடல் போக்குவாய் போற்றி
பேழை வயிற்றுப் பெம்மான் போற்றி
ஏழைக் கிரங்கும் எம்மிறை போற்றி

அடியவர் உள்ளம் அமர்ந்தாய் போற்றி
அடிமலர் எம்தலை அணிவாய் போற்றி
திருநீற் றொளிசேர் செம்மால் போற்றி
இருவே றுருவ ஈசா போற்றி
உள்ளத் திருளை ஒழிப்பாய் போற்றி

கள்ளப் புலனைக் கரைப்பாய் போற்றி
நம்பியாண் டார்க்கருள் நல்லாய் போற்றி
எம்பிரா னாக இசைந்தாய் போற்றி
உருகுவோ ருள்ளத் தொளியே போற்றி
பெருகருள் சுரக்கும் பெருமான் போற்றி

தம்பிக்கு வள்ளியைத் தந்தாய் போற்றி
உம்பர் கட் கரசே ஒருவ போற்றி
பிள்ளையார்ப் பெயர் கொண்டுள்ளாய் போற்றி
வள்ளலாய் நலங்கள் வழங்குவாய் போற்றி
மூவாச் சாவா முத்தா போற்றி

ஆவா எங்களுக் கருள்வாய் போற்றி
தமிழ்ச்சுவை சார்திருச் செவியாய் போற்றி
அமிழ்தாய் எம்மகத் தானாய் போற்றி
மழவிளங் களிறே மணியே போற்றி
குழவியாய்ச் சிவன்மடி குலவுவோய் போற்றி

பெருச்சா வியூரும் பிரானே போற்றி
நரிச்செய லார்பால் நண்ணாய் போற்றி
செந்தா மரைத்தாள் தேவா போற்றி
நந்தா மணியே நாயக போற்றி
இருள்சேர் இருவினை எறிவாய் போற்றி

கரிமுகத் தெந்தாய் காப்போய் போற்றி
ஆங்கா ரம்முளை அறுப்பாய் போற்றி
பாங்கார் இன்பப் பராபர போற்றி
கற்றவர் விழுங்கும் கனியே போற்றி
மற்றவர் காணா மலையே போற்றி

சொல்லொடு பொருளின் தொடர்வே போற்றி
கல்லும் கரைக்க வல்லோய் போற்றி
தொந்தி வயிற்றுத் தந்தி போற்றி
முந்திய பொருட்கும் முந்தியோய் போற்றி
ஐந்துகை யுடைய ஐய போற்றி

ஐந்தொழில் ஆற்றும் அமர போற்றி
அருளாய் அருள்வாய் ஆண்டவ போற்றி
தருவாய் மணமலர்த் தாராய் போற்றி
கயமுக அசுரனைக் காய்ந்தாய் போற்றி
மயலறும் இன்ப வாழ்வே போற்றி

ஆனையாய்ப் புழுவாய் ஆனாய் போற்றி
பானை வயிற்றுப் பரமே போற்றி

கடம் பொழி யானைக் கன்றே போற்றி
மடம்ஒழி அறிவின் வளனே போற்றி
பாலொடு தேனும் பருகுவோய் போற்றி 85

மேலொடு கீழாய் மிளிர்வோய் போற்றி
எய்ப்பில் வைப்பாய் இருந்தோய் போற்றி
மெய்ப்பொருள் வேழ முகத்தாய் போற்றி
நல்லார்க் கெட்டும் நாதா போற்றி
பொல்லா மணியே புராதன போற்றி 90

அறிவின் வரம்பை அகன்றாய் போற்றி
குறிகுணங் கடந்த குன்றே போற்றி
எட்டு வான்குணத் தெந்தாய் போற்றி
கட்டறு களிற்று முகத்தோய் போற்றி
மலரில் மணமாய் வளர்ந்தாய் போற்றி 95

அலர்கதிர் ஒளியின் அமர்வோய் போற்றி
ஓங்கா ரம்முகத் தொருத்தல் போற்றி
ஏங்கா துயிர்க்கருள் இயற்கை போற்றி
எண்ணும் எழுத்துமாய் இசைந்தாய் போற்றி
பண்ணும் பயனுமாய்ப் பரந்தாய் போற்றி 100

அருவே உருவே அருவுரு போற்றி
பொருளே பொருளின் புணர்ப்பே போற்றி
புகர்முகக் களிற்றுப் புண்ணிய போற்றி
அகலிடம் நிறைய அமர்ந்தோய் போற்றி
செல்வம் அருள்க தேவா போற்றி 105

நல்லன எமக்கருள் நாயக போற்றி
ஆக்கமும் ஊக்கமும் அருள்வாய் போற்றி
காக்களங் களையுன் கழலிணை போற்றியே. 108

திருச்சிற்றம்பலம்

# மார்கழி மாதம்

## வைகுண்ட ஏகாதசி

விரதங்களுள் சிறந்தது வைகுண்ட ஏகாதசி விரதம் என்பர். அஸ்வமேத யாகம் செய்யும் பலனுக்குச் சமமானது என்றும் சொல்லுவார்கள். இவ்விரதத்தின் மகிமை பற்றி சிவன் கூட பார்வதிக்குச் சொல்லியிருக்கிறார். மேலும், இவ்விரதத்தின் சிறப்பை அக்கினி புராணம் இப்படிச் சொல்லுகின்றது : "காயத்திரிக்கு ஈடான மந்திரம் இல்லை; தாய்க்குச் சமமான தெய்வம் இலை; கங்கைக்கு மேற்பட்டத் தீர்த்தம் இல்லை; ஏகாதசிக்குச் சமமான விரதம் இல்லை" என்று. இவ்விரதத்தின் சிறப்பை விளக்க எமக்கு இதைவிட வேறு என்ன வேண்டும்?

ஒரு வருடத்தில் இருபத்தைந்து ஏகாதசிகள் வருகின்றன. அவை வருமாறு :

1. **உற்பத்தி ஏகாதசி** : மார்கழி மாத கிருஷ்ண பட்சத்தில் (அமாவாசைக் காலத்தில்) வருவது.
2. **மோட்ச ஏகாதசி** : மார்கழி மாத சுக்ல பட்சத்தில் (வளர்பிறைக் காலத்தில்) வருவது.
3. **ஸபலா ஏகாதசி** : தை மாதம் கிருஷ்ண பட்சத்தில் வருவது.
4. **புத்ரதா ஏகாதசி** : தை மாத சுக்ல பட்சத்தில் வருவது.
5. **ஷட்திலா ஏகாதசி** : மாசி கிருஷ்ண பட்சத்தில் வருவது.
6. **ஜயா ஏகாதசி** : மாசி மாத சுக்ல பட்சத்தில் வருவது.
7. **விஜயா ஏகாதசி** : பங்குனி மாத கிருஷ்ண பட்சத்தில் வருவது.

8. **ஆமலதி ஏகாதசி :** பங்குனி மாத சுக்லபட்சத்தில் வருவது.
9. **பாபமோசனிகா ஏகாதசி :** சித்திரை மாத கிருஷ்ணபட்சத்தில் வருவது.
10. **காமதா ஏகாதசி :** சித்திரை மாத சுக்கில பட்சத்தில் வருவது.
11. **வருதிநீ ஏகாதசி :** வைகாசி மாத கிருஷ்ணபட்சத்தில் வருவது.
12. **மோஹனீ ஏகாதசி :** வைகாசி மாத சுக்கில பட்சத்தில் வருவது.
13. **அபரா ஏகாதசி :** ஆனி மாதம் கிருஷ்ண பட்சத்தில் வருவது.
14. **நிர்ஜலா ஏகாதசி :** ஆனி மாதம் சுக்கில பட்சத்தில் வருவது.
15. **யோகிநீ ஏகாதசி :** ஆடி மாதம் கிருஷ்ண பட்சத்தில் வருவது.
16. **சயனீ ஏகாதசி :** ஆடி மாதம் சுக்கில பட்சத்தில் வருவது.
17. **காமிகா ஏகாதசி :** ஆவணி மாதம் கிருஷ்ண பட்சத்தில் வருவது.
18. **புத்ரஜா ஏகாதசி :** ஆவணி மாதம் சுக்கில பட்சத்தில் வருவது.
19. **அஜா ஏகாதசி :** புரட்டாசி மாதம் கிருஷ்ண பட்சத்தில் வருவது.
20. **பத்மநாபா ஏகாதசி :** புரட்டாசி மாதம் சுக்கில பட்சத்தில் வருவது.

21. **இந்திரா ஏகாதசி** : ஐப்பசி மாதம் கிருஷ்ண பட்சத்தில் வருவது.

22. **பாபங்குசா ஏகாதசி** : ஐப்பசி மாதம் சுக்கில பட்சத்தில் வருவது.

23. **இரமா ஏகாதசி** : கார்த்திகை மாதம் கிருஷ்ண பட்சத்தில் வருவது.

24. **ப்ரபோதினீ ஏகாதசி** : கார்த்திகை மாதம் சுக்கில பட்சத்தில் வருவது.

25. **கமலா ஏகாதசி** : ஆண்டுக்கு 24 ஏகாதசிகள்தான் வரவேண்டும். அவை முறையே கிருஷ்ண பட்சத்தில், சுக்கில பட்சத்தில் வரும் சில வருடங்களில் ஓர் ஏகாதசி அதிகமாக வரும். அதைக் கமலா ஏகாதசி என்று அழைப்பார்கள்.

மேற்கண்ட 25 ஏகாதசிக்கும் ஒவ்வொரு கதையுண்டு. இவற்றில் சிறப்புவாய்ந்த ஏகாதசி முன்பு சொன்னதைப் போல வைகுண்ட ஏகாதசி ஆகும்.

### கதை

ஆதி காலத்தில் முரன் என்ற அசுரன் இருந்தான். இவன் தேவர்களையும், முனிவர்களையும் கொடுமைப் படுத்தினான். அவனது கொடுமையைத் தாங்க முடியாத தேவர்கள் கைலாயத்துக்குச் சென்று சிவபெருமானிடம் முறையிட்டார்கள். சிவபெருமான் அவர்களைத் திருமாலிடம் முறையிடும்படி கூறினார். தேவர்களும், முனிவர்களும் திருமாலிடம் முறையிட்டார்கள். கருணைக் கடவுளான திருமால் தேவர்களையும், முனிவர்களையும் காக்கத் தேவர்களுடன் சேர்ந்து நின்று சண்டையில் ஈடுபட்டார். அச்சண்டை பல ஆண்டுகள் தொடர்ந்து சென்றது. சண்டையால் களைப்படைந்த

திருமால், பத்ரிகாசிரமம் என்ற இடத்தில் உள்ள சிம்ஹஹ் என்னும் குகையில் பள்ளி கொண்டார். திருமாலைத் தேடிவந்த முரன் பள்ளி கொண்டிருக்கின்ற திருமாலைக் கொல்ல நினைத்து உடைவாளை உருவினான். அந்த நேரம் திருமாலின் உடலிலிருந்து ஒரு பெண் தோன்றி முரனை அழித்தாள். இது நடந்ததின் பின் விழித்துக் கொண்ட திருமால், அப்பெண்ணைப் பாராட்டி, அவளுக்கு ஏகாதசி என்று பெயரிட்டார். அந்தப் பெண் திருமாலிடம் ஒரு வரம் கேட்டாள். ''ஏகாதசி அன்று தங்களை நினைத்து நல்ல மனத்துடன் யார் விரதம் இருக்கின்றார்களோ அவர்களைக் காத்தருள வேண்டும்'' என்று வேண்டினாள். அன்று முதல் இவ்விரதம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## விரத முறை

ஏகாதசிக்கு முதல் நாளான தசமியன்று ஒரு வேளை உணவு உண்டு ஏகாதசி அன்று இரவு முழுவதும் தூங்காமல் முழு உபவாசம் இருந்து மறுநாள் காலை துவாதசி அன்று பகவானின் நாமத்தைச் சொல்லியபடி துளசி தீர்த்தத்தை அருந்திய பின் உணவு சாப்பிட வேண்டும். இந்த மூன்று நாட்களும் பகவானின் பாடல்களைப் படிப்பது, கேட்பது நல்லது.

ஏகாதசி விரதத்தன்று ஆலயங்களில் பகவானுக்கு விசேஷ பூஜை நடக்கும். ஆலயங்களுக்குச் சென்று அப்பூஜைகளில் கலந்துகொள்வது நல்லது.

## பலன்

நோய் அகலும், சகல செல்வங்களும் கிடைக்கும். பகைவர்கள், நண்பர்கள் ஆவார்கள்.

## திருவாதிரைத் திருநாள் (திருவெம்பாவை)

மாதங்களில் சிறந்தது மார்கழி என்பர். திருவாதிரைத் திருநாள், வைகுண்ட ஏகாதசி, விநாயகர் சஷ்டி விரதம், ஹநுமந்த் ஜெயந்தி என்ற முக்கிய விரதங்கள் வருவதும், பல ஞானியர்கள் தோன்றியதும் இந்த மாதத்தில்தான் என்பர். மார்கழி முழுவதும் தேவர்களுக்கு அதிகாலை – பிரம்ம முகூர்த்தமாகும். எமக்கு அதிகாலை நாலு மணியிலிருந்து காலை ஆறு மணிவரை பிரம்ம முகூர்த்த மாகும். அத்தகைய சிறப்பு வாய்ந்த அதிகாலைப் பொழுதில் இவ்விரதத்தை நோற்பது சிறப்பானதாகும்.

மாணிக்கவாசகரின் திருவெம்பாவைப் பாடல்களை இவ்விரத நாட்களில் முக்கியமாகப் படிப்பார்கள். இப்பாடல்களின் இறுதித் தொடரான ''எம்பாவாய்'' என்பது, ''திரு'' என்ற மங்கள அடைமொழியுடன் சேர்க்கப்பட்டு, ''திருவெம்பாவை'' என்று அழைக்கப் படுகின்றது. இலங்கையில் இவ்விரதத்தைத் திருவெம் பாவை என்ற பெயரில் அழைத்து வருகின்றார்கள். கிழமைகளில் சோமவாரமும், நட்சத்திரங்களில் திருவாதிரையும் சிவபெருமானுக்கு உகந்ததாக சொல்லப்படும்.

ஆண்களை விடப் பெண்களே அதிகமாக இவ்விரதத்தை அனுஷ்டிப்பதால் பாவை நோன்பு என்றும் இவ்விரதத்தை அழைப்பர். இவ்விரதத்தின் சிறப்பைக் கருதி மாணிக்கவாசகர் திருவண்ணா மலையில் திருவெம்பாவை எனும் பாடல் தொகுப்பைப் பாடினார்.

இவ்விரதமானது மார்கழி மாதத் திருவாதிரையை இறுதியாக கொண்ட பத்து நாட்கள் அனுஷ்டிக்கப்படும் விரதம் ஆகும். இளம் பெண்கள் அதிகாலை நாலு மணிக்கே எழுந்து வீடு வீடாகச் சென்று தமது

தோழிகளை எழுப்பிப் பின்னர் கூட்டமாக நீர் நிலைக்குச் சென்று நீராடுவார்கள். பின் ஆலயத்துக்குச் சென்று அங்கு நடக்கும் வழிபாட்டில் கலந்து கொள்வார்கள். அவ்வாறு வீடு வீடாகத் தமது தோழிகளை எழுப்பப் போகும் பெண்கள் திருப்பள்ளியெழுச்சி, திருவெம் பாவைப் பாடல்களைப் படித்தபடி செல்வார்கள். திருவெம்பாவை இருபது பாடல்களைக் கொண்டது ஆகும்.

திருவாதிரை நட்சத்திரத்திலே ஆருத்திரா தரிசனத்துக்கு முன் நடக்கும் அபிஷேகம் பார்ப்பது சிறப்பானது.

## ஆருத்திரா தரிசனம்

சிவபெருமான் தோன்றிய நட்சத்திரம் திருவாதிரை ஆகும். பகவான் கிருஷ்ணர், கீதையில் ''மாதங்களில் நான் மார்கழி, நட்சத்திரங்களில் நான் திருவாதிரை, கிரகங்களில் நான் சுக்கிரன்'' என்றார். மார்கழி மாதத்தில் வருகின்ற திருவாதிரை நட்சத்திரத்தில் ஆருத்திரா தரிசனம் சிறப்பாக ஆலயங்களில் கொண்டாடப்ப டுகின்றது. நடராஜரது இந்த ஆருத்திரா தரிசனம் அவரது ஐந்து தொழில்களான ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்து தொழில்களை உணர்த்தும் பொருட்டே ஆலயங்கள் தோறும் பஞ்ச கிருத்திய உற்சவம் நடந்து வருகின்றது.

## கதை

மஹா விஷ்ணு பாற்கடலில் ஆதிசேஷன் மேலே பள்ளி கொண்டிருந்தார். திடீரென்று அவர் ''அற்புதம். பிரமாதம்'' என்று சத்தம் போட்டார். அவர் சத்தம் போட்டதற்கான காரணம் என்ன என்று மகாலட்சுமிக் கும், ஆதிசேஷனுக்கும் புரியவில்லை. எனவே அவர்கள் தங்கள் சந்தேகத்தை மஹா விஷ்ணுவிடமே கேட்டார்

கள். ''திருவாதிரை நாளான இன்று சிவன் ஆடிய ஆனந்தத் தாண்டவத்தை ஞானக் கண்ணால் பார்த்தேன்'' என்றார். மஹாவிஷ்ணு அந்த ஆனந்தத் தாண்டவத்தைப் பற்றி சொல்லச் சொல்ல ஆதிசேஷனுக்கு உடல் சிலிர்த்தது. ஆதிசேஷனின் உடல் சிலிர்த்தற்கான காரணத்தைப் புரிந்து கொண்ட மஹா விஷ்ணு, ''ஆதிசேஷா! உனது ஆசை எனக்குப் புரிகின்றது. அதை நீ பார்க்க வேண்டும் என்றால் பூவுலகில் பிறந்து தவம் இருப்பாயானால் அந்த ஆனந்தத் தாண்டவத்தை நீயும் பார்க்கலாம். போய் வா'' என்று அனுப்பி வைத்தார். ஆதிசேஷன் புவியில் பதஞ்சலி முனிவராக அவதரித்தார். அவருடைய உடல் அமைப்பு, இடுப்பு வரைக்கும் மனித உடலும், இடுப்புக்குக் கீழே பாம்புத் தோற்றமும் ஆகும். இவர் பலகாலம் தவம் இருந்துவர, திருவாதிரை நாள் அன்று சிதம்பரத்தில் தம் திருநடனத்தைச் சிவபெருமான் அவருக்குக் காட்டி அருளினார்.

## திருவாதிரைக் களி

திருவாதிரை நன்னாளில் நடராஜருக்கு நிவேதனமாகக் களி செய்து வைப்பார்கள். களி என்றால் ஆனந்தம் என்பர். அதாவது அஞ்ஞானம் அகன்று மெய்ஞ்ஞானம் தோன்றிய நிலையில் ஆன்மா ஆனந்த நிலையில் இருக்கும். சத், சித் ஆனந்தம் கிட்டும் என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்ததே திருவாதிரைக் களி நிவேதனம் ஆகும்.

அரிசிமா, பயற்றம் பருப்புமா, சீனி அல்லது சர்க்கரை, தண்ணீர், ஏலக்காய், தேங்காய்த்துருவல், முந்திரிப்பருப்பு ஆகியவற்றைச் சேர்த்தே திருவாதிரைக் களி செய்யப்படும். சரி, திருவாதிரைக் களி எப்படி இறைவனுக்கு நிவேதனமாக வந்தது என்பதைக் கீழ் வரும் கதையின் வழி பார்ப்போம்.

சேந்தன் என்ற சிவபக்தன் விறகு வெட்டி விற்று அதன் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்தி வந்தான். தினமும் அவன் சிவனடியார் ஒருவருக்கு உணவளித்த பிறகுதான் சாப்பிடுவான். ஒருநாள் மழை பெய்யவே விறகெல்லாம் ஈரமாகிப் போனதால், அவ் விறகுகளை விற்க முடியாமல் போனது. அன்று அவனது வீட்டுக்கு ஒரு சிவனடியார் வந்தார். ''அவருக்கு உணவு கொடுக்க வேண்டுமே? கையில் பொருள் இல்லாமல் எப்படி அவருக்கு உணவு கொடுப்பது'' என்று மனைவியிடம் சொல்லிக் கவலைப்பட்டாள். ''வீட்டில் கொஞ்சம் அரிசிமா இருக்கின்றது. அதோடு வெல்லத்தையும் கலந்து களி செய்து கொடுப்போம்'' என்று சொல்லி, களி செய்து அவருக்குக் கொடுத்தார்கள். அதைச் சாப்பிட்டச் சிவனடியார் சந்தோஷமாகப் புறப்பட்டுப் போனார்.

அடுத்த நாள் திருவாதிரை நாள் என்பதால் சேந்தனும் அவன் மனைவியும் தில்லையம்பதிக்குச் சென்றார்கள். அங்கு சிவனுடைய வாயில் களி உண்டதற்கான அடையாளமாகக் களி வாயில் ஒட்டிக்கிடக்க, சேந்தன் வீட்டுக்கு வந்து களி உண்டது சிவன் தான் என்று அறிந்த அங்கு கூடியிருந்த மக்கள், சேந்தனையும் அவன் மனைவியையும் வாழ்த்தினார்கள். அன்றில் இருந்துதான் திருவாதிரையன்று களி வைத்துப் படைக்கும் பழக்கம் வந்தது.

### பலன்

நல்ல கணவன் கிட்டுவார், தாலிப் பலம் தரும், பாவங்களை நீக்கும், அறிவும் ஆற்றலும் பெருகும் என்பன போன்ற எண்ணற்றப் பலன்களைக் கொடுக்கும் விரதம் ஆகும். இவ்விரதத்தை விபூலன், வியாக்கிரபாதர் போன்றவர்கள் அனுஷ்டித்துப் பலன் பெற்றார்கள்.



## ஐயப்ப விரதம்

கார்த்திகை மாதம் மாலையணிந்து மார்கழி முழுவதும் பூஜைகள் புரிந்து ஐயப்ப பக்தர்கள் சபரி மலைக்குச் செல்லுவார்கள். ஐயப்பன் பிறந்த நாள் மார்கழி மாதம் பஞ்சமி திதி உத்திர நட்சத்திரமாகும். அவர் சனிக்கிழமை விருச்சிக இலக்கினத்தில் பிறந்தார். எனவே தான் ஐயப்பனை வழிபடுவதற்கு இது சிறப்பான காலப்பகுதியாக விளங்குகின்றது. விரதங்களுக்குள் மிகவும் பய பக்தியுடன் கடைப்பிடிக்கப்பட வேண்டிய விரதம் ஐயப்ப விரதம் ஆகும். நாற்பத்தொரு நாள் விரதம் இருந்து மகரஜோதி கண்டு வந்தால், ஐயப்பன் சகல சௌபாக்கியங்களையும் கொடுப்பான். ஒருவர் தொடர்ந்து பதினெட்டு ஆண்டுகள் ஐயப்பனைத் தரிசித்து வந்தால் அவருக்கு மறு பிறவி இல்லை என்பர்.

### விரதத்தை அனுஷ்டிக்கப் போகிறவர்கள்

- ஏற்கனவே சென்று ஐயப்பனை தரிசித்து வந்த ஒருவரை குருநாதராக ஏற்று அவர் மூலம் மாலை போட்டுக் கொள்ள வேண்டும்.

- மது, மங்கையைத் தொடக் கூடாது. புகை பிடித்தல் கூடாது; புலால் உண்ணக்கூடாது.

■ காவி அல்லது கறுப்பு நிற ஆடை அணிய வேண்டும். சவரம் செய்யக்கூடாது.

■ காலை, மாலை இரு வேளையும் குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும்; இரண்டு வேளையும் பூஜை செய்ய வேண்டும். தனியாகவோ கூட்டமாகவோ பஜனைப் பாடல்களைப் படிக்கவேண்டும்.

■ சுத்தமான உணவையே சாப்பிட வேண்டும்.

■ இவ் விரதம் இருப்பதற்கு ஆண்களுக்கு வயதுக் கட்டுப்பாடு கிடையாது. பெண்கள் ஆயின், பத்து வயதுக்கு உட்பட்ட சிறுமியாகவும் ஐம்பது வயதுக்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

ஐயப்பனுக்கு முன் எல்லோரும் சமம் என்பதை உணர்த்தும் முகமாகவே ஐயப்ப பக்தர்கள் காவியுடை அல்லது கருப்பு ஆடை அணிவர்.

ஐயப்பனைத் தரிசிக்கச் செல்பவர்கள் இருமுடியை சுமந்து செல்லவேண்டும். இருமுடிகட்டின் முன்புறம் அமையக் கூடிய பையில் நெய்த்தேங்காய், அரிசி, பருப்பு, வெற்றிலை, பாக்கு, எலுமிச்சம்பழம், பன்னீர், கற்கண்டு, ஏலக்காய், கற்பூரம், ஊதுபத்தி, சாம்பிராணி, நெற்பொரி, சந்தனம், குங்குமம், மஞ்சள் பொடி, திராட்சை, இரவிக்கைத்துண்டு, மூன்று தேங்காய் என்பன வைக்கப்பட வேண்டும். பின்புறம் அமையக் கூடிய பையில் பக்தர்கள் தமது வழிப் பயணத்துக்குத் தேவையான உணவுப் பொருட்களை வைத்துக் கொள்வார்கள்.

## இருமுடியின் தத்துவம்

ஐயப்பனின் ஆலயத்தை நெருங்க நெருங்க எமது தலையில் உள்ள பாரம் குறைந்து இலேசாகிறது. அது

எமக்கு எதை உணர்த்துகின்றது என்றால் எமது தலையிலே உள்ள ஆணவம் ஐயப்பனை நெருங்கக் குறையும். ஐயனைத் தரிசித்து விட்டுத் திரும்பும் போது எமது அகங்காரம், ஆணவம் முற்றாக நீங்கிவிடுகின்றது. இதைத்தான் இரு முடி தத்துவம் உணர்த்துகின்றது.

## பதினெட்டுப்படிகளின் தத்துவம்

புலன் ஐந்து, பொறி ஐந்து, பிராணன் ஐந்து என்பனவற்றோடு மனம், புத்தி அகங்காரம் எனும் பதினெட்டு தத்துவங்கள் ஆகும்.

தேங்காய்க்குள் நெய் ஊற்றிச் செல்வதற்குக் காரணம், ஹரியும் சிவனும் வேறு அல்ல என்பதை உணர்த்துவதே. நெய்த் தேங்காயின் தத்துவம் இது ஆகும்.

| | | |
|---|---|---|
| ஓம் | சுவாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கன்னமூல கணபதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | காந்தமலை ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஹரிஹர சுதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அன்னதானப் பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆறுமுகன் சோதரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆபத்தில் காப்போனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இன்தமிழ்ச் சுவையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இச்சை தவிர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈசனின் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உண்மைப் பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உலகாளும் காவலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊமைக்கருள் புரிந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊழ்வினை அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எளியோர்க்கு அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எங்கள் குல தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏழை பங்காளனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏகாந்த மூர்த்தியே | சரணம் ஐயப்பா |

| | | |
|---|---|---|
| ஓம் | ஐங்கரனின் தம்பியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஐயமெல்லாம் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒப்பில்லாத் திருமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒளிரும் திருவிளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓங்காரப் பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓதும் மறைப்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஔடதம் ஆனவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சௌபாக்கியம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கலியுக வரதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சபரிமலை சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிவன்மால் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிவவைணவ ஐக்கியமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அச்சன்கோவில் அரசே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆரியங்காவு அய்யனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குளத்துப்புழைப் பாலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பொன்னம்பல வாசனனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வில்லாளி வீரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வீரமணிகண்டனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உத்திரத்தில் உதித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உத்தமனே சத்தியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பம்பையிலே பிறந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பந்தள மாமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சகலகலை வல்லோனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சாந்தம் நிறை மெய்ப்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குருமகனின் குறைதீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | புலிப்பாலைக் கொணர்ந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வன்புலியின் வாகனனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தாயின் நோய் தீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குருவின் குருவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வாபரின் தோழனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | துளசிமணி மார்பனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தூயவுள்ளம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |

| | | |
|---|---|---|
| ஓம் | இருமுடிப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எருமேலி சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நித்தியப் பிரம்மச்சாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நீலவஸ்திர தாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பேட்டை துள்ளும் பேரருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பெரும் ஆணவத்தை அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சாஸ்தாவின் நந்தவனமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சாந்தி தரும் பேரழகே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பேரூர்த்தோடு தரிசனமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பேதமையை ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | காளைகட்டி நிலையமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அதிர்வேட்டுப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அழுதைமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆனந்தமிகு பஜனைப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கல்லிடும் குன்றே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உடும்பாறைக் கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இஞ்சிப் பாறைக் கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கரியிலந்தோடே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கரிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கரிமலை இறக்கமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பெரியானை வட்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிறியானை வட்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பம்பா நதி தீர்த்தமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பாவமெல்லாம் அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | திருவேணி சங்கமமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | திரு இராமர் பாதமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சக்தி பூஜை கொண்டவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சபரிக்கு அருள் செய்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தீபஜோதித் திரு ஒளியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தீராத நோய் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பம்பா விளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பழவினைகள் ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |

ஓம் தென்புலத்தூர் வழிபாடே சரணம் ஐயப்பா
ஓம் திரும்பம்பையில் புண்ணியமே சரணம் ஐயப்பா
ஓம் நீலிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் நிறைவுள்ளம் தருபவனே சரணம் ஐயப்பா
ஓம் அப்பாச்சி மேடே சரணம் ஐயப்பா
ஓம் இப்பாச்சிக் குழியே சரணம் ஐயப்பா
ஓம் சபரி பீடமே சரணம் ஐயப்பா
ஓம் சரங்குத்தி ஆலே சரணம் ஐயப்பா
ஓம் உரல்குழி தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் கருப்பண்ண சாமியே சரணம் ஐயப்பா
ஓம் கருத்த சாமியே சரணம் ஐயப்பா
ஓம் பதினெட்டாம் படியே சரணம் ஐயப்பா
ஓம் பகவானின் சன்னதியே சரணம் ஐயப்பா
ஓம் பரவசப் பேருணர்வே சரணம் ஐயப்பா
ஓம் பசுவின் நெய் அபிஷேகமே சரணம் ஐயப்பா
ஓம் கற்பூரப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் நாகராசப் பிரபுவே சரணம் ஐயப்பா
ஓம் மாளிகைப் புறத்து அம்மனே சரணம் ஐயப்பா
ஓம் மஞ்சமாதா திருவருளே சரணம் ஐயப்பா
ஓம் அக்கினிக் குண்டமே சரணம் ஐயப்பா
ஓம் அலங்காரப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் பஸ்மக் குளமே சரணம் ஐயப்பா
ஓம் சற்குரு நாதனே சரணம் ஐயப்பா
ஓம் மகர ஜோதியே சரணம் ஐயப்பா
ஓம் மங்கள மூர்த்தியே சரணம் ஐயப்பா

## தை மாத விரதங்கள்

### தைப் பூச விரதம்

தை மாதம் வரும் பூச நட்சத்திரத்தன்று முருகன் கோயில்களில் மட்டுமல்லாது ஏனைய கோயில்களிலும் தைப்பூச விரதம் ஒரு பெரு விழாவாகக் கொண்டாடப்



படுகின்றது. இந்த நாளில் பக்தர்கள் மாலை போட்டுக் கொள்வது உண்டு. சிலர் காவடி எடுப்பதும் மொட்டை யடித்துத் தமது நேர்த்திக்கடனைச் செலுத்துவதும் உண்டு. தமிழ்நாட்டிலுள்ள திருவிடை மருதூர் இத்தைப் பூச விழாவுக்குப் பெயர் பெற்ற தலம் ஆகும்.

பூச நட்சத்திரம், தேவகுரு பிரகஸ்பதியின் ஜென்ம நட்சத்திரம் ஆகும். இதற்குக் காற்குளம் என்ற பெயரும் உண்டு. கால் + குளம் என்பதே காற்குளமாயிற்று என்பர். இதன் காரணமாகவே தைப்பூசத்தன்று சில கோயில் களில் தெப்பத் தேர் உற்சவம் நடைபெறுகின்றது.

தைப் பூசத் திருநாளிலே தை – த – தை என்ற இலயத்துக்கு ஏற்ப ஸ்ரீ சிவகாம செளந்தரி அம்பிகையுடன் ஸ்ரீ நடராஜப் பெருமான் ஆனந்த நடனம் ஆடுகின்றார். வியாக்கிரபாதர், பதஞ்சலி முனிவரோடு, பிரம்மா, விஷ்ணு ஆகிய மூர்த்திகளும் தில்லை மூவாயிரவர் மற்றும் ஏனைய அடியார்கள் எல்லோரும் இந்நடனத்தை இந்நாளில் கண்டு ஆனந்தக் கடலில் மூழ்கினார்கள். அதனால்தான் அவன் தாள் வணங்கி அடியார்கள் அனைவரும் தைப்பூசத்திருநாளிலே அவனருளுக்காக இறைஞ்சி நிற்கின்றார்கள். தைப்பூசம் பெளர்ணமியுடன் கூடி வந்தால் மிக்க விசேடம். ஆதலால் இத்தினம், ஸ்ரீ நடராஜர், அம்பிகை, முருகன் ஆகியோருக்கு உகந்த நன்னாளாகும்.

## விரத முறை

காலையில் எழுந்து நீராடி, பூஜை செய்து காலை உணவை உண்ணாது விடுத்து, கோயிலுக்குச் சென்று அங்கு நடக்கும் வழிபாட்டில் கலந்து கொண்ட பின் உணவு உண்பார்கள். மாலையில் பால் பழத்தையோ, பலகாரங்களையோ உண்டு அன்றைய தினம் முருகனுடைய பாடல்களைப் பாடியபடி இருக்க வேண்டும். முறைப்படி இவ்விரதத்தை அனுஷ்டித்தால் நாம் நினைக்கின்ற காரியம் நடக்கும். குடும்ப ஒற்றுமை வலுப்பெறும் என்பர்.

## தை அமாவாசை விரதம்

பாவங்கள் நீங்கக் கங்கா ஸ்நானம் செய்யவும், இறந்த நமது முன்னோர்களை நினைத்து வணங்கச் சிறப்பு வாய்ந்த நாளாகவும் அமாவாசை நாட்கள் காணப் பட்டாலும், தை அமாவாசை மேலும் சிறப்பு வாய்ந்தது. அபிராமிப்பட்டரை அன்னை அபிராமி காத்தருளியது இந்த தை அமாவாசை நாளிலேயேயாகும். இதனை யொட்டித் திருக்கடவூரில் ஸ்ரீ அபிராமிப்பட்டர் ஸ்ரீ அபிராமி அம்மையின் தரிசனத்தைக் காணும் திருவிழா நடைபெறும்.

## தை அமாவாசையும் அபிராமி பட்டரும்

தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு சரபோஜி மன்னன் ஆண்டு வந்தான். அவன் அபிராமி அம்மன் மீது அளவில்லாத பக்தியுடையவன். ஒரு தை அமாவாசை அன்று மன்னன் தனது பரிவாரங்களுடன் அன்னையைத் தரிசிக்க வந்தான். அப்போது அச்சந்நிதியில் அன்னை அபிராமியிடத்து அளவற்ற பக்தி கொண்ட சுப்பிரமணியம் என்ற அந்தணர், மன்னன் வந்ததும் தெரியாது தன்னை மறந்து தியானத்தில் ஆழ்ந்திருந்தார்.

அவருடைய முகத்தில் ஒளி தவழ்வதையும் புத்தொளி வீசுவதையும் கூர்ந்து கண்ணுற்ற மன்னன், அருகில் இருந்தவர்களிடம் ''இவர் யார்'' என்று வினவினான்.

அருகிலிருந்தவர்கள், ''இவர் ஒரு பித்தர், பார்க்கின்ற பெண்களை எல்லாம் அன்னை அபிராமி என்று கருதிக்கொண்டு பூக்களைத் தூவி வணங்குவார்'' என்றார்கள். இவருடன் ஏதாவது பேச வேண்டும் என்று நினைத்த மன்னன் ''பட்டரே; இன்று என்ன திதி?'' என்று கேட்க. அன்னையை அகக்கண்ணிலே ஜோதிப்பிழம்பாய்ப் பார்த்து மெய்சிலிர்க்க நின்ற பட்டர், ''இன்று பௌர்ணமி'' என்றார். இதைக் கேட்ட மன்னன், இன்று பௌர்ணமி இல்லை. அமாவாசை அல்லவா'' என்று மீண்டும் கேட்டார். பட்டர் மீண்டும் பௌர்ணமி என்று சொல்ல இவர் மீது பொறாமை கொண்ட சிலர் மகிழ்ந்தார்கள். மன்னனும் இவர் பித்தன்தான் என எண்ணியபடி அரண்மனை ஏகினார்.

தியானம் கலைந்து பட்டர் எழுந்த போது, ஆலயத்து அர்ச்சகர் மூலம் நடந்ததை அறிந்து மிகவும் வருந்தினார். அன்னையே! உன்மீது நான் கொண்ட பக்தியை அறியாத சிலர் என்னைப் பித்தன் என்று நினைத்து பழித்துப் பேசிவருவது இன்று மெய்யாகிவிட்டதே என்று கலங்கினார். அவமானத்தைப் பொறுக்க முடியாத பட்டர் ஆலயத்துக்கு முன்னால் குழிவெட்டி, அதில் தீ மூட்டி அதன் மேலே நூறு ஆரம் கொண்ட ஓர் உறியைக் கட்டித் தொங்கவிட்டார். பின்னர் அதன் மீது ஏறி அமர்ந்தபடி அன்னையை வேண்டினார். ''உன்னை நினைத்து நான் மெய்மறந்து இருந்ததால் எனக்கு ஏற்பட்ட இந்தப் பழியை நீயே துடைக்க வேண்டும்; இல்லையென்றால் எனது உடலை இந்தத் தீக்கு இரையாக்குவேன்'' என்று நினைத்து ''உதிக்கின்ற செங்கதிர்'' என்று பாடத் தொடங்கினார்.

**உதிக்கின்ற செங்கதிர் உச்சித்**
**திலகம் உணர்வுடையோர்**
**மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்**
**போது மலர்க்கமலை**
**துதிக்கின்ற மின்கொடி மென்கடிக்**
**குங்கும தோயமென்ன**
**விதிக்கின்ற மேனி அபிராமி**
**என்றன் விழுத்துணையே.**

ஒவ்வொரு பாடலும் முடிந்த உடனே, உறியின் ஒவ்வொரு கயிற்றையும் அறுத்துக் கொண்டு வந்தவர், எழுபத்தெட்டுப் பாடல்களைப் பாடிய பின் எழுபத்தொன்பதாவது பாடல் ஆன,

**விழிக்கே அருளுண்டு அபிராம**
**வல்லிக்கு வேதம் சொன்ன**
**வழிக்கே வழிபட நெஞ்சுண்டு!**
**எமக்கு அவ்வழிகிடக்கப்**
**பழிக்கே கழன்றுவெம் பாவங்க**
**ளேசெய்து பாழ்நரகக்**
**குழிக்கே அழுந்தும் கயவர்தம்**
**மோடென்ன கூட்டினியே!**

என்று பாடி முடிந்ததும், அன்னை வெளிப்பட்டுத் தோன்றிப் பட்டருக்குக் காட்சி கொடுத்து, தன்னுடைய திருத்தோட்டை வானிலே விட்டெறிந்து காரிருள் சூழ்ந்த வானிலே முழுநிலவைத் தோற்றுவித்தாள். ''பக்தனே! வாய் சோர்ந்து மன்னனிடம் கூறிய சொல்லை மெய் என நிறுவினோம், நீர் பாடிய இவ்வந்தாதியைப் பாடி நூற்றொரு பாடல்களாக்கி இதற்கு அபிராமி அந்தாதி என்று பெயர் சூட்டுவீராக'' என ஆணையிட்டு மறைந்தாள். அன்னையை நேரில் கண்டு ஆனந்தம் அடைந்த பட்டர்.

கூட்டிய வாஎன்னைத் தன்னடி
யாரில் கொடியவினை
ஓட்டிய வடி என்கண் ஓடிய
வாதன்னை உள்ளவண்ணம்
காட்டிய வாகண்ட கண்ணும்
மனமும் களிக்கின்றவா
ஆட்டிய வாநடம் ஆடகத்
தாமரை ஆரணங்கே!

எனப் பாடி, தொடர்ந்து இருபத்தொரு பாடல்களைப் பாடி அந்தாதியை முடித்தார். இதைக் கண்ட மன்னன் கண்ணீர் சொரிய, அவர்தம் பெருமையைத் தெரியாமல் தான் செய்த பாவத்தை மன்னிக்கும்படி வேண்டிப் பக்தரின் காலில் விழுந்தான். ''மன்னா! யாருக்கும் கிடைக்காத அன்னையின் திருவருள் உன்னால் எனக்குக் கிடைத்திருக்கிறது. எல்லாம் அந்த அன்னையின் திருவிளையாடலே! இதில் உன் பிழை என்ன இருக்கிறது சொல்'' என்று பட்டர் சொல்லி முடித்தார். மன்னன் பட்டருக்கு ஏராளமான மானியம் கொடுத்துத் தலைமுறை தலைமுறையாக அதை அனுபவிக்கவும் ஆவனம் செய்தான். அன்னை பட்டருக்குக் காட்சி கொடுத்த திருநாள் தை மாதம் அமாவாசை நாளாகும். இந்நாளில் மட்டுமல்லாது தினமும் அபிராமி அந்தாதி பாடி அன்னையின் அருட்கடாட்சத்தைப் பெறுவோம்.

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியி லாத உடலும்
சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்

தொலையாத நிதியமும் கோணாகக் கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்,
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி
அருள்வாய் அபிராமியே.

## மாசி மாதம்

### மாசி மகம்

மாசி மாதம், சந்திரன் சிம்ம இராசியில் மகம் எனும் நட்சத்திரத்தில் நுழையும் நாளன்று, ஆலயங்களில் சிறப்பான வழிபாடு நடைபெற்று வருகின்றது. கும்பகோணம் ஆதிக்கும்பேசுவரர் ஆலயத்தில் 'மகா மகம்' என்ற பெயரில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பெரும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. அடுத்த மகாமகம் 2004-ஆம் ஆண்டில் நிகழும்.

### கதை

ஆறுகளான கங்கையும், யமுனையும் சிவபெருமானிடம் போய்க் கேட்டன: ''இறைவா! பல கோடி மக்கள் தாங்கள் செய்த பாவங்களை எங்களில் முழுகுவதால் கழுவித் தீர்க்கின்றார்கள். ஆனால், நாங்கள் எங்கே போய் அவற்றைத் தீர்ப்பது?'' என்று. அதற்குச் சிவன், ''நீங்கள் மாசி மாத மகத்தில் கும்பகோணம் மகா மகக் குளத்தில் தங்குங்கள்'' என்றார். அந்தப் புண்ணிய குளத்தில் நீராடியவர்களுக்கு முற்பிறவிப் பாவங்கள் அகலும் என்றும், ஆண் அல்லது பெண் குழந்தைகள் வேண்டும் என்று விரதம் இருப்பவர்களுக்கு வேண்டியவாறே பிள்ளை பிறக்கும் என்றும் சொல்லுவார்கள்.

## மகா சிவராத்திரி

ஆண்டுதோறும் மாசி மாதம் தேய்பிறைச் சதுர்த்தசி கூடிய புண்ணிய தினத்தில் மகா சிவராத்திரி விரதம் வருகின்றது. சக்திக்கு ஒன்பது இராத்திரி – அது நவராத்திரி; சிவனுக்கு ஓர் இராத்திரி, அது சிவராத்திரி என்பார்கள். ஐந்து வகையான சிவராத்திரிகள் கொண்டாடப்படுகின்றன. அவை முறையே :

*1)* **மகா சிவராத்திரி :** மாசி மாதத்தில் வரும் கிருஷ்ணபட்ச சதுர்த்தசி அன்று வருவது மகா சிவராத்திரி ஆகும்.

*2)* **யோக சிவராத்திரி :** திங்கட்கிழமை முழுவதும் அமாவாசையாக வந்தால் அது யோக சிவராத்திரி ஆகும்.

*3)* **நித்திய சிவராத்திரி :** பன்னிரண்டு மாதங்களிலும் வரும் தேய்பிறைச் சதுர்த்தசி 12, வளர்பிறைச் சதுர்த்தசி 12 ஆக இருபத்து நான்கும் நித்திய சிவராத்திரியாகும்.

*4)* **பட்ச சிவராத்திரி :** தை மாதம் தேய்பிறைப் பிரதமை தொடங்கிப் பதின்மூன்று நாள் வரையில், நியமத்துடன் ஒரு பொழுது உணவு உண்டு, பதினான்காவது நாளான சதுர்த்தசியன்று உபவாசம் இருப்பது பட்ச சிவராத்திரி ஆகும்.

*5)* **மாத சிவராத்திரி :** மாதம் தோறும் வரும் அமாவாசைக்கு முன்தினமாகிய சதுர்த்தசி திதியில் வருவது மாத சிவராத்திரியாகும்.

இவற்றில் ஒன்றையோ, இரண்டையே, மூன்றையோ, நான்கையோ அல்லது ஐந்தையுமோ அவரவர் சக்திக்கு ஏற்பப் பிடிக்கலாம்.

### விரத முறை

காலையில் குளிர்ந்த நீரில் குளித்துவிட்டு, வீட்டில் சிவபூஜை செய்வதோடு சிவாலயத்துக்குச் சென்று அங்கு

நடக்கும் பூஜைகளில் கலந்துகொண்டுள்ள வேளைகளில் சிவ தோத்திரங்களை ஓதி வரவேண்டும். வசதி யானவர்கள் மாலையில் ஆலயத்துக்குச் சென்று நான்கு ஜாம பூஜைகளில் கலந்து கொள்ளலாம்; அல்லது வீட்டில் பூஜை செய்து, நித்திரை நீத்து, சிவதோத்திரம் பாராயணம் செய்து, மறுநாள் காலையில் புனித நீராடி சூரியன் உதித்து ஆறு நாழிகைக்கு முன் பாரணை செய்ய வேண்டும். அன்றைப் பகல் பொழுதைச் சிவபுராணம் படித்தோ, அல்லது கேட்டோ கழிக்க வேண்டும். மாலையில் வீட்டில் பூஜை செய்து, பால், பழம் சாப்பிட்டு விரதத்தை முடிக்கலாம்.

இந்த விரதத்தை உணவு உண்ணாமல் இருந்து அனுஷ்டிக்க முடியாதவர்கள், முதல் ஜாம பூஜையின் பின் கொஞ்சம் நீரோ, பாலோ குடிக்கலாம்.

நான்கு ஜாமம் என்பது மாலை 6 மணி தொடக்கம் காலை 6 மணி வரையும் உள்ள 12 மணி நேரக் காலப் பகுதியைக் குறிக்கும். ஒரு ஜாமம் என்பது 3 மணி நேரம் ஆகும்.

## நான்கு ஜாம பூஜை முறை

**முதல் ஜாமம் :** பஞ்சகவ்யம் என்று சொல்லப்படு கின்ற பால், தயிர், நெய், கோமயம், கோசலம் ஆகியவற்றால் அபிஷேகம் செய்து, வில்வம் சாத்தி, தாமரைப் பூக்கொண்டு அர்ச்சனை செய்து, பயற்றம் பருப்பு சேர்ந்த பொங்கலை நைவேத்தியம் செய்ய வேண்டும். இருக்கு வேதம் ஓத வேண்டும்.

**இரண்டாம் ஜாமம் :** பஞ்சாமிர்தத்தால் அபிஷேகம் செய்து, சந்தனமும் தாமரைப் பூவும் சாத்தி, துளசியால் அர்ச்சித்து, பாயசம் நிவேதித்து யஜுர் வேதம் ஓத வேண்டும்.

**மூன்றாம் ஜாமம் :** தேனால் அபிஷேகம் செய்து, அரைத்த பச்சைக் கற்பூரத்துடன் சாதிமுல்லைப் பூவும் சாத்த வேண்டும். மூன்று இலைகள் கொண்ட வில்வத்தால் அர்ச்சனை செய்து அன்னம் நிவேதித்து சாம வேதம் ஓத வேண்டும்.

**நான்காம் ஜாமம் :** கரும்புச் சாற்றால் அபிஷேகம் செய்து, அரைத்த குங்குமப் பூவுடன் நந்தியாவட்டைப் பூவும் சாத்தி, நீலோற்பலப் பூவால் அர்ச்சனை செய்து, அன்னம் நிவேதித்து அதர்வண வேதம் ஓத வேண்டும்.



## சிவராத்திரி பற்றிய கதைகள்

### கதை - 1

முன்பு ஊழிக் காலத்தில், உலக முடிவு நாளில் பிரம்மன் இறந்து போனதாகவும், அதனால் இரவுப் பொழுதில் உமையம்மை சிவனைப் பூசித்து அனைவரையும் மோட்சம் பெற வைத்தாள் என்றும், அந்த இரவே சிவராத்திரி என்றும் சொல்லப்படுகின்றது.

### கதை - 2

வேடனொருவன் காட்டிலே வழிதவறியதால் இரவு நேரத்தைக் கழிப்பதற்காக ஒரு வில்வ மரத்தின் மேல் ஏறி அமர்ந்திருந்தான். தூங்கிக் கீழே விழாமல் விழித்திருப்

பதற்காக அம்மரத்தின் இலைகளைப் பறித்துக் கீழே போட்டுக் கொண்டிருந்தான். அவ் வில்வ மரத்தின் கீழ் சிவலிங்கம் ஒன்று இருந்தது. அவன் போட்ட இலைகள் அச்சிவலிங்கத்தின் மீது விழுந்தன. காலையில் மரத்தை விட்டு இறங்கி தன் இருப்பிடம் நோக்கிச் சென்று கொண்டிருந்தான். எதிரே அந்த நாட்டு மன்னனும், மக்களும் பட்டத்து யானையுடன், பூரண கும்பம், மேள தாளத்துடன் வந்து கொண்டிருந்தனர். வேடனைக் கண்டதும் யானை மாலையை வேடனுக்கு அணிவித்தது. மனம் மகிழ்ந்த மன்னன், வேடனை அந்நாட்டின் மன்னனாக ஆக்கினான்.

இவ்வாறு பல கதைகள் சிவராத்திரியைப் பற்றிச் சொல்லப்படுகின்றன.

இரவு கண்விழித்து இலிங்கத்தின் மீது வில்வ இலை போட்ட வேடனுக்கே அந்தப் பேறு என்றால், பயபக்தி யுடன் விரதம் இருப்பவர்களுக்கு எத்தகைய பேறு கிடைக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்த்துக் கொள்ளலாம்.

### பலன்

இப்படி இருபத்து நான்கு வருடங்கள் சிவராத்திரி விரதத்தை அனுஷ்டித்து வந்தால் அவர்கள் வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் எய்துவதோடு சிவகதியும் அடைவார்கள்.

### சிவனை அர்ச்சிப்பதற்கு உரிய மந்திரங்கள்

ஓம் மஹேஸ்வராய நம:
ஓம் பஸ்மோத்தூலித விக்ரஹாய நம:
ஓம் ஸ்மசானவாஸினே நம:
ஓம் விஸ்வநாதாய நம:

| | | |
|---|---|---|
| ஓம் | மஹாதேவாய | நம: |
| ஓம் | சூலபாணயே | நம: |
| ஓம் | த்ரிலோசனாய | நம: |
| ஓம் | புஜங்கபூஷணாய | நம: |
| ஓம் | ம்ருகபாணயே | நம: |
| ஓம் | டக்காவதே | நம: |
| ஓம் | சிவாய | நம: |
| ஓம் | நடனேசாய | நம: |
| ஓம் | காலகாலாய | நம: |
| ஓம் | அர்த்தநாரீசாய | நம: |
| ஓம் | பிக்ஷாடனாய | நம: |
| ஓம் | ஹுதாசனஸஹாயாய | நம: |
| ஓம் | கங்காதராய | நம: |
| ஓம் | உன்மத்தாய | நம: |
| ஓம் | ஊர்த்வரேதஸே | நம: |
| ஓம் | கைலாஸ வாஸினே | நம: |
| ஓம் | நீலகண்டாய | நம: |
| ஓம் | பசுபதயே | நம: |
| ஓம் | வ்ருஷ வாஹனாய | நம: |
| ஓம் | த்யாகேசாய | நம: |
| ஓம் | த்ரிலோகக் குடும்பினே | நம: |
| ஓம் | ருத்ராய | நம: |
| ஓம் | ஸதா சிவாய | நம: |

## ஸ்ரீ ருத்ர காயத்ரீ

ஓம் தத் புருஷாய வித்மஹே
மஹா தேவாய தீமஹி
தந்நோ ருத்ர: ப்ரசோதயாத்

## காரடையார் நோன்பு

இவ்விரதம் மாசி மாதம் ஏகாதசியை ஒட்டி வரும் விரதமாகும். திருமணமான பெண்கள் மாங்கல்ய

பலத்துக்காக மேற்கொள்ளும் விரதம் இது ஆகும். காரடையார் நோன்பு, சாவித்திரி விரதம், காமாட்சி விரதம் எனப் பல பெயர்களைப் பெற்ற மிக உன்னத மான விரதம் ஆகும்.

**கதை**

அஸ்வபதி மன்னனுடைய மகளான சாவித்திரி, காட்டிலே வாழ்ந்து கொண்டிருந்த சத்தியவான் என்ற இளைஞனைச் சந்தித்தாள். இருவருக்கும் காதல் மலர்ந்தது. நாட்டுக்குத் திரும்பியதும் சாவித்திரி தனக்கும் சத்தியவானுக்கும் இடையே நிலவும் காதலைப் பற்றித் தன் தந்தையிடம் சொன்னாள். மன்னர் அவன் யார் என்று விசாரித்ததில் அவன் ஓர் அரசகுமாரன் என்றும், அவன் அற்ப ஆயுள் உடையவன் என்பதுமான இரகசியத்தை நாரதர் மூலம் அறிந்த மன்னன், ''இந்த வரன் வேண்டாம்'' என்று சாவித்திரிக்கு ஆலோசனை சொன்னார். சாவித்திரி அதைக் கேட்பதாக இல்லை. சத்தியவானைத்தான் திருமணம் செய்துகொள்வேன் என்று பிடிவாதமாக இருந்தாள். வேறு வழியில்லாமல் மன்னன் சத்தியவானுக்கே சாவித்திரியைத் திருமணம் செய்து கொடுத்தார்.

சரியாக ஒரு வருஷத்துக்கு அப்புறம் காட்டிலே சத்தியவான், சாவித்திரியின் மடியில் படுத்தபடி மரணமானான். அன்றைய தினம் காரடை நோன்பு நாள், அச்சமயம் இயமன் யார் கண்ணிலும் படாமல் வந்து நின்றான். ஆனாலும் உத்தமியான சாவித்திரியுடைய பார்வையிலிருந்து அவனால் தப்ப முடியவில்லை. ஆனால், அவன் அதை வெளிக்காட்டாமல் சத்திய வானின் உயிரை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். சாவித்திரி விடவில்லை; இயமனைப் பின் தொடர்ந்தாள். பயந்துபோன இயமன், ''உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்'' என்றான். இயமனிடம்

சாவித்திரி போராடிக் கேட்ட வரம், ''எனக்குப் பிறக்கின்ற நூறு குழந்தைகளைத் தன்னுடைய மடியில் வைத்துக் கொண்டு என் மாமனார் கொஞ்ச வேண்டும்'' என்று வரம் கேட்டாள். அவள் இப்படிக் கேட்டதும் யோசிக்காமல் இயமன், ''அப்படியே ஆகட்டும்'' என்றான். ''சரி, அப்போது என் கணவரின் உயிரைத் திருப்பித் தா'' என்றாள். அவள் இப்படிக் கேட்டதன் பின்தான் யமன் விழித்துக் கொண்டான். கொடுத்த வரத்தை மீளப்பெற முடியாத இயமன், சத்தியவானுடைய உயிரைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டான்.

சத்தியவானின் உயிரை சாவித்திரி மீளப் பெறுவதற்குக் காரணமாக இருந்தது சாவித்திரி கடைப்பிடித்த காரடையார் நோன்பு விரதமே ஆகும். இவ்விரதத்தைக் காமாட்சியம்மன் கடைப்பிடித்திருக்கின்றாள். அதனால் இவ்விரதத்துக்குக் காமாட்சி விரதம் என்றும் ஒரு பெயர் உண்டு.

## விரத முறை

சுமங்கலிப் பெண்கள் காலையில் எழுந்து நீராடி முகத்தில் மஞ்சள் பூசி, நெற்றியில் குங்குமப் பொட்டு வைத்து, வீட்டைச் சுத்தம் செய்து பூஜையறைக்குள் கோலம் போட்டு அதற்கு மேலே கும்பம் வைக்க வேண்டும். கும்பத்துக்குச் சந்தனம், குங்குமப் பொட்டு வைத்து, பூ வைத்து, அக்கும்பத்துக்கு மேலே மஞ்சள் தடவி ஆக்கப்பட்ட நோன்புக் கயிற்றை மாட்டிவிட வேண்டும். இவ்விரதத்துக்கு நைவேத்தியமாகக் காரடை செய்து வைக்கலாம்.

காரடையானது, கார் அரிசியை மாவாக்கி அத்துடன் புதிதாக விளைந்த துவரையையும் சேர்த்து அடை தட்டி நிவேதனம் செய்து, அம்மன் ஸ்லோகம் சொல்லி பூஜை செய்து முடிந்ததும், நோன்புக் கயிற்றை எடுத்து நீடித்த

மாங்கல்ய பலம் தா அம்மா என்று அம்மனை நினைத்துக் கணவன் கையால் கையில் அல்லது கழுத்தில் கட்டிக் கொள்ளலாம்.

## பங்குனி மாதம்



### பங்குனி உத்தரம்

பங்குனி உத்தர விரதம், பங்குனி மாதம் உத்தர நட்சத்திரத்தன்று வருகின்றது. இவ்விரதம் முருகனையும், சிவனையும் வேண்டி அனுஷ்டிக்கும் விரதம் ஆகும். இலங்கையில் ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்திலும், செல்வச்சந்நிதியிலும், இந்தியாவில் பழனி முருகன் கோயிலிலும், வேறு பல கோயில் களிலும் பெரு விழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் பிறந்த நாள் மட்டுமல்லாது மதுரை மீனாட்சி அம்மன் – சோமசுந்தரப் பெருமான் திருமணம், ஆண்டாள் – அரங்கநாதர் திருமணம், ஸ்ரீ இராமர் – சீதை திருமணம் என பல தெய்வத் திருமணங்கள் கூட இந்தப் பங்குனி உத்தர நாளில்தான் நடந்திருக்கின்றன.

நாற்பத்தெட்டு ஆண்டுகளுக்கு இந்த விரதத்தை அனுஷ்டித்து வந்தால் அடுத்த ஜன்மத்தில் தெய்வீகப் பிறவியைப் பெறுவார்கள் என்பர்.

## பிரதோஷ விரதம்

பிரதோஷ விரதம் என்பது தோஷங்களை நிவர்த்தி செய்வது என்று பொருள்படும். இப்பிரதோஷ விரதம் ஐந்து வகைப்படும்.

1) நித்திய பிரதோஷம் : தினமும் மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரையுள்ள காலப்பகுதி நித்திய பிரதோஷம் எனப்படும். இந்தப் பிரதோஷ காலத்தில் எம்பெருமான் ஆடிய தாண்டவத்தின் பெயர் ''சந்தியா தாண்டவம்'' ஆகும்.

2) பட்ச பிரதோஷம் : வளர்பிறையில் (சுக்கிலபட்சம்) சதுர்த்தசி திதியில் மாலைக் காலமே பட்ச பிரதோஷம் எனப்படும். இந்தப் பிரதோஷ காலத்தில் எம்பெருமான் ஆடிய தாண்டவத்தின் பெயர் ''சதுரானந்தத் தாண்டவம்'' ஆகும்.

3) மாத பிரதோஷம் : மாதம் தோறும் தேய்பிறை (கிருஷ்ணபட்சம்) திரயோதசி திதியில் வரும் பிரதோஷம் ''மாத பிரதோஷம்'' எனப்படும். இந்தப் பிரதோஷ காலத்தில் எம்பெருமான் ஆடிய தாண்டவத்தின் பெயர் ''லதா தாண்டவம்'' ஆகும்.

4) மஹா பிரதோஷம் : தேய்பிறை (கிருஷ்ண பட்சம்) திரயோதசி திதி சனிக்கிழமைகளில் வந்தால் அதுவே மிகவும் சிறப்புடைய மஹா பிரதோஷம் எனப்படும். இந்தப் பிரதோஷ காலத்தில் எம்பெருமான் ஆடிய தாண்டவத்தின் பெயர் ''நவசக்தி தாண்டவம்'' ஆகும்.

5) பிரளய பிரதோஷம் : பிரளய காலத்தில் உயிர்கள் எல்லாம் சிவனிடம் ஒடுங்கும். அதுவே பிரளய பிரதோஷம் எனப்படும். இந்தப் பிரதோஷ காலத்தில் எம்பெருமான் ஆடிய தாண்டவத்தின் பெயர் ''ஊர்த்துவ தாண்டவம்'' ஆகும்.

## விரத முறை

காலையில் நித்திரை விட்டு எழுந்து, நீராடி வீட்டில் இறைவனை வணங்கி, பகல் பொழுதெல்லாம் சிவனுக்குரிய ஸ்தோத்திரங்களை ஓதிக் கொண்டிருக்கலாம். மாலை ஆலயத்துக்குச் சென்று சிவதரிசனம் செய்தல் வேண்டும். ஆலயத்துக்கு வந்துள்ள அடியார்களுடனோ அல்லது தனியாகவோ இருந்து பஞ்சாட்சர ஜெபம் செய்து பக்திப் பாடல்களைப் பாடுவது நல்லது. வீடு திரும்பியதும் பால், பழம், மட்டும் அருந்தி அல்லது முழுமையான உபவாசம் இருந்து, அடுத்த நாள் காலை பாரணை செய்து கொள்ள வேண்டும்.

## கதை

நரை, மூப்பு, இன்பப் போதை, மரணம் போன்ற துன்பங்களில் இருந்து விடுபடுவதற்கும், அசுரர்களின் கொடுமைகளில் இருந்து தப்புவதற்கும் எண்ணிய தேவர்கள், திருமாலின் ஆலோசனையின் படி மந்தர மலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்தார்கள். அம்மலை சரிந்து விடாது ''கூர்ம அவதாரம்'' எனும் ஆமை வடிவம் எடுத்துப் பரந்தாமன் மலையைத் தாங்கிப் பிடித்தார். தேவர்களுடன் அசுரர்களும் பாற்கடலைக் கடைவதற்கு உதவினார்கள். அந்த நாள் தசமி திதியாகும். பிறகு தேவர்கள் தொடர்ந்து திருப்பாற்கடலைக் கடைந்து வருகையில் மறுநாள் ஏகாதசித் திதியன்று வாசுகிப் பாம்புக்கு ஏற்பட்ட வலியினால் அது நஞ்சை உமிழ்ந்தது. இது ஆலகாலம் என்று பெயர் பெற்றது.

இந் நஞ்சால் வெள்ளை நிறமாக இருந்த பரந்தாமன் கரு நீல நிறமானார். அந்த நஞ்சு தேவர்களையும்

தாக்கியது. தேவர்கள் பயந்து சிவனிடம் முறையிடத் திருக் கைலாயத்துக்கு வலமாக ஓடினார்கள். அப்பொழுது நஞ்சு அவர்களை அப்பிரதட்சிணமாகத் தாக்கியது. தேவர்கள் வந்த வழியே திரும்பி வர, நஞ்சு அந்தப் பக்கத்திலும் தாக்கியது. இவ்வாறு வலமும், இடமுமாக தாக்கியது. அதிலிருந்து தப்பி ஓடிய தேவர்கள் திருக்கைலாயத்துக்குச் சென்றார்கள். அங்கு அவர்கள் முதலில் நந்தி தேவரை வணங்கினார்கள்.

''நந்தி தேவரே! நாம் பாற் கடலைக் கடைந்த போது கொடிய நஞ்சு வந்து விட்டது. அது அணுக முடியாத அளவுக்குக் கொடிய நஞ்சாக இருக்கின்றது. அதற்கு ஒரு மார்க்கம் காண சர்வலோகேஸ்வரனைக் காண வந்தோம்'' என்றார்கள்.

நந்திதேவர் அவர்களை வாசலின் முன் நிற்கும்படி கூறிவிட்டு, சிவனிடம் போய் விபரத்தைக் கூறினார். சிவபெருமான் அவர்களை உள்ளே வரும்படி அழைத்தார்.

தேவர்கள் உள்ளே சென்று சிவனை வணங்கித் தங்களைக் காக்கும்படி இறைஞ்சினார்கள். சிவ பெருமான் தனதருகே நின்ற மூன்றாவது குருவான சுந்தரரைப் பார்த்து ''சுந்தரா! (அந் நஞ்சைச் சுட்டிக் காட்டி) அவ்விடத்தை இவ்விடத்துக்குக் கொண்டு வா'' என்றார். சுந்தரர் அந் நஞ்சை நாவல் பழம் போல உருட்டிக் கொண்டு வந்து சிவபெருமானிடம் தந்தார்.

சிவபெருமான் அந் நஞ்சை விழுங்க, அக்கொடிய நஞ்சு உட்சென்றால் உள் முகத்தில் உள்ள உயிர்கள் அழிந்து விடும், உமிழ்ந்தால் வெளியே உள்ள உயிர்கள் அழிந்து விடும்; ஆகவே நஞ்சு உள்ளே போகாமலும் வெளியே வராமலும் இருக்க உமாதேவியார் சிவபெருமானின் தொண்டையைத் தனது கைகளால்

பிடித்துக் கொண்டார். இதன் காரணமாகவே அவர் நீலகண்டன், மணிகண்டன் என்றெல்லாம் பெயர் பெற்றார். சிவபெருமான் தேவர்களை இவ்வாறு காத்த தினமே ''ஏகாதசி திதி'' ஆகும்.

அதைத் தொடர்ந்து தேவர்கள் மீண்டும் அசுரர்களுடன் சேர்ந்து பாற்கடலைக் கடைந்தார்கள். அவ்வாறு அவர்கள் கடைந்தபோது அதிலிருந்து இலட்சுமி, காமதேனு, கற்பகதரு[1], ஐராவதம் என்ற வெள்ளை யானை, சிந்தாமணி[2] எனப் பல உயிர்களும், பொருட்களும் வெளிவந்தன. இது நடைபெற்ற அன்று ஏகாதசி திதியாகும். இலட்சுமியைப் பரந்தாமன் தனது துணைவியாக ஏற்றுக் கொண்டார். மீண்டும் மீண்டும் அவர்கள் கடைந்ததின் பயனாக அமிர்தம் கிடைத்தது. அமிர்தம் கிடைத்த நாளே துவாதசி ஆகும்.

அமுதத்தை அசுரர்கள் உண்டால் மிகுந்த பலம் பெறுபராதலால் உலகத்துக்குத் தீங்கு வரும் என்று எண்ணிய மஹா விஷ்ணு, அழகிய மோகினி வடிவத்தால் அவர்களை மயங்க வைத்து அமுதத்தைத் தேவர்களுக்கு மட்டும் பகிர்ந்து கொடுத்தார். அமுதத்தை உண்ட தேவர்கள், அமுதம் கிடைப்பதற்குக் காரணமாக இருந்த சிவனை மறந்தார்கள். மறுநாள் திரயோதசி அன்று தேவர்கள் தங்கள் செயலுக்கு வருந்தி திருக்கைலாயத்துக்குச் சென்று தங்களை மன்னிக்குமாறு சிவனிடம் வேண்டினார்கள். அவர்களை மன்னித்த சிவன், தேவர்களை மகிழ்விக்க, பார்வதி அன்னை

---

1) கற்பகதரு – நாம் வேண்டிய எதையும் வழங்கும் தேவலோக மரம்.

2) சிந்தாமணி – நாம் விரும்பியதைத் தர வல்ல தெய்வீக இரத்தினக் கல்.

பார்த்திருக்க மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரையான நேரத்தில் நந்தி தேவரின் இரு கொம்புகளுக்கிடையில் நின்று தாண்டவம் ஆடினார். அப்பொழுது சரஸ்வதி வீணை வாசித்தாள். இந்திரன் புல்லாங்குழல் இசைத்தார். பிரம்மதேவர் தாளம் போட்டார். இலட்சுமி தேவி பாடினார். திருமால் மிருதங்கம் வாசித்தார். தேவர்கள் இறைவனின் நடனத்தைக் கண்டு மகிழ்ந்து வணங்கினார்கள். அது முதல் திரயோதசி திதியன்று மாலை நேரம் பிரதோஷ காலம் என்று வழங்கலாயிற்று, எம்பெருமான் விஷம் உண்டதும் திருநடனக் காட்சி கொடுத்து அருளியதும் சனிக்கிழமையோடு கூடிய பிரதோஷ காலம் ஆகையால் சனிப்பிரதோஷம் மிகவும் சிறந்ததென்பார்கள்.

## சோம சூத்திரப் பிரதட்சணம்

பிரதோஷ விரத நாளில் வழமையைப் போல வழிபடாமல் சோம சூத்ரப் பிரதட்சணம் செய்து வழிபடுதல் வேண்டும். அதாவது, முதலில் நந்தி தேவரை வணங்கி இடமாகச் (அப்பிரதட்சணமாகச்) சென்று சண்டேஸ்வரரை வணங்கி விட்டு அங்கிருந்து பிரதட்சணமாக நந்தி தேவரை அடைந்து மீண்டும் வணங்கிப் பின்னர் வலமாகப் பிரதட்சணம் செய்து கோமுகியைத் தாண்டாது அங்கிருந்தபடி விமான தரிசனம் செய்து பிரதோஷ லிங்கத்தையும் தரிசித்துவிட்டு மீண்டும் அப்பிரதட்சணமாக வந்து நந்தி தேவரின் இரு கொம்புகளுக்கிடையே சிவதரிசனம் செய்து வணங்க வேண்டும். இப்படிச் செய்வது ஒரு பிரதட்சணம். இவ்வாறு குறைந்தது மூன்று முறை செய்ய வேண்டும். மூன்றுக்கு மேலே எத்தனை முறை செய்கின்றோமோ அத்தனைக்குமான பலன் கிடைக்கும்.

பிரதோஷ காலத்தில் நாம் இப்படி வழிபடுவதற்குக் காரணம், ஆலகால விஷம் தேவர்களை முன்னும் பின்னும், வலமும் இடமுமாகத் துரத்த, தேவர்கள் பயந்து திருக்கைலாயத்துக்கு ஓடினார்கள். சிவனை வலமாகச் சென்று சிவனையடையலாம் என்று எண்ணிய அவர்களை அந் நஞ்சு அப்பிரதட்சிணமாகச் சென்று தாக்கியது.

இதைக் கண்டு பயந்த தேவர்கள் வந்த வழியே மீண்டும் திரும்பி வர விஷம் அந்தப் பக்கத்திலும் வந்து தாக்கியது. இவ்வாறு அவர்கள் வலமும் இடமுமாக வந்ததை நினைவுபடுத்துவது தான் சோம சூத்திரப் பிரதட்சிணம் ஆகும்.

தேவர்கள் எப்படிப் பாற் கடலைக் கடைந்தார்கள் என்பதையும், ஆலகால விஷம் வெளிப்பட அஞ்சி ஓடி சிவனிடம் போய் முறையிட்டனர் என்பதையும் பின்வரும் திருஞானசம்பந்தரின் பாடல் குறிப்பிடு கின்றது.

**நாகந் தான்கயிறாக நளிர்வரை யதற்குமத் தாகப்**
**பாகம் தேவரொ டசுரர் படுகடல் அளறுஎழக் கடைய**
**வேக நஞ்செழ ஆங்கே வெருவொடும்**
**இரிந்துஎங்கும்ஓட**
**ஆகந் தன்னில் வைத்து அமிர்தம் ஆக்குவித்**
**தான்மறைக்காடே**

– திருஞானசம்பந்தர்

## நந்தி தேவரின் கதை

சிலாதர் என்ற சிவபக்தர், நரகத்தில் தனது பிதுர்கள் துன்பமுறுவதைக் கண்டு மனம் வருந்தி, இதற்குக் காரணம் தனக்குப் புத்திர பாக்கியம் இல்லாதது தான் என்று அறிந்து, சிவனை நோக்கிக் கடும் தவம் செய்தார்.



இதன் பயனாக சிலாதர் ஒருநாள் யாகசாலை அமைக்க விரும்பி நிலத்தை வெட்டியபோது நிலத்தில் புதையுண்டிருந்த பெட்டி ஒன்றைக் கண்டெடுக்க, அந்தப் பெட்டியின் உள் ஒரு குழந்தை இருப்பதைக் கண்டு அக்குழந்தையைத் தூக்க, அந்த வேளையில் அசரீரியாகச் சிவபெருமான் ''நீ செய்த தவத்தின் பயனாக நான் அளித்த செல்வம்'' என்று அருளினார். சிலாதர் அக்குழந்தைக்கு நந்தி எனப் பெயரிட்டு வளர்த்தார். ''நந்திக்கு ஆயுள் காலம் எட்டு ஆண்டுகள் தான்'' என்று சிலாதர் ஆசிரமத்துக்கு வந்த மித்திராவ முனிவர்கள் சொல்ல, அதைக்கேட்டு சிலாதர் மனம் கலங்கினார். அப்பொழுது நந்தி தனது தந்தையான சிலாதரைப் பார்த்து ''தந்தையே! முனிவர்கள் சொன்னதை நினைத்து வருத்தப்பட வேண்டாம். நான் நீண்ட ஆயுள் வேண்டி எல்லாம் வல்ல சிவபெருமானை நோக்கித் தவம் செய்யப் போகின்றேன். அதற்கு நீங்கள் எனக்கு அனுமதி வழங்க வேண்டும்'' என்றார்.

சிலாதர், நந்திக்கு அனுமதி அளிக்க, நந்தி மனத்தை ஒரு நிலைப்படுத்திப் புவனை நதியின் நடுவில் நின்று ஒரு கோடி உருத்திர மந்திரத்தை உச்சரித்து முடித்ததும் சிவன், நந்தியின் முன் தோன்றி, ''உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்'' என்றார்.

நந்தி அதற்கு ''இறைவா! மேலும் நான் ஏழு கோடி உருத்திர ஜபம் உச்சரிக்க தாங்கள் அருள வேண்டும்'' என்றார். சிவனும் அதற்குச் சம்மதிக்க, நந்தி ஏழு கோடி

உருத்திர மந்திரத்தை உச்சரித்து முடிக்கச் சிவன் உமையாளுடன் வெளிப்பட்டு, ''உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்'' என்று கேட்டபோது, ''இறைவா! மேலும் நான் ஒரு கோடி உருத்திர மந்திரத்தை உச்சரிக்க தாங்கள் அருள வேண்டும்'' என்றார். இதைக் கேட்ட சிவன், ''நீ இதுவரை செய்த தவத்துக்கு எத்தனையோ பெரிய பதவிகளை பெறலாம். எனவே நீ தொடர்ந்து தவம் செய்ய வேண்டாம். உனக்கு என்ன வரம் வேண்டும், அதை முதலில் கேள்'' என்றார்.

''இறைவா! எனக்கு எந்தப் பதவியும் வேண்டாம், எனக்கு ஜனன, மரணப் பயம் ஏற்படாமல் என்றும் உங்களுக்கு அருகில் இருக்கும் பாக்கியத்தைக் கொடுக்க வேண்டும். மேலும் எனது பிதுர் வர்க்கத்தினருக்கு சிவபதவி அளிக்க வேண்டும்'' என்று நந்தி கேட்க, சிவனுக்கு அருகில் இருந்த உமை சொன்னாள் : ''சிவகணங்களுக்கு நீயே தலைவனாக இரு. உனக்கு ஆயுள் சிறிது காலமே என்றாலும் இயமன் உன்னை நெருங்க மாட்டான்'' என்றாள். அதைத் தொடர்ந்து சிலாதருக்கும், அவருடைய பிதுர்களுக்கும் சிவபதவிகள் கிடைத்தன.

## பிரதோஷ பூஜையின் அபிஷேகப் பொருட்களால் விளையும் பலன்கள்

பிரதோஷ விரதத்தன்று பின்வரும் முக்கிய பொருட்களை கொடுப்பதால் ஏற்படும் பலன்கள் ஆவன :

1) பால் கொடுத்தால் – நோய் தீரும், நீண்ட ஆயுள் கிடைக்கும்.

2) தயிர் கொடுத்தால் – இனிய சாரீரம் கிட்டும்.

3) பழங்கள் கொடுத்தால் – விளைச்சல் பெருகும்.

*4) பஞ்சாமிர்தம் தந்தால் – செல்வச் செழிப்பு ஏற்படும்.*

*5) நெய் கொடுத்தால் – முத்திப் பேறு கிட்டும்.*

*6) தேன் கொடுத்தால் – இனிய சாரீரம் கிடைக்கும்.*

*7) இளநீர் தந்தால் – நல்ல மக்கட்பேறு கிட்டும்.*

*8) சர்க்கரை கொடுத்தால் – எதிர்ப்புகள் மறையும்.*

*9) எண்ணெய், தைலம் கொடுத்தால் – சுகவாழ்வு பெறலாம்.*

*10) சந்தனம் கொடுத்தால் – சிறப்பான சக்திகள் பெறலாம்.*

*11) மலர்கள் கொடுத்தால் – தெய்வ தரிசனம் கிட்டும்.*

இத்தகைய சிறப்பு வாய்ந்த பிரதோஷ விரதத்தை அனுஷ்டித்தால் என்ன பலன்கள் கிடைக்கும் என்பதைக் கடம்பவனப் புராணத்தில் வரும் பாடல் இப்படிச் சொல்கின்றது :

**இரணம் நல்குரவு இருப்பவம் பசி உராகம்**
**அரணுறும் பயம் கிலேசம் கேதம் அவமிருத்து**
**மரண வேதனை இவையெலாம் அகற்றுஎன வணங்கிப்**
**புரண நாதனைப் பிரதோடத்திற் போற்றிடத் தகுமால்**

*– கடம்பவனப் புராணம்*

## பிரதோஷ பூஜை செய்வதால் நாம் அடையும் பலன்கள்

*1) துன்பம் நீங்கி – இன்பம் பெறலாம்.*

*2) மலடு நீங்கி – மகப்பேறு அடையலாம்.*

*3) கடன் நீங்கி – தனம் பெறலாம்.*

*4) வறுமை நீங்கி – செல்வம் பெறலாம்.*

*5) நோய் நீங்கி – நலமுடன் வாழலாம்.*

*6) அறியாமை நீங்கி – ஞானம் அடையலாம்.*

*7) பாவம் நீங்கி – புண்ணியம் பெறலாம்.*

*8) பிறவியை ஒழித்து – முத்தியைப் பெறலாம்.*

## சிவ அஷ்டோத்தர சத நாமாவளி

ஓம் சிவாய நம:
ஓம் மஹேஸ்வராய நம:
ஓம் ஸம்பவே நம:
ஓம் பிணாகினே நம:
ஓம் சசிசேகராய நம:
ஓம் வாமதேவாய நம:
ஓம் விருபாக்ஷாய நம:
ஓம் கபர்த்திநே நம:
ஓம் நீலலோஹிதாய நம:
ஓம் சங்கராய நம: 10
ஓம் சூலபாணயே நம:
ஓம் கட்வாங்கினே நம:
ஓம் விஷ்ணு வல்லபாய நம:
ஓம் சிபிவிஷ்டாய நம:
ஓம் அம்பிகா நாதாய நம:
ஓம் ஸ்ரீகண்டாய நம:
ஓம் பக்தவத்ஸலாய நம:
ஓம் பவாய நம:
ஓம் சர்வாய நம:
ஓம் த்ரிலோகேசாய நம: 20

| | | | |
|---|---|---|---|
| ஓம் | சிதிகண்ட்டாய | நம: | |
| ஓம் | சிவாப்ரியாய | நம: | |
| ஓம் | உக்ராய | நம: | |
| ஓம் | சுபர்தினே | நம: | |
| ஓம் | காமாரயே | நம: | |
| ஓம் | அந்தகாஸுரஸூதனாய | நம: | |
| ஓம் | கங்காதராய | நம: | |
| ஓம் | கணநாதாய | நம: | |
| ஓம் | லலாடாக்ஷாய | நம: | |
| ஓம் | காலகாலாய | நம: | 30 |
| ஓம் | கிருபாநிதயே | நம: | |
| ஓம் | பீமாய | நம: | |
| ஓம் | பரசுஹஸ்தாய | நம: | |
| ஓம் | ம்ருகபாணயே | நம: | |
| ஓம் | ஜடாதராய | நம: | |
| ஓம் | கைலாஸவாசினே | நம: | |
| ஓம் | கவசினே | நம: | |
| ஓம் | கடோராய | நம: | |
| ஓம் | த்ரிபுராந்தகாய | நம: | |
| ஓம் | வ்ருஷாங்காய | நம: | 40 |
| ஓம் | வ்ருஷபாரூடாய | நம: | |
| ஓம் | பஸ்மோத்தூளித விக்ரஹாய | நம: | |
| ஓம் | ஸாமப்ரியாய | நம: | |
| ஓம் | ஸ்வரமயாய | நம: | |
| ஓம் | த்ரயீமூர்த்தயே | நம: | |
| ஓம் | அநீஷ்வராய | நம: | |
| ஓம் | ஸர்வக்ஞாய | நம: | |
| ஓம் | பரமாத்மனே | நம: | |
| ஓம் | ஸோம ஸூர்யாக்னி லோசநாய | நம: | |
| ஓம் | ஹவிஷே | நம: | 50 |

| | | |
|---|---|---|
| ஓம் யஜ்ஞமயாய | நம: | |
| ஓம் ஸோமாய | நம: | |
| ஓம் பஞ்சவக்த்ராய | நம: | |
| ஓம் ஸதாசிவாய | நம: | |
| ஓம் விஸ்வேஸ்வராய | நம: | |
| ஓம் வீரபத்ராய | நம: | |
| ஓம் ப்ரஜாபதயே | நம: | |
| ஓம் ஹிரண்யரேதஸே | நம: | |
| ஓம் துர்தர்ஷாய | நம: | |
| ஓம் கிரீஷாய | நம: | 60 |
| ஓம் கிரிசாய | நம: | |
| ஓம் அனகாய | நம: | |
| ஓம் புஜங்க பூஷணாய | நம: | |
| ஓம் பர்காய | நம: | |
| ஓம் கிரிதந்வனே | நம: | |
| ஓம் கிரிப்ரியாய | நம: | |
| ஓம் க்ருத்தி வாஸஸே | நம: | |
| ஓம் புராராதயே | நம: | |
| ஓம் பகவதே | நம: | |
| ஓம் ப்ரமதாதிபாய | நம: | 70 |
| ஓம் ம்ருதியுஞ்ஜயாய | நம: | |
| ஓம் சூக்ஷ்மதநவே | நம: | |
| ஓம் ஜகத்வ்யாபினே | நம: | |
| ஓம் ஜகத்குரவே | நம: | |
| ஓம் வ்யோமகேசாய | நம: | |
| ஓம் மஹாஸேநஜனகாய | நம: | |
| ஓம் சாருவிக்ரமாய | நம: | |
| ஓம் ருத்ராய | நம: | |
| ஓம் பூதபதயே | நம: | |
| ஓம் ஸ்தாணவே | நம: | 80 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | அஹிர்புத்னயாய | நம: | |
| ஓம் | திகம்பராய | நம: | |
| ஓம் | அஷ்டமூர்த்தயே | நம: | |
| ஓம் | அநேகாத்மநே | நம: | |
| ஓம் | ஸாத்விகாய | நம: | |
| ஓம் | ஸுத்தவிக்ரஹாய | நம: | |
| ஓம் | சாஸ்வதாய | நம: | |
| ஓம் | கண்டபரசவே | நம: | |
| ஓம் | அஜாய | நம: | |
| ஓம் | பாசவிமோசநாய | நம: | 90 |
| ஓம் | ம்ருடாய | நம: | |
| ஓம் | பசுபதயே | நம: | |
| ஓம் | தேவாய | நம: | |
| ஓம் | மஹாதேவாய | நம: | |
| ஓம் | அவ்யாய | நம: | |
| ஓம் | ஹரயே | நம: | |
| ஓம் | பகநேத்ரபிதே | நம: | |
| ஓம் | பூஷதந்தபிதே | நம: | |
| ஓம் | அவ்யக்தாய | நம: | |
| ஓம் | அவ்யக்ராய | நம: | 100 |
| ஓம் | தக்ஷாத்வரஹராய | நம: | |
| ஓம் | ஹராய | நம: | |
| ஓம் | ஸஹஸ்ராக்ஷாய | நம: | |
| ஓம் | ஸஹஸ்ரபதே | நம: | |
| ஓம் | அபவர்க்க ப்ரதாய | நம: | |
| ஓம் | அநந்தாய | நம: | |
| ஓம் | தாரகாய | நம: | |
| ஓம் | பரமேஸ்வராய | நம: | 108 |

## நந்திகேச அஷ்டோத்தர சத நாமாவளி

ஓம் நந்திகேசாய நம:
ஓம் ப்ருஹ்ம ரூபிணே நம:
ஓம் சிவத்யான பாராயணாய நம:
ஓம் தீக்ஷ்ண ஸ்ருங்காய நம:
ஓம் வேதபாதாய நம:
ஓம் விருபாய நம:
ஓம் வ்ருஷபாய நம:
ஓம் துங்கசைலாய நம:
ஓம் தேவதேவாய நம:
ஓம் சிவப்ரியாய நம: 10

ஓம் விராஜமாநாய நம:
ஓம் நடனாய நம நம:
ஓம் அக்னீ ரூபாய நம:
ஓம் விஷ்ணுரூபிணே நம:
ஓம் ப்ருத்வீரூபிணே நம:
ஓம் நந்தீசாய நம:
ஓம் சிவவாஹனாய நம:
ஓம் குளப்ரியாய நம:
ஓம் காருஹாஸாய நம:
ஓம் ஸ்ருங்கினே நம: 20
ஓம் தனப்ரியாய நம:
ஓம் ஸீதசாமரதாரிணே நம:
ஓம் வேதாங்காய நம:
ஓம் கனகப்ரியாய நம:
ஓம் கைலாசவாஸிநே நம:
ஓம் தேவாய ஸ்திதபாதாய நம:
ஓம் ஸ்துதிப்ரியாய நம:
ஓம் ஸ்வேதோபவீதினே நம:

ஓம் நாட்ய நந்தகாய நம:
ஓம் கிண்கிணி தராய நம: 30

ஓம் மத்த ஸ்ருங்கினே நம:
ஓம் ஹாடகேசாய நம:
ஓம் ஹேம பூஷணாய நம:
ஓம் காமிகப்ரியாய நம:
ஓம் விசிஷ்டாய நம:
ஓம் திவ்ய ரூபாய நம:
ஓம் உஜ்வலினே நம:
ஓம் ஜ்வாலநேத்ராய நம:
ஓம் ஸம்வர்தாய நம:
ஓம் காலாய நம: 40

ஓம் நவத்ருண ப்ரியாய நம:
ஓம் வேதஸாராய நம:
ஓம் மந்த்ர ஸாராய நம:
ஓம் ப்ரத்யக்ஷாய நம:
ஓம் கருணாகராய நம:
ஓம் ஸ்ரீ கராய நம:
ஓம் லலாமகலிகாய நம:
ஓம் சிவயோகினே நம:
ஓம் ஜலாதிபாய நம:
ஓம் சாருரூபாய நம: 50

ஓம் வ்ருஷேசாய நம:
ஓம் ஸோமஸூர்யாக்னி லோசனாய நம:
ஓம் சுந்தராய நம:
ஓம் ஸோமபூஜாய நம:
ஓம் ஸுவக்த்ராய நம:
ஓம் கலிநாசநாய நம:
ஓம் ஸுப்ரகாசாய நம:

| | | | |
|---|---|---|---|
| ஓம் | மஹாவீர்யாய | நம: | |
| ஓம் | ஹம்சாய | நம: | |
| ஓம் | அக்னிமயாய | நம: | 60 |
| ஓம் | ப்ரபவே | நம: | |
| ஓம் | வரதாய | நம: | |
| ஓம் | ருத்ரரூபாய | நம: | |
| ஓம் | மதுராய | நம: | |
| ஓம் | காரணாய | நம: | |
| ஓம் | ஸ்துதிபக்தாய | நம: | |
| ஓம் | வீரகண்டாய | நம: | |
| ஓம் | தந்தாய | நம: | |
| ஓம் | விஷ்ணுநந்திநே | நம: | |
| ஓம் | சிவஜ்வாலா க்ராஹிணே | நம: | 70 |
| ஓம் | பத்ராய | நம: | |
| ஓம் | அநகாய | நம: | |
| ஓம் | கேசவாய | நம: | |
| ஓம் | ஸர்வதைவதாய | நம: | |
| ஓம் | ஸ்வேதவர்ணாய | நம: | |
| ஓம் | சிவாஸீநாய | நம: | |
| ஓம் | சின்மயாய | நம: | |
| ஓம் | ஸ்ருங்கபட்டாய | நம: | |
| ஓம் | ஸ்வேதசாமரபூஷாய | நம: | |
| ஓம் | தேவாரஜாய | நம: | 80 |
| ஓம் | ப்ரபாநந்திநே | நம: | |
| ஓம் | பண்டிதாய | நம: | |
| ஓம் | பரமேஸ்வராய | நம: | |
| ஓம் | நிரூபாய | நம: | |
| ஓம் | நிராகபராய | நம: | |
| ஓம் | சின்னதைத்யாய | நம: | |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | நாஸா ஸுத்ரிணே | நம: | |
| ஓம் | அநந்தேசாய | நம: | |
| ஓம் | திலதண்டுல பக்ஷணாய | நம: | |
| ஓம் | வார நந்திநே | நம: | 90 |
| ஓம் | ஸரஸாய | நம: | |
| ஓம் | விமலாய | நம: | |
| ஓம் | பட்டஸுத்ராய | நம: | |
| ஓம் | காலகண்ட்டாய | நம: | |
| ஓம் | சைலாதிநே | நம: | |
| ஓம் | சிலாதனஸுநந்தனாய | நம: | |
| ஓம் | தாத்ரே | நம: | |
| ஓம் | ஸாஸ்வதாய | நம: | |
| ஓம் | ப்ரதோஷ ப்ரியாய | நம: | |
| ஓம் | ரூபிணே | நம: | 100 |
| ஓம் | வ்ருஷாய | நம: | |
| ஓம் | குண்டலத்ருதே | நம: | |
| ஓம் | பீமாய | நம: | |
| ஓம் | ஸிதவர்ண ஸ்வரூபிநே | நம: | |
| ஓம் | வீராய | நம: | |
| ஓம் | த்ருவாய | நம: | |
| ஓம் | ஸர்வாத்மநே | நம: | |
| ஓம் | ஸர்வ வித்யாதாய | நம: | 108 |

■■■

# மேலும் சில விரதங்கள்



## ஸ்ரீ சந்தோஷிமாதா விரதம்

ஒரு வெள்ளிக்கிழமை தொடங்கித் தொடர்ந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் விரதம் இருந்து வர வேண்டும். இவ்விரதத்தைப் பெண்கள் மட்டுல்லாமல் எவரும் கடைப்பிடிக்கலாம்.

## சந்தோஷிமாதா வரலாறு

சந்தோஷிமாதாவைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆனால், அவர் விநாயகரின் மகள் என்பதைப் பலரும் அறிந்திருக்கமாட்டார்கள். சரி, கதைக்கு வருகின்றேன். இரட்சாபந்தன விழா என்று சகோதரர்களுக்கு சகல நலன்களும் கிடைக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் சகோதரிகள் இரட்சை கட்டும் – அதாவது காப்புக் கட்டும் விழா நடந்து வருகின்றது அல்லவா? அந்த விழா நாளில் விநாயகரின் மகன்களான சித்தராங்கதனும், புத்ராங்கனும் தங்களுக்கு இரட்சை கட்ட ஒரு சகோதரி

இல்லையே! தங்களுக்கு ஒரு சகோதரி வேண்டும் என்று தந்தையான விநாயகரிடம் வேண்டினார்கள். அவர்களது விருப்பத்தைப் பூர்த்தி செய்யத் தனது மனைவியர் மூலம் அப்போதே ஒரு பெண் குழந்தையை உருவாக்கினார். அவரே சந்தோஷிமாதா. அக்குழந்தை பார்வதியின் சக்தியையும், இலட்சுமிதேவியின் செல்வத்தையும், சரஸ்வதி தேவியின் கல்விச் சிறப்பையும் பெற்றுத் திகழுமாறு விநாயகர் அருள் பாலித்தார். சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியவர் என்பதால் சந்தோஷி என்ற நாமத்தையும் பெற்றார். வெள்ளிக்கிழமையில் தனது மகள் பிறந்ததால் அன்றைய தினம் சந்தோஷிமாதாவை நினைத்து விரதம் இருப்பவர்களுக்கு விநாயகரின் அருளும் கிடைக்க வேண்டும் என்று நாரதர் விநாயகரிடம் வேண்டிக் கொண்டதாகக் கதை சொல்கின்றது.

சந்தோஷிமாதாவை நோக்கி விரதம் இருந்து நற்பலன்களைப் பெற்றவர்களில் சுனீது என்ற உத்தமி குறிப்பிடத்தக்கவர்.

## விரத முறை

வீட்டையும், பூஜையறையையும் சுத்தம் செய்து, பூஜை அறைக்குள் சுத்தமான பலகை வைத்து அதன்மேல் கோலம் போட்டு, அதற்கு மேலே கும்பம் வைத்து, சந்தோஷிமாதா படத்தையும், சந்தனத்தில் பிடித்த பிள்ளையாரையும் வைப்பதோடு, படத்துக்கும், கும்பத்துக்கும் மாலை போட்டுப் பக்கத்தில் குத்து விளக்கையும் ஏற்றி வைக்க வேண்டும்.

நிவேதனமாக சந்தோஷிமாதாவுக்குப் பிரியமான கொண்டைக் கடலை, வெல்லத்தையும் வைக்க வேண்டும். விரதம் இருப்பவர்கள் அன்றைய தினம் புளிப்பு சேர்க்கக்கூடாது. பின்னர், ''நாம் நினைத்த

காரியம் நிறைவேற வேண்டும்'' என்று மனத்துக்குள் சங்கல்பம் செய்து கொண்டு விநாயகருக்கும் சந்தோஷிமாதாவிற்கும் பூஜை செய்யவேண்டும். பின்னர், கும்பத்தில் உள்ள நீரைத் தீர்த்தமாகப் பயன்படுத்த வேண்டும். நினைத்த காரியம் பூர்த்தியாகிறவரை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் விரதத்தைத் தொடர்ந்து அனுட்டிக்க வேண்டும். விரதம் இருப்பவர்கள், யாருக்கும் தட்சிணை கொடுக்கக்கூடாது.

## நூற்றெட்டு போற்றிகள்

சந்தோஷி மாதா போற்றி
சகலமும் அருள்வாய் போற்றி
வேதங்கள் துதிப்பாய் போற்றி
வெற்றிகள் தருவாய் போற்றி
கன்னியிற் சிறந்தாய் போற்றி
கற்பகதருவே போற்றி
கருணைக் கடலே போற்றி
காரணத்தினுருவே போற்றி
காரியமும் ஆனாய் போற்றி
காசித்தல முறைவாய் போற்றி 10

கதை கேட்டு மகிழ்வாய் போற்றி
காலதேசம் கடந்தாய் போற்றி
கஜமுகன் குழந்தாய் போற்றி
முக்குண உருவே போற்றி
மூவுலகிற் சிறந்தாய் போற்றி
இனியநின் உருவே போற்றி
இனிப்பினை விரும்புவாய் போற்றி
வாட்டமிலா முகத்தாய் போற்றி
வரம் மிகத் தருவாய் போற்றி
அகரமுதல எழுத்தே போற்றி 20

| | | |
|---|---|---|
| ஆதி அந்தமில்லாய் | போற்றி | |
| ஈடிணை யற்றாய் | போற்றி | |
| இணையடி தொழுதோம் | போற்றி | |
| கோரியது கொடுப்பாய் | போற்றி | |
| குலம் காக்கும் சுடரே | போற்றி | |
| விரதத்திற்கு உரியாய் | போற்றி | |
| விளக்கத்தின் விளக்கம் | போற்றி | |
| பிறப்பு இறப்பற்றாய் | போற்றி | |
| பிறப்பினைத் தருவாய் | போற்றி | |
| பெருவாழ்வு அருள்வாய் | போற்றி | 30 |
| பிழைகளைப் பொறுப்பாய் | போற்றி | |
| வணக்கத்திற் குரியாய் | போற்றி | |
| வணங்கினால் மகிழ்வாய் | போற்றி | |
| ஒலிக்குமோர் ஓசை | போற்றி | |
| உயர்வுகள் தருவாய் | போற்றி | |
| கோள்களும் போற்றப் | போற்றி | |
| குறைகளைத் தவிர்ப்பாய் | போற்றி | |
| நிறைவினைத் தருவாய் | போற்றி | |
| சக்தியின் உருவே | போற்றி | |
| ஸரஸ்வதி ஆனாய் | போற்றி | 40 |
| திருமகள் உருவே | போற்றி | |
| தெய்வத்தின் தெய்வம் | போற்றி | |
| சூலத்தைக் கொண்டாய் | போற்றி | |
| வாளினை ஏற்றாய் | போற்றி | |
| தீமைகள் அழிப்பாய் | போற்றி | |
| திசையெல்லாம் நிறைந்தாய் | போற்றி | |
| அற்புத உருவே | போற்றி | |
| ஆனந்த சிலையே | போற்றி | |
| தாமரை அமர்ந்தாய் | போற்றி | |
| தக்கன தருவாய் | போற்றி | 50 |

தருமத்தின் உருவே போற்றி
தாயாக வந்தாய் போற்றி
நினைத்ததைத் தருவாய் போற்றி
நிம்மதி அருள்வாய் போற்றி
உமையவள் பேர்த்தி போற்றி
உன்னதத் தெய்வம் போற்றி
செல்வத்தின் உருவமே போற்றி
ஜெகமெல்லாம் காப்பாய் போற்றி
உயிருக்கு உயிராவாய் போற்றி
உலகமெல்லாம் நீயே போற்றி 60

ஆபரண மணிவாய் போற்றி
ஆடைகள் தருவாய் போற்றி
ஒளிமிகு முகத்தாய் போற்றி
கருணை சேர் கரத்தாய் போற்றி
மனைமக்கள் ஈவாய் போற்றி
மங்களம் தருவாய் போற்றி
உன்னையே துதிப்போம் போற்றி
உடைமைகள் தருவாய் போற்றி
நங்கையர்க்கு நாயகி போற்றி
நலமெல்லாம் தருவாய் போற்றி 70

ஆர்த்தி ஏற்பாய் போற்றி
ஆனந்த உருவே போற்றி
பாடல்கள் கேட்பாய் போற்றி
பாசத்தைப் பொழிவாய் போற்றி
குணமெனும் குன்றே போற்றி
குன்றென அருள்வாய் போற்றி
தேவியர் தேவி போற்றி
தரிசனம் தருவாய் போற்றி
சிவனருள் பெற்றாய் போற்றி
சிறப்பெலாம் கொண்டாய் போற்றி 80

விஷ்ணுவருள் பெற்றாய் போற்றி
விண்ணவர் போற்றப் போற்றி
நான்முகன் கருணை பெற்றாய் போற்றி
நலன்களின் உருவம் நீயே போற்றி
போற்றி செய்வோர்க்கு அருள்வாய் போற்றி
புண்ணிய நாயகி போற்றி
செல்வத்தின் உருவே போற்றி
செல்வத்தைப் பொழிவாய் போற்றி
சரணமடைந்தால் மகிழ்வாய் போற்றி
சற்குணவதியே போற்றி 90

ஐங்கரன் மகளே போற்றி
அனைத்துமே நீதான் போற்றி
கண்களின் ஒளியே போற்றி
கனகமாமணியே போற்றி
அன்பருக்கு அன்பே போற்றி
அனைவருக்கும் அருள்வாய் போற்றி
செல்வமாம் நிதியே போற்றி
செல்வத்தின் பதியே போற்றி
தத்துவமானாய் போற்றி
வித்தகச் செல்வி போற்றி 100

பழங்களை ஏற்பாய் போற்றி
பாயஸம் உண்பாய் போற்றி
வெல்லம் கடலை சேர்த்து
விருப்பமாய் உண்பாய் போற்றி
குடும்பத்தில் நலன்கள் தந்து
கொலுவிருந் தருள்வாய் போற்றி
ஓங்கார உருவே போற்றி
உன்னதத் தெய்வம் போற்றி
சந்தோஷி மாதா போற்றி
சௌபாக்கியம் அருள்வாய் போற்றி

சந்தோஷி மாதாகி ஜெய்!



## பிருந்தாவனத் துவாதசி

கார்த்திகை மாதத்தில் ஏகாதசிக்கு அடுத்த துவாதசி தினத்தன்று துளசி தேவிக்குத் திருமணம் நடந்ததால் அன்றைய தினம் வைஷ்ணவர்களும் மற்றவர்களும் துளசி மாடத்துக்குப் பூஜை செய்து, துளசி ஸ்தோத்திரம் சொல்லி இவ்விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். மாங்கல்ய பலம் வேண்டி சுமங்கலிப் பெண்களும், நல்ல கணவன் கிடைக்க வேண்டும் என்பதற்காகக் கன்னிப் பெண்களும் இவ் விரதத்தை அனுஷ்டிப்பார்கள்.

## வைரவ விரதம் (மங்கள வார விரதம்)

தை மாத முதல் செவ்வாய்த் தொடங்கி ஒவ்வொரு செவ்வாயும் வயிரவப் பெருமானைக் குறித்து அனுஷ்டிக்கப்படும் விரதம் ஆகும். செவ்வாய்க் கிழமைக்கு மங்கள வாரம் என்ற பெயரும் உண்டு.

## வீரபத்திர விரதம்

மங்கள வாரமாகிய செவ்வாய்க் கிழமை தோறும் அனுஷ்டிக்கும் விரதம் ஆகும். அப்படித் தொடர்ந்து அனுஷ்டிக்க முடியாதவர்கள், தை மாதத்தில் வரும் மங்கள வாரத்தில் இதை அனுஷ்டிப்பர்.

## அனந்த விரதம்

கண்ணனின் அருள் வேண்டி ஆண்கள் மட்டும் அனுஷ்டிக்கும் விரதம் ஆகும். உடல் ஆரோக்கியம், நீண்ட ஆயுள் , செல்வம், புகழ் எனப் பல நற்பலன்கள் கிடைக்கும் என்பர்.

## கருட பஞ்சமி விரதம்

ஆடி அமாவாசை கழித்து வரும் பஞ்சமி அன்று இவ் விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. கௌரி அம்மனை நாக வடிவில் ஆராதித்து, சகோதரர்களின் நலனுக்காக கடைப்பிடிக்கப்படும் விரதம்.

## திருவோண விரதம்

திருவோண விரதம், ஒவ்வொரு மாதமும் திருவோண நட்சத்திரத்தன்று வருகின்றது. திருமாலுக்குரிய நட்சத்திரம் திருவோணம் ஆகும். இந்த விரதம் இருப்பதால், குடும்ப ஒற்றுமை வலுப்பெறும். துன்பங்கள் நீங்கும். பகை ஒழியும், திருமணத் தடை அகலும், நல்வாழ்வு கிட்டும் என்பர்.

இவ் விரதத்தின் முக்கிய அம்சமே பழத்தால் ஆன நெய் விளக்கேற்றுவது ஆகும். காலை உணவை விடுத்து, பகல் உணவு உண்டு,இரவு பழங்களையோ, பலகார வகைகளையே உண்டு இவ் விரதத்தை அனுஷ்டிப்பர். விரத இறுதியில் பழ விளக்கில் உள்ள பழங்களைப் பிரசாதமாக சாப்பிடுவார்கள். இவ் விரத நாளில் மஹா விஷ்ணு கோயிலுக்குச் சென்று அங்கு நடக்கும் வழிபாட்டில் கலந்து கொள்வது நல்லது ஆகும்.

## பங்குனித் திங்கள்

பங்குனித் திங்கள் விரதம், கண்ணகி அம்மனுக்கு உரிய விரதம் ஆகும். யாழ்ப்பாணம் மட்டுவில்

பன்றித்தலைச்சி அம்மன் கோயிலில் பொங்கல் வைத்து மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

## மங்கள கௌரி விரதம்

மங்கள கௌரி விரதம், திருமணமான பெண்கள் மாங்கல்ய பலத்துக்காக கடைப்பிடிக்கும் விரதம் ஆகும். இவ்விரதத்தைத் திருமணமான முதல் ஆண்டு தன் தாய் வீட்டிலும், அடுத்த நான்கு ஆண்டுகளும் கணவன் வீட்டிலும் செய்ய வேண்டும். ஆக ஐந்து ஆண்டுகள் கடைப்பிடிக்க வேண்டும்.

## சுவர்ண கௌரி விரதம்

பெண்கள் மட்டுமே கடைப்பிடிக்கும் விரதம் ஆகும். இவ் விரதம் ஒவ்வொரு வருஷமும் விநாயக சதுர்த்திக்கு முன் தினம் அனுஷ்டிக்கப்பட வேண்டும். தொடர்ந்து பதினாறு ஆண்டுகள் அனுஷ்டிக்க வேண்டும். இவ்வாறு இவ் விரதத்தை அனுஷ்டித்தால் மாங்கல்ய பலம், உறவினர்களின் அன்பு கிடைத்து நலமாக வாழலாம்.

## ஔவை விரதம்

சுமங்கலிப் பெண்களும், கன்னிப் பெண்களும் கடைப்பிடிக்கும் விரதம் ஆகும். இவ் விரதத்தின் போது நடக்கும் பூஜை முறைகளை ஆண்கள் பார்க்கக்கூடாது என்று சொல்லுவார்கள். இவ் விரதம் நள்ளிரவு நேரத்திலேயே நடக்கும். மாசி மாதம் வரும் செவ்வாய்க் கிழமை அல்லது தை மாதம் வரும் செவ்வாய்க் கிழமை அல்லது ஆடி மாதம் வரும் செவ்வாய்க் கிழமையில் இவ் விரதத்தை மேற்கொள்ள வேண்டும். கொழுக்கட்டையை நிவேதனமாக வைப்பார்கள். இவ் விரதத்தைக் கடைப்பிடிப்பதால் மாங்கல்ய பலம், குடும்ப நன்மை, நினைத்த காரியம் கை கூடும் என்பார்கள்.

## சிசு பரிபாலன விரதம்

குழந்தைக்கு நீண்ட ஆயுள் கிடைக்க வேண்டும் என்பதற்காகக் குழந்தையின் தாயார் பிடிக்கும் விரதம் ஆகும்.

## வாமன விரதம்

பகவான் வாமன அவதாரம் எடுத்த போது தேவர்கள் பிடித்த விரதம் ஆகும். இவ் விரதத்தை அனுஷ்டித்தால் இகபர சித்திகள் கிடைக்கும் என்பர்.

## ஆவணி அவிட்டம்

ஆவணி மாதத்திலே அவிட்ட நட்சத்திர நாள் சதுர்வேதத்திலே ரிக், யஜுர், வேதங்களை உடையவருக்கு உபநயனம், பூணூல் மாற்றல், வேத அத்தியயனம் ஆரம்பித்தல், வேதங்களைப் பாராயணம் செய்தல் போன்ற சுப கர்மங்கள் நடைபெறும் நாளாக அமைகின்றது.

### பலன்

உடலும் உள்ளமும் உறுதி பெறும். முன்னோர்களின் ஆத்மா சாந்தியடையும். ரிஷிகள், தேவர்களின் ஆசிகள் கிடைக்கும்.

## விபூதி விரதம்

வைகாசி மாதம் வளர்பிறையில் வரும் விரதம் ஆகும். இவ்விரதத்தை அனுஷ்டித்தால் நாம் தெரிந்தும், தெரியாமலும் செய்த பாவங்கள் விலகி நல்ல பேறு கிடைக்கும்.

## ஐப்பசி உத்தர விரதம்

தேவி விரதங்களில் இதுவும் ஒன்றாகும். ஐப்பசி மாதத்து உத்தர நட்சத்திரத்தில் ஒரு வேளை உணவு உட்கொண்டு அனுஷ்டிக்கப்படும் விரதம் ஆகும்.

## உமாமகேசுவர விரதம்

கார்த்திகை மாதத்துப் பௌர்ணமியில் ஒருவேளை உணவு உட்கொண்டு அனுஷ்டிக்கப்படும் விரதம் ஆகும்.

## ஆடிப் பூரம்

சிவனுக்குத் திருவாதிரை போல அம்பிகைக்குச் சிறப்பான நாள் ஆடிப்பூரம் ஆகும். ஆண்டாள் நாச்சியாரும் ஆடிப் பூரத்திலே தோன்றிருக்கின்றார். எனவே சிறப்பு வாய்ந்த இந்நாளில் விரதத்தை அனுஷ்டிப்பது சிறப்பானதாகும்.

## சத்யநாராயண விரதம்

விஷ்ணு விரதங்களில் ஒன்றான சத்யநாராயண விரதம், ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற பௌர்ணமி திதியன்று அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. பொதுவாக ஒரு விரதம் அனுஷ்டிக்கின்றவர்கள் தாங்கள் நினைப்பது நிறைவேற வேண்டும் என்பதற்காக விரதம் இருப்பார்கள். ஆனால் இவ் விரதம் இருப்பவர்கள் தாங்கள் நினைத்தது நிறைவேறிய பின் விஷ்ணுவுக்கு நன்றி செலுத்து வதற்காக அனுஷ்டித்து வருகின்றார்கள்.

■■■

# நவக்கிரகங்களின் சிறப்பும் அவற்றின் விரதங்களும்

## சூரியன் (ஞாயிற்றுக் கிழமை விரதம்)

திருச்சிற்றம்பலம்

சூரியன், காசிப முனிவரின் புத்திரர். இவரது மனைவி பெயர் சமுஞ்சா. இவருக்கு நிழல் மனைவியும் உண்டு. அவரின் பெயர் சாயாதேவி. பிள்ளைகள் : இயமன், வசுதன், யமுனை, சர்வாணி, சனி, தபதி, பியட்டி ஆகியோர்கள்.

குழந்தைச் செல்வம் இல்லாதவர்களும், ஜாதகத்தில் சூரிய கிரக தோஷமுள்ளவர்களும், ஐப்பசி மாதம் பிறந்தவர்களும் ஞாயிற்றுக்கிழகைளில் விரதம் அனுஷ்டிக்கலாம். ஆவணி மாதம் சூரியனைக் குறித்து விரதம் இருப்பதற்குச் சிறப்பான மாதம் ஆகும். ஆவணி மாதத்து ஞாயிற்றுக்கிழமைகளில் விரதம் அனுஷ்டித்துக் கடைசி ஞாயிற்றுக்கிழமை சூரியனுக்கு நிவேதனமாகப் பொங்கல் வைத்து விரதம் இருப்பர்.

| | | |
|---|---|---|
| இராசி | – | சிம்மராசிக்கதிபதி |
| திக்கு | – | கிழக்குப் பார்வை |
| தலம் | – | சூரியனார் கோயில் |
| நிறம் | – | சிவப்பு |
| மலர் | – | செந்தாமரை |
| துணி | – | சிவப்புக்கரை ஆடை |
| இரத்தினம் | – | மாணிக்கம் |
| ஊர்தி | – | ஒற்றையாழித் தேர் |
| நைவேத்தியம் | – | கோதுமை, சர்க்கரைப் பொங்கல் சூடு ஆறாதது. |
| சூரிய தசை | – | 6 ஆண்டு காலம் |

### ஸ்தோத்திரம்

சீலமாய் வாழச் சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி, சுதந்திரா போற்றி
வீரியா போற்றி, வினைகள் களைவாய்

### பரிகாரங்கள்

ஞாயிற்றுக்கிழமை விரதம் இருந்து, சூரிய ஸ்தோத்திரத்தைச் சொல்வதோடு, ஆலயத்துக்குச் சென்று சிவ வழிபாடும், நவக்கிரக வழிபாடும் செய்ய வேண்டும்.

## சந்திரன் (திங்கட்கிழமை விரதம்)

### சந்திரபகவான்

மிகவும் அழகானவர் மட்டும் அல்ல; பூமிக்கு மிக அண்மையில் உள்ளவர், கவிஞர்களின் தோழர். பாற்கடலிலே தோன்றியவர். மனக்கவலை, பயம் நீங்கவும், சந்திர தோஷம் நீங்கவும் திங்கட்கிழமைகளில் விரதம் அனுஷ்டிக்கலாம்.

| | | |
|---|---|---|
| இராசி | – | கடகராசிக்கு அதிபதி |
| திக்கு | – | மேற்குப் பார்வை |
| தலம் | – | திருப்பதி |
| நிறம் | – | வெள்ளை |
| மலர் | – | வெள்ளை அரளி |
| துணி | – | வெள்ளை ஆடை |
| இரத்தினம் | – | முத்து |
| ஊர்தி | – | வெள்ளைக் குதிரை |
| நைவேத்தியம் | – | பால் பாயசம், சூடு ஆறியது |
| சந்திர தசை | – | 10 ஆண்டு |

### ஸ்தோத்திரம்

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரபோற்றி, சற்குரு போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி

### பரிகாரங்கள்

திங்கட்கிழமை விரதம் இருந்து, சந்திர ஸ்தோத்திரத்தைச் சொல்வதோடு, ஆலயத்துக்குச் சென்று சிவ பார்வதி வழிபாடும், நவக்கிரக வழிபாடும் செய்ய வேண்டும்.

## செவ்வாய் (செவ்வாய்க்கிழமை விரதம்)

### அங்காரகன்

சிவபெருமானின் நெற்றியில் உருவாகிய வியர்வைத் துளி பூமியில் விழ அதில் இருந்து உதித்தவர். பூமாதேவியால் வளர்க்கப்பட்டவர். செவ்வாயைப் போல முருகனும் சிவனுடைய நெற்றியில் இருந்து தோன்றிய நெருப்புப் பொறியில் இருந்து தோன்றியவர். அதுமட்டுமல்லாது முருகன் சக்தியின் வடிவமும் கூட. அதனால் தான் செவ்வாய்க் கிழமைகளில் செவ்வாயை வழிபடுவது மட்டுமல்லாது, முருகனையும், சக்தியையும் வழிபடுவது நல்லது. செவ்வாய் தசை நடப்பவர்களும், செவ்வாய் தோஷம் உடையவர்களும், ஆண்மை அதிகரிக்கவும் இவ்விரதத்தைச் செவ்வாய்க் கிழமைகளில் அனுஷ்டிக்கலாம்.

| | | |
|---|---|---|
| இராசி | – | மேஷம், விருச்சிக இராசிகளுக்கதிபதி |
| திக்கு | – | தெற்குப் பார்வை |
| தலம் | – | பழனி, வைத்தீஸ்வரன் கோயில், உஜ்ஜயினி |

| | | |
|---|---|---|
| நிறம் | – | சிவப்பு |
| மலர் | – | செண்பகம், சிவப்பு அரளி |
| துணி | – | சிவப்பு நிற ஆடை |
| இரத்தினம் | – | பவழம் |
| ஊர்தி | – | சிவப்பு ஆடு |
| நைவேத்தியம் | – | பொங்கல் |
| அங்காரக தசை | – | 7 ஆண்டு |

### ஸ்தோத்திரம்

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறையிலாது அருள்வாய் குணமுடன் வாழ
மங்களச் செவ்வாய் மலரடி போற்றி
அங்காரகனே அவதிகள் நீக்கு

### பரிகாரங்கள்

செவ்வாய்க்கிழமை விரதம் இருந்து, அங்காரகனின் ஸ்தோத்திரம் சொல்வதோடு, ஆலயத்துக்குச் சென்று முருகன், அம்பாள் வழிபாடும் நவக்கிரக வழிபாடும் செய்ய வேண்டும்.

## புதன் (புதன்கிழமை விரதம்)

### புதன்

சந்திரனுக்கும், தாரைக்கும் பிறந்தவர். சாந்த குணம் உடையவர். திருமாலின் அருளால் சகல வேதங்களை யும், கலைகளையும் கற்ற ஞானி.

| | | |
|---|---|---|
| இராசி | – | மிதுனம் – கன்னிராசிக்கு அதிபதி |
| திக்கு | – | கிழக்குப் பார்வை |
| தலம் | – | மதுரை, திருவெண்காடு |
| நிறம் | – | வெளிர்பச்சை |
| மலர் | – | வெண்காந்தள் |

| | | |
|---|---|---|
| துணி | – | பச்சை நிற ஆடை |
| இரத்தினம் | – | மரகதம் |
| ஊர்தி | – | சிங்கம் |
| நைவேத்தியம் | – | புளியோதரை |
| புதன் தசை | – | 17 ஆண்டு |

### ஸ்தோத்திரம்

**இதமுற வாழ இன்னல்கள் நீக்கும்**
**புத பகவானே பொன்னடி போற்றி**
**பதந்தந்து ஆள்வாய் பண்ணொலியானே**
**உதவியே அருளும் உத்தமா போற்றி**

### பரிகாரங்கள்

புதன் கிழமை விரதம் இருந்து, மேலே காணும் ஸ்தோத்திரத்தைச் சொல்வதோடு, ஆலயத்துக்குச் சென்று மகாவிஷ்ணு வழிபாடும் நவக்கிரக வழிபாடும் செய்ய வேண்டும்.

## வியாழன் (வியாழக்கிழமை விரதம்)

### வியாழபகவான்

தேவகுருவான இவர் வஜ்ராயுதம் தரித்திருப்பவர். கோபம் இல்லாதவர், கருணையால் உலகைக் காப்பவர்.

குரு தோஷமுள்ளவர்களும், குருதசை நடப்பவர்களும், குழந்தை பாக்கியம் இல்லாதவர்களும், குடும்ப அமைதி கிடைக்கவும், இவ் விரதத்தை வியாழக்கிழமை தோறும் அனுஷ்டிக்கலாம்.

| | | |
|---|---|---|
| இராசி | – | தனுசு, மீனராசிகளுக்கதிபதி |
| திக்கு | – | வடக்குப் பார்வை |
| தலம் | – | திருச்செந்தூர் |
| நிறம் | – | மஞ்சள் |

| | | |
|---|---|---|
| மலர் | – | முல்லை |
| துணி | – | மஞ்சள் நிற ஆடை |
| இரத்தினம் | – | புஷ்பராகம் |
| ஊர்தி | – | மஞ்சள் குதிரை, யானை |
| நைவேத்தியம் | – | தயிர்சாதம், கொத்துக் கடலை சுண்டல் |
| குரு தசை | – | 16 ஆண்டு |

### ஸ்தோத்திரம்

**குணமிகு வியாழக் குரு பகவானே**
**மணமுடன் வாழ மகிழ்வுடன் அருள்வாய்**
**பிருகஸ்பதி வியாழப் பரகுரு நேசா**
**கிரகதோஷம் இன்றிக் கடாக்ஷித்தருள்வாய்**

### பரிகாரங்கள்

வியாழக்கிழமை விரதம் இருந்து, மேலே காணும் ஸ்தோத்திரத்தைச் சொல்வதோடு, ஆலயத்துக்குச் சென்று தெட்சிணாமூர்த்தியை வழிபடுவதோடு, நவக்கிரக வழிபாடும் செய்ய வேண்டும்.

## சுக்கிரன் (வெள்ளிக்கிழமை விரதம்)

### சுக்கிரன்

அசுரர்களின் குரு, கல்வி வேள்விகளில் சிறந்தவர். ''சுக்கிர நீதி'' என்ற நூலை எழுதியவர். அறிவியல், சுக்கிரனை வீனஸ் என்று அழைக்கிறது. சூரியப் பாதையில் இவர் இரண்டாவது இடத்தில் இருப்பவர். மிகுந்த ஒளி மயமானவர்.

மாங்கல்ய பலம் வேண்டியும், செல்வம் வேண்டியும், குடும்ப ஒற்றுமை வேண்டியும் இவ் விரதத்தை வெள்ளிக்கிழமைகளில் அனுஷ்டிக்கலாம்.

| | | |
|---|---|---|
| இராசி | – | இரிஷபம், துலாம் இராசிகளுக்கதிபதி |
| திக்கு | – | கிழக்குப் பார்வை |
| தலம் | – | திருநாவலூர் |
| நிறம் | – | வெள்ளை |
| மலர் | – | வெண்தாமரை |
| துணி | – | வெள்ளை ஆடை |
| இரத்தினம் | – | வைரம் |
| ஊர்தி | – | வெள்ளைக் குதிரை |
| நைவேத்தியம் | – | தயிரன்னம், பாயசம் |
| சுக்கிர தசை | – | 20 ஆண்டு |

### ஸ்தோத்திரம்

**சுக்கிர மூர்த்தி சுபமிக ஈவாய்**
**வக்கிர மின்றி வரமிகத் தருவாய்**
**வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே**
**அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே**

### பரிகாரங்கள்

வெள்ளிக்கிழமை விரதம் இருந்து, மேலே காணும் ஸ்தோத்திரத்தைச் சொல்வதோடு ஆலயத்துக்குச் சென்று முருகன், அம்மன் ஆகியோரின் வழிபாடு செய்வதோடு நவக்கிரக வழிபாடும் செய்ய வேண்டும். வெள்ளிக் கிழமை விரதத்தைச் சுக்கிர வார விரதம் என்றும் சொல்லுவார்கள்.

## சனீஸ்வரன் (சனிக்கிழமை விரதம்)

### சனிஸ்வரன்

சூரியனுக்கும் சாயாதேவிக்கும் மகனாகப் பிறந்தவர். இவரது பார்வை யார் யார் மீது விழுகின்றதோ அவர் களுக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியவர்.

## சிவனைப் பிடித்த சனிபகவான்

திருக்கைலாயத்தில் சிவனுடன், பிருகு முனிவரும், சனிபகவானும் பேசிக் கொண்டிருந்த போது, ஜோதிடத்தில் வல்லவரான பிருகு முனிவர் சிவபெருமானிடம் கூறினார். ''பிரபு! உங்களுக்கு சனி தோஷம் இருக்கின்றது. நாளை சனியன் உங்களைப் பிடிப்பான்'' என்றார். அதைக் கேட்ட சிவன் சனியனிடம் கேட்டார். ''என்ன? நீ என்னைப் பிடிப்பாயா?'' என்று கேட்க, சனி பகவான் கைகூப்பியபடி ''நாளை உங்களைப் பிடிப்பேன். என் கடமையைச் சரியாகச் செய்ய எனக்கு வழி விடுங்கள்'' என்றார். உடனே சிவபெருமான், ''சரி போய் வா. நாளை நீ என்னை எப்படிப் பிடிக்கின்றாய் என்று பார்ப்போம்'' என்று அவனை வழியனுப்பிய சிவன், தன் சக்தியெல்லா வற்றையும் ஒடுக்கி ஓர் உருத்திராட்சத்துக்குள் இரண்டு நாள் இருந்து விட்டு வெளியே வந்தார். வெளியே வந்த சிவன், சனியை அழைத்துத் தான் செய்ததைச் சொன்னார். அதற்குச் சனி, ''இறைவா! நான் பிடித்து விடுவேன் என்று இரண்டரை நாள் உங்கள் சக்தியெல்லாவற்றையும் ஒடுக்கி ஓர் உருத்திராட்சத்துக்குள் சிறைவாசம் இருந்தீர்கள். இதற்கு என்ன காரணம்? நான் உங்களைப் பிடித்ததே. இது இரண்டரை நாளாய் இருந்தால் என்ன? இரண்டரை ஆண்டுகள் ஆனால் என்ன?'' என்று சொன்ன சனிபகவானைப் பார்த்து சிவபெருமான் சொன்னார்: ''சனியனே! என்னையே நீ பிடித்ததால் இன்று முதல் உனது பெயர் சனீஸ்வரன் என்று அழைக்கப்படுவாய்'' என்றார்.

**இவருக்கு**
**உரிய நாள் - சனிக்கிழமை**

| | | |
|---|---|---|
| இராசி | – | மகரம் – கும்ப இராசிகளுக்கதிபதி |
| திக்கு | – | மேற்குப் பார்வை |
| தலம் | – | திருநள்ளாறு, திருக்கோண மலை [இலங்கை] |
| நிறம் | – | கருமை |
| மலர் | – | கருங்குவளை, வள்ளி |
| துணி | – | கறுப்பு நிற ஆடை |
| இரத்தினம் | – | நீலக்கல் |
| ஊர்தி | – | காக்கை |
| நைவேத்தியம் | – | எள் கலந்த அன்னம் |
| சனி தசை | – | 7 ஆண்டு |

## ஸ்தோத்திரம்

சங்கடம் தீர்க்கும் சனி பகவானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றிச் சாகா நெறியில்
இச்சகம் வாழ இன்னருள் தா தா

## பலன்

நீண்ட ஆயுள், குறையாத செல்வம் கிடைப்பதோடு, சனி தோஷமும் விலகும்.

## பரிகாரங்கள்

சனிக்கிழமைகளில் விரதம் இருந்து, மேலே காணும் ஸ்தோத்திரத்தை சொல்வதோடு, ஆலயத்துக்கும் சென்று எள்ளுப் பொட்டலம் கலந்த நல்லெண்ணெய்த் தீபம் ஏற்றுவதோடு, விஷ்ணு நாமம் படிப்பது நலம்.

## இராகு பகவான் விரதம்

### இராகு பகவான்

தேவர்களும், அசுரர்களும் திருப்பாற் கடலைக் கடைய அமுதம் வெளிப்பட்டது. கிடைக்கப்பட்ட அமுதம் அசுரர்களுக்குக் கிடைத்தால் அதனால் தேவர்களுக்கும் வேறு உயிர்களுக்கும் ஆபத்து விளையும் என்று எண்ணிய திருமால், இதைத் தடுக்க அழகிய மோகினி உருவம் எடுத்தார். அவள் அழகில் அசுரர்கள் மயங்கியிருக்க, மோகினி தேவர்களுக்கு அமுதத்தை வழங்கினாள். ஸிம்ஷிகைக்கும், விப்ரசித்து என்னும் அசுரனுக்கும் பிறந்த சுவர்ணபானு இந்த வஞ்சனையை அறிந்து சகிக்க மாட்டாமல் தேவர்களின் உருவெடுத்து அமிர்தத்தை உண்டுவிட்டான். சூரிய, சந்திரர்கள் மோகினியிடம் சுவர்ணபானுவின் வேஷத்தை சுட்டிக் காட்ட, மோகினி அமுதம் பரிமாறிய கரண்டியால் சுவர்ணபானுவின் தலையில் அடித்தாள். அதனால் சுவர்ணபானுவின் உடல் வேறாகவம், தலை வேறாகவும் துண்டிக்கப்பட்டது. அமுதம் உண்டதால் அவன் இறக்க வில்லை. தலைப்பக்கம் தேவர் தலையுடன் கூடிய கரும்பாம்பாக உடல் மாறிவிட்டது. இதுவே இராகு. துண்டிக்கப்பட்ட உடல் பாகம் தேவருடன் ஐந்து தலை நாகத்துடன் கூடிய உருவமாக மாறிவிட்டது. இதுதான் கேது.

இவர்கள் பரமசிவனை நோக்கித் தவம் செய்து கிரகப் பதவி பெற்றார்கள். சூரிய சந்திரர்களையே பலம் இழக்கச் செய்யக் கூடியவர்கள். இராசி சக்கரத்தில் மற்ற ஏழு கிரகங்களும் வலமாகச் சுற்றி வருகையில் இராகுவும், கேதுவும் மட்டும் அப்பிரதட்சணமாக இயங்கி வருகின்றார்கள்.

''யாதும் ஊரே! யாவரும் கேளிர்'' என்பது போல இராகு எந்த இராசியில் இருக்கிறாரோ, எந்த கிரகத்தினால் பார்க்கப்படுகிறாரோ அதைப் பொறுத்துப் பலனைக் கொடுக்கக் கூடியவர்.

| | |
|---|---|
| இவருக்கு உரிய நாள் | – சனிக்கிழமை |
| தலம் | – திருக்காளத்தி, திருநாகேஸ்வரம் |
| நிறம் | – கருமை |
| நைவேத்தியம் | – உழுந்து சாதம் |
| மலர் | – மந்தாரை |
| துணி | – கறுப்பு நிற ஆடை |
| இரத்தினம் | – கோமேதகம் |
| இராகு தசை | – 18 ஆண்டு |
| திக்கு | – தெற்குப் பார்வை |
| ஊர்தி | – ஆடு |

## ஸ்தோத்திரம்

**அரவெனும் இராகு அய்யனே போற்றி**
**கரவாது அருள்வாய் கஷ்டங்கள் நீங்கி**
**ஆகவருள் புரி அனைத்திலும் வெற்றி**
**இராகுக்கனியே இரம்மியா போற்றி**

## பலன்

ஜாதகத்தில் இராகு பகவான் தோஷமுள்ளவர்களும், இராகு பகவான் நீசமுடையவர்களும், திருமணத்தடை, பணப் பற்றாக்குறை தீர இராகு பகவானுக்குச் சனிக் கிழமை தோறும் விரதம் இருக்கலாம்.

## பரிகாரங்கள்

சனிக்கிழமை காலை நீராடி, கருப்பு நிற ஆடை அணிந்து கொள்ள வேண்டும். பின்னர் காளி

கோயிலுக்கோ அல்லது துர்க்கை கோயிலுக்கோ சென்று, வேப்பெண்ணெய் விளக்கு ஏற்றி, உழுந்து சாதம் படைத்து, மந்தாரை மலர்களால் அர்ச்சனை செய்து தூப தீபம் காட்டி வணங்க வேண்டும். நவக்கிரக சன்னதிக்குச் சென்று இராகு பகவானுக்கு மந்தாரை மலர் மாலை சாத்தி, நவக்கிரகங்களைச் சுற்றி வந்து வணங்குவதோடு மேலே சொன்ன ஸ்தோத்திரத்தைச் சொல்வது நல்லது.

## கேது பகவான் விரதம்

### கேதுபகவான்

இராகு பகவானைப் போல கேது பகவானுக்கும் சொந்த வீடு இல்லை. எந்த இராசியில் இருப்பாரோ, அதற்குத் தக்க பலனைக் கொடுப்பார். ஒவ்வொரு நாளும் இராகு காலம் இருப்பதைப் போல கேதுவுக்கும் 'எமகண்டம்' என்று ஆட்சிக் காலம் உண்டு.

இவருக்குச் சனியும், சுக்கிரனும் நண்பர்கள். சூரியனும், சந்திரனும், செவ்வாயும் பகைவர்கள். ஜன்ம இலக்கினத்துக்கு 1, 4, 7, 10 ஆகிய இடங்களில் இருந்தால் நல்ல பலன்களும், கேது தசை, கேது புத்தி காலங்களில் மேலும் நற்பலன்களையும் கொடுப்பார். 2, 6, 8, 12 ஆகிய இடங்களில் இருந்தால் தீய பலன்களைக் கொடுப்பார்.

| | |
|---|---|
| இவருக்கு உரிய நாள் | – செவ்வாய்க்கிழமை |
| தலம் | – நாகநாதன் கோயில் [நாகபட்டிணம்] |
| நிறம் | – செம்மை [பல வர்ணம்] |
| திக்கு | – தெற்குப் பார்வை |
| நைவேத்தியம் | – கொள்ளு கலந்த கொழுக்கட்டை |
| மலர் | – செவ்வல்லி |
| இரத்தினம் | – வைடூரியம் |

கேது – தசை 7 ஆண்டு
ஊர்தி – சித்ரகபோதம்

### ஸ்தோத்திரம்

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம், வம்பு வழக்குகளின்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரக்ஷி

### பரிகாரங்கள்

செவ்வாய்க்கிழமை தோறும் விரதம் இருந்து, ஆலயத்துக்குச் சென்று செவ்வல்லி மலர் மாலையை விநாயகருக்கு அணிவித்து, கொள்ளுக் கலந்த கொழுக் கட்டை மோதகம் படைத்து, செவ்வல்லி மலர்களால் அர்ச்சனை செய்து, தூப தீபம் காட்டி வணங்க வேண்டும். கேது கிரகத்துக்கு அதிபதி இந்திரன் என்றாலும், விநாயகரையே வழிபட வேண்டும்.

நவக்கிரக சன்னிதிக்குச் சென்று கேது பகவானுக்குச் செவ்வல்லி மலர் மாலை சாத்தி, நவக்கிரகங்களைச் சுற்றி வந்து மேலே உள்ள ஸ்தோத்திரத்தைச் சொல்வது நல்லது.

## பயனுள்ள தகவல்கள்

### நமது முன்னோர்கள் விரதமிருந்து கடைப்பிடித்த உபவாச முறைகள்

1) உமிழ் நீரைக்கூட உள்ளே இறக்காமல் உபவாசம் இருப்பது. இது யோகிகளால் மட்டுமே சாத்தியம் என்பர்.

2) தேன் அல்லது இளநீர் ஆகியவற்றுள் ஒன்றை மட்டும் அருந்தி உபவாச விரதமிருப்பது.

3) பசுவின் பாலை மட்டும் அருந்தி உபவாச விரதம் இருப்பது.

4) தொடர்ந்து பன்னிரெண்டு நாட்கள் எந்த உணவுமின்றி நீரை மட்டுமே அருந்தி உபவாச விரதம் இருப்பது.

5) காலை நேர உணவு மட்டுமே சாப்பிட்டு உபவாச விரதம் இருப்பது.

6) பகல் நேர உணவு மட்டுமே சாப்பிட்டு உபவாச விரதமிருப்பது.

7) இரவு நேர உணவு மட்டுமே சாப்பிட்டு உபவாச விரதமிருப்பது.

8) மூன்று நாட்கள் தொடர்ந்து காலை நேர உணவு மட்டும் சாப்பிட்டு உபவாசமிருப்பது.

9) மூன்று நாட்கள் பகல் நேர உணவு மட்டும் சாப்பிட்டு உபவாசமிருப்பது.

10) மூன்று நாட்கள் இரவு நேர உணவு மட்டும் சாப்பிட்டு உபவாசமிருப்பது.

11) கடுமையான விரத முறையில் இருபத்தொரு நாட்கள் வெறும் பசுப்பால் மட்டும் சாப்பிட்டு உபவாச விரதம் இருப்பது.

12) மூன்று நாட்கள் பகல் ஒரு வேளை மூன்று கைப்பிடி அன்னம் மட்டும் சாப்பிட்டு உபவாச விரதம் இருத்தல்.

13) இரவில் மட்டும் மூன்று பிடி அன்னம் சாப்பிட்டு உபவாச விரதம் இருத்தல்.

14) ஒரு நாள் பகல் நேரத்தில் சுத்தமான எள்ளுப் பிண்ணாக்கு மட்டுமே சாப்பிட்டு உபவாசமிருப்பது.

15) ஒரு நாள் இரவில் மட்டும் பசுவின் பால் அருந்தி உபவாச விரதம் இருத்தல்.

16) ஒரு நாள் மோரை மட்டுமே அருந்தி உபவாச மிருப்பது.

17) ஒரு நாள் முழுவதும் சுத்தமான நீரை மட்டுமே அருந்தி உபவாசமிருப்பது.

18) ஒரு நாள் முழுவதும் வெறும் பொரிமா மட்டுமே சாப்பிட்டு உபவாச விரதம் இருப்பது. இந்தப் பொரிமா என்பது புழுங்கல் அரிசியை நன்கு பொடித்து நெய், தேங்காய், சர்க்கரை ஆகியவற்றைப் போட்டு பிசைந்து வைத்துக் கொள்வதாகும்.

19) ஒரு நாள் முழுவதும் தினை மாவு மட்டும் சாப்பிட்டு உபவாசம் இருப்பது.

20) தேய்பிறை அன்று ஆரம்பித்து வளர்பிறை முடிந்து திரும்பத் தேய்பிறை நாட்கள் வரை முதல் தினம் ஒரு பிடி அன்னத்தை மட்டும் சாப்பிட்டுப் பின்னர் தினம் ஒவ்வொரு பிடி அன்னத்தை அதிகமாக்கிக் கொண்டு, சுக்லபட்சம் முடிந்த பிறகு ஒவ்வொரு பிடி அன்னமாகக் குறைப்பது.

21) ஒரு நாள் முழுவதும் வில்வ தளத்தையும் (இலை) நீரையும் மட்டுமே அருந்தி உபவாச விரதம் இருப்பது.

22) ஒரு நாள் முழுவதும் அரச இலைத் தளிர்களையும், நீரையும் அருந்தி உபவாச விரதம் இருப்பது.

23) ஒரு நாள் முழுவதும் அத்தி இளந் தளிர்களையும், நீரையும் மட்டும் அருந்தி உபவாச விரதம் இருப்பது.

24) இருவேளை உணவுடன் உபவாசமிருப்பது.

25) முதல் நாள் ஒரு வேளை பகல் உணவு மட்டுமே உட்கொண்டு மறுநாள் இரவு மட்டும் உணவு கொள்வதான உபவாச விரதம் இருப்பது.

26) மாமிச உணவுகள், மசாலாக்கள் இல்லாத சைவ உணவுகள் மட்டும் சேர்ந்த உணவுகளை மட்டுமே குறைந்த அளவு சாப்பிட்டு உபவாச விரதம் இருப்பது.

27) வாழைக்காய், பூடு, வெங்காயம், பெருங்காயம் ஆகியவை சேர்ந்த உணவுகளைச் சேர்த்துக் கொள்ளாமல் உபவாச விரதம் இருப்பது.

மேற்கூறிய ஏதாவது ஒன்றைத் தேர்ந்து எடுத்து உபவாசம் இருக்கலாம். ஆனால் எதுவுமே அருந்தாமல் நீர் மட்டும் அருந்தி உபவாசம் இருப்பது சிறந்தது என்பர். உபவாசம் = (இறைவன்) பக்கத்தில் இருப்பது என்ற பொருள் உடையது.

## இரண்டு விரதங்கள் சேர்ந்திருந்தால் அனுஷ்டிக்க வேண்டிய விரத விதி

1) வெள்ளிக்கிழமை விரதம் இருப்போர் வேறு விரதங்கள் சேர்ந்தால் இரு விரதங்களையும் சேர்த்து விரதம் இருக்கலாம். உபவாசம் சேர்ந்தால் உபவாசம் இருக்கவும்.

2) சனிக்கிழமை விரதம் இருப்போர் வேறு விரதங்கள் சேர்ந்தால் தலையில் எண்ணெய் வைக்காமல் முழுகி இரண்டு விரதங்களையும் உரிய காலத்தில் நோற்ற பின்பே உணவு உட்கொள்க. உபவாச நோன்பாயின் உபவாசம் இருக்கவும்.

3) சிவராத்திரி விரதத்தோடு வேறு விரதங்கள் சேருமாயின் – உதாரணமாக சிராத்தம் வரின் திவசத்தைச் செய்து உணவை நுகர்ந்து விட்டு உபவாசம் இருக்கலாம். சிவராத்திரி உபவாசம் இராதவர் குறித்த நேரத்தில் உணவு உட்கொள்ளலாம்.

4) ஒரே நாளில் மூன்று விரதங்கள் சேர்ந்தால் மூன்று விரதங்களையும் அந்தந்த காலங்களில் அனுஷ்டித்து முடித்த பின்பு உணவு உட்கொள்ளவும். மூன்று விரதங்களில் ஒன்று உபவாசமாய் இருப்பினும் உபவாசம் இருக்கவும். சனிக்கிழமை விரதம் முடிந்ததும் வேறாக சமைக்கப்பட்ட உணவைக் காகத்திற்கு இட்டு மற்ற விரதத்தைத் தொடரவும். சிராத்த நாள் என்றால் திவசம் செய்து உணவை நுகர்ந்த பின்பு மற்ற விரதத்தைத் தொடர வேண்டும்.

5) தீபாவளியுடன் அமாவாசை சேருமாயின் விடியற் காலையில் எண்ணெய் வைத்து முழுகி புத்தாடை அணிந்து பின்னர் வழமை போல் குளித்து அமாவாசை விரதம் நோற்க வேண்டும். சிராத்தம் என்றாலும் மேற் கூறியவாறு செய்யவும். இயலாதவர் ஒரு துளி எண்ணெய் வைத்து முழுகிப் புத்தாடை அணிந்து அமாவாசை விரதம் அனுஷ்டித்தல் வேண்டும்.

6) ஏகாதசி விரதத்தோடு மற்றைய விரதம் சேருமானால் இரண்டையும் உரிய காலத்தில் அனுஷ்டிக்கவும். மற்றைய விரதம் உபவாசம் எனில், உபவாசம் இருக்கவும். சிராத்தம் வரின் திவசம் செய்த பின் உணவை நுகர்ந்து விட்டு உபவாசம் இருக்கவும். உபவாசம் இராதவர் குறித்த நேரத்தில் உணவு உட்கொள்க.

7) சிவ விரதமாகிய சோம வார விரதம் இருப்போர் வேறு விரதம் சேர்ந்தால் இரண்டு விரதங்களையும் அனுஷ்டிக்க வேண்டும். சிராத்தம் வரின் உணவை நுகர்ந்து பின் உபவாசம் இருக்கவும். அமாவாசை வரின் தர்ப்பணம் செய்து சோமவார விரதம் இருக்கவும்.

8) விரத பூர்த்தியாகிய பாரணம் செய்யும் தினத்தன்று வேறு விரதம் சேர்ந்தால் காலையில் குளித்து முழுகி பூஜை முடித்துத் தீர்த்தத்தை உட்கொண்டு அதன் பின் மற்றைய விரதத்தை அனுஷ்டிக்கவும்.

## யார் யாருக்கு என்னென்ன மலர்கள் சாத்தி வழிபடலாம் எனும் விளக்கம்

1) விநாயகருக்கு : செம்பருத்தி, தாமரை, ரோஜா மற்றும் அறுகம்புல் முதலியன.

2) சிவனுக்கு : வில்வம், சங்கு மலர், தும்பை, தாமரை மலர், செம்பருத்தி.

3) விஷ்ணுவுக்கு : பவளமல்லி, தாமரை, மருக்கொழுந்து, துளசி.

4) அம்பிகைக்கு : வெண்தாமரை, மல்லிகை, முல்லை, சூரியகாந்தி, செவ்வரளி, செம்பவளமல்லி.

5) முருகனுக்கு : முல்லை, மல்லிகை, சாமந்தி, சூரியகாந்தி, ரோஜா.

## பூஜைக்குப் பயன்படுத்தப்படும் பூக்கள் தரும் பலன்கள்

1) மனோரஞ்சிதம் – தம்பதிகளுக்குள் ஒற்றுமையைத் தரும்.

| | | |
|---|---|---|
| 2) நீலச் சங்கு புஷ்பம் நீலக் கனகாம்பரம் | – | நீண்ட ஆயுள், சனி பகவான் அருளும் கிடைக்கும். |
| 3) மஞ்சள் அரளி, பொன் அரளி, செவ்வந்தி | – | கடன்கள் அடைபடும், திருமணம் கைகூடும், வியாழ தோஷம் நீங்கும் |
| 4) சிவப்பு அரளிப்பூ | – | குடும்ப ஒற்றுமை தரும், கவலையைத் தீர்க்கும். |
| 5) வெண் தாமரை வெள்ளை நந்தியா வட்டை, மல்லிகை, ஜாதிமல்லி, பிச்சிப்பூ, மர வல்லி | – | மனச் சஞ்சலத்தைப் போக்கும். |
| 6) செந்தாமரை | – | ஆத்ம பலம், நீண்ட ஆயுள், செல்வம், வியாபார விருத்தி, சூரிய பகவான் அருள் என்பன கிடைக்கும். |

## பலன்கள் தரவல்ல அர்ச்சனை இலைகள்

| | | |
|---|---|---|
| 1) சௌபாக்கிய வாழ்வுக்கு | – | வெள்ளறுகம்புல் |
| 2) வாக்குவன்மை பெற | – | அரச இலை |
| 3) கல்வியில் மேன்மைக்கு | – | இலந்தை இலை |
| 4) தீய சக்திகள் அகல | – | மரு (இலை) |
| 5) தர்மசிந்தனை வளர | – | முல்லை இலை |
| 6) துயரங்கள் நீங்க | – | அகத்திக் கீரை |
| 7) பொருள் பெற | – | கரிசலாங்கண்ணி இலை |
| 8) பில்லிசூனியம் நீங்க | – | தாழை இலை |

9) இன்பம் பெற – வில்வ இலை

10) ஞானத்தன்மைக்கு – ஜாதி மல்லிகை இலை

## கடவுள்களுக்குப் பிரியமான நிவேதனப் பொருள்கள்

| | |
|---|---|
| விநாயகருக்கு | – கொழுக்கட்டை, சர்க்கரைப் பொங்கல், கொண்டைக் கடலை |
| சிவபெருமானுக்கு | – வெண் பொங்கல், வடை, திங்கட்கிழமைகளில் தோசை. |
| பார்வதிக்கு | – சர்க்கரைப் பொங்கல், உழுத்தம் வடை. |
| முருகனுக்கு | – சர்க்கரைப் பொங்கல், புளியோதரை. |
| விஷ்ணுவுக்கு | – வெண் பொங்கல், இலட்டு, தோசை, புளியோதரை. |
| துர்க்கைக்கு | – பாயசம், சர்க்கரைப் பொங்கல். |
| ஆஞ்சநேயர் | – மிளகுவடை, தயிர்சாதம். |
| நந்திகேஸ்வரர் | – காப்பரிசி. |

## நவக்கிரகங்களுக்குப் பிரியமான நிவேதனப் பொருள்கள்

| | |
|---|---|
| சூரியனுக்கு | – சூடு ஆறாத சர்க்கரைப் பொங்கல் |
| சந்திரனுக்கு | – பால் பாயசம் |
| செவ்வாய்க்கு | – பொங்கல் |
| புதனுக்கு | – புளியோதரை |

குருவுக்கு – தயிர்சாதம்
சுக்கிரனுக்கு – நெய்ப் பொங்கல்
சனீஸ்வரனுக்கு – எள் சாதம்
இராகுவுக்கு – உழுந்து சாதம்
கேதுவுக்கு – கொள்ளுப் பொடி கலந்த அன்னம்

**வார தான பலன்**

| கிழமை | நிவேதனப் பொருள் | பலன் |
|---|---|---|
| ஞாயிற்றுக்கிழமை | பாயசம் | ஆரோக்கியம் |
| திங்கட்கிழமை | பால் | சந்ததி வளரும் |
| செவ்வாய்க்கிழமை | வாழைப்பழம் | செல்வம் |
| புதன்கிழமை | வெண்ணெய் | மனச்சாந்தி |
| வியாழக்கிழமை | சர்க்கரை | ஞானம் |
| வெள்ளிக்கிழமை | வெள்ளைச் சர்க்கரை | பக்தி |
| சனிக்கிழமை | பசு நெய் | நீண்ட ஆயுள் |

**மாத தானங்கள்**

சித்திரை மாதம் – ஐந்துவகை பட்சணங்கள்
வைகாசி மாதம் – வெல்லம்
ஆனி மாதம் – தேன்
ஆடி மாதம் – வெண்ணெய்

| | | |
|---|---|---|
| ஆவணி மாதம் | – | தயிர் |
| புரட்டாசி மாதம் | – | சர்க்கரை |
| ஐப்பசி மாதம் | – | பாயசம் |
| கார்த்திகை மாதம் | – | பால் |
| மார்கழி மாதம் | – | அரிய தரம் என்னும் பணியாரம் |
| தை மாதம் | – | தயிர் |
| மாசி மாதம் | – | நெய் |
| பங்குனி மாதம் | – | தேங்காய் |

## திதி பூஜா பலன்கள்

| | | |
|---|---|---|
| பிரதமை | நெய் | நோய் அகலும் |
| துதியை | சர்க்கரை | ஆயுள் விருத்தி |
| திருதியை | பால் | துக்கங்கள் அகலும் |
| சதுர்த்தி | பக்ஷணம் | விக்கினம் அகலும் |
| பஞ்சமி | வாழைப் பழம் | புத்திகூர்மை உண்டாகும் |
| சஷ்டி | தேன் | உடல் சாந்தி |
| சப்தமி | வெல்லம் | சோகம் அகலும் |
| அஷ்டமி | தேங்காய் | பாவங்கள் அகலும் |
| நவமி | பொரி | இம்மை சுகம் |
| தசமி | எள் | யம பயம் நீங்கும் |
| ஏகாதசி | தயிர் | தெய்வ பக்தி உண்டாகும் |
| துவாதசி | அவல் | பிரேமை, பக்தி உண்டாகும் |

| | | |
|---|---|---|
| திரயோதசி | கடலை | சந்ததி உண்டாகும் |
| சதுர்த்தசி | சத்துமாவு | சிவானுக்கிரகம் கிடைக்கும் |
| பௌர்ணமி | பாயசம் | பித்ருக்களுக்கு நற்கதி |
| அமாவாசை | பாயசம் | பித்ருக்களுக்கு நற்கதி |

## தச தானங்கள்

1) கோதானம்
2) பூமி தானம்
3) எள்ளு தானம்
4) சுவர்ண தானம் (பவுண்)
5) நெய் தானம்
6) வஸ்திரதானம் (உடுப்பு)
7) தானிய தானம்
8) வெல்ல தானம்
9) வெள்ளி தானம்
10) உப்பு தானம்

## எந்தெந்தக் கடவுள் என்னென்ன பிரியப்படுவார்கள் எனும் விளக்கம்

| | |
|---|---|
| அபிஷேகப் பிரியர் | சிவன் |
| அலங்காரப் பிரியர் | மகா விஷ்ணு |
| நமஸ்காரப் பிரியர் | சூரிய பகவான் |
| நைவேத்தியப் பிரியர் | விநாயகர் |

## எந்தெந்தக் கோவில்களுக்குச் சென்றால் என்னென்ன பலன் கிட்டும் எனும் விளக்கம்

| | |
|---|---|
| திருப்பதி | ஐஸ்வரியம் |
| சமயபுரம் மாரியம்மன் | சுகம் பெற |
| நாகர்கோவில் | சர்ப்ப தோஷம் நீங்க |
| திருமணஞ்சேரி | திருமணம் நடக்க |
| திருக்கருகாவூர் | சுகப் பிரசவம் ஏற்பட |
| தில்லையம்மன் ஆலயம் | மனநோய் தீர |
| திருவீழிமிழலை | திருமணம் நடக்க |
| பாபநாசம் | பாபப் பரிகாரம் |
| காசி - இராமேஸ்வரம் | குழந்தை பாக்கியம் பெற |
| திருக்கடவூர் | நீண்ட ஆயுள் கிடைக்க |
| தனுஷ்கோடி | பாவப் பரிகாரம் |
| வைத்தீஸ்வரன் கோவில் | நோய்கள் குணம் அடைய |
| சங்கரநயினார் கோயில் | நாகதோஷம் நீங்க |

## தெய்வ ஊர்திகள் (வாகனங்கள்)

| | |
|---|---|
| விநாயகர் | மூஷிகம் |
| சிவன் | இடபம் |
| முருகன் | மயில், யானை, ஆட்டுக்கடா |
| வயிரவர் | நாய் |
| விஷ்ணு | கருடன் |

| | |
|---|---|
| மகேசுவரி | இடபம் |
| கௌமாரி | மயில் |
| வைஷ்ணவி | கருடன் |
| மாகாளி | பேய் |
| வராகி | சிங்கம் |
| இயமன் | எருமை |
| குபேரன் | நரவிமானம், யானை, புட்பகவிமானம் |
| அக்கினி | ஆடு |
| வாயு | மான் |
| வருணன் | இராட்சத மீன் |
| ஈசானருத்திர மூர்த்தி | காளை |
| துர்க்கை | சிங்கம், கலைமான், புலி |
| மூதேவி | கழுதை |
| காமன் | தென்றல் தேர் |
| அபிராமி | அன்னம் |
| சந்திரன் | முத்து விமானம் |
| இந்திரன் | ஐராவத யானை |
| ஐயப்பன் | புலி, காளை |
| சூரியன் | ஒற்றையாழித் தேர் |
| சந்திரன் | வெள்ளைக் குதிரை |
| செவ்வாய் | சிவப்பு ஆடு |

| | |
|---|---|
| புதன் | சிங்கம் |
| குரு | மஞ்சள் குதிரை, யானை |
| சுக்கிரன் | வெள்ளைக் குதிரை |
| சனி | காக்கை |
| ராகு | ஆடு |
| கேது | சித்ரகபோதம் |

## குத்து விளக்கும் அதன் பலன்களும்

விரத நாட்களிலும், மற்ற நாட்களிலும் நாம் தீபம் ஏற்றுவதற்கு குத்து விளக்கைப் பயன்படுத்துகிறோம். அதில் எத்தனை முகம் ஏற்றுகிறோமோ அதைப் பொறுத்து அத்தனை விதமான பலன்கள் கிடைக்கின்றன.

| | |
|---|---|
| ஒரு முகம் ஏற்றினால் | – மத்திம பலன் தரும். |
| இரண்டு முகம் ஏற்றினால் | – குடும்ப ஒற்றுமையைத் தரும். |
| மூன்று முகம் ஏற்றினால் | – புத்திர சுகம் தரும். |
| நான்கு முகம் ஏற்றினா் | – பசு, பூமி ஆகியவற்றைத் தரும். |
| ஐந்து முகம் ஏற்றினால் | – செல்வத்தைத் தரும். |

## தூப தீபங்களின் அதி தேவதைகள்

| | |
|---|---|
| தூபத்தில் | – அக்னி தேவன் |
| மகா தீபத்தில் | – சிவன் |
| நாக தீபத்தில் | – கேது |

| | | |
|---|---|---|
| விருஷ தீபத்தில் | – | தர்ம தேவதை |
| புருஷாம்ருக தீபத்தில் | – | விஷ்ணு |
| பூரண கும்பத்தில் | – | உருத்திரன் |
| பஞ்ச தட்டுகளில் | – | பிரம்ம தேவதைகள் : (ஈசானம், தற்புருஷம், அகோரம்,வாமதேவம், சத்தியோசாதம்) |
| நட்சத்திர தீபங்களில் | – | 27 நட்சத்திரங்கள் |
| மேரு தீபத்தில் | – | 12 சூரியர்கள் |
| திருநீறு – விபூதியில் | – | பரமேஸ்வரன் |
| கண்ணாடியில் | – | சூரியன் |
| குடையில் | – | சந்திரன் |
| சாமரத்தில் | – | மகாலட்சுமி |
| விசிறியில் | – | வாயு |
| கொடியில் | – | நந்திதேவர் |
| ஆலவட்டத்தில் | – | பிரம்மா |
| கற்பூரத்தில் | – | அக்கினி |

## திருநீற்றுப் பதிகம்

சிவ சின்னங்களின் ஒன்றான திருநீறு சிவ நெறியாளர் களின் அடையாளச் சின்னமாக மட்டுமல்லாது நோய் தீர்க்கக் கூடியதும், மகிமை நிறைந்ததும் ஆகும். இதன் மகிமையைச் சொல்லக் கீழ்வரும் பாடல் எப்படிப் பிறந்தது என்பதை நாம் அறிந்தாலே போதும். மதுரையை ஆண்ட கூன்பாண்டியன் என்பவன் சைவத்தை விட்டுச் சமணத்தைத் தழுவியது மட்டு

மல்லாது, சைவர்களான திருஞான சம்பந்தரும், சிவனடியார்களும் தங்கியிருந்த மடாலயத்துக்கு நெருப்பும் வைத்தான். அதன் காரணமாக கூன் பாண்டியனுக்கு வெப்புநோய் பற்றவே வேதனையடைந் தான். சமணர்கள் தங்கள் மந்திரங்களைக் கூறிக் குண்டிகை நீரைத் தெளித்தும், மயிற் பீலியைக் கொண்டு தடவியும், மன்னனுக்குத் நோய் தீர்ந்தபாடில்லை.

திருஞான சம்பந்தர், மன்னனின் மனைவி மங்கை யர்க்கரசியாரதும், அமைச்சர் குலச்சிறையாரதும் அழைப்பை ஏற்று அரண்மனை சென்று கீழ்வரும் திருநீற்றுப் பதிகத்தைப் பாடி, பாண்டிய மன்னனின் வெப்பு நோயைத் தீர்த்தார்.

கூன்பாண்டியனைப் போல சமணத்தைத் தழுவிய திருநாவுக்கரசருக்கு ஏற்பட்ட சூலை நோய், அவரது சகோதரியாரான திலகவதியார் கொடுத்த திருநீற்றைப் பூசி ''கூற்றாயினவாறு'' என்ற பதிகத்தைப் பாடப் பகலவனைக் கண்ட பனிபோல் திருநாவுக்கரசருக்கு ஏற்பட்ட சூலை நோய் விலகியது. இந்த இரண்டு சமய குரவர்களின் வாழ்வில் நடந்த இந்த இரு சம்பவங் களுமே திருநீற்றின் மகிமையை எமக்கு உணர்த்தப் போதுமானவை.

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலதுநீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவதுநீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளதுநீறு
செந்துவர் வாயுமை பங்கன்திரு ஆலவாயான்
திருநீறே.

வேதத்தி லுள்ளதுநீறு வெந்துயர் தீர்ப்பதுநீறு
போதந் தருவதுநீறு புன்மை தவிர்ப்பதுநீறு

ஓதத் தகுவதுநீறு உண்மையி லுள்ளதுநீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்ததிரு ஆலவாயான் திருநீறே.

முத்தி தருவதுநீறு முனிவர் அணிவதுநீறு
சத்திய மாவதுநீறு தக்கோர் புகழ்வதுநீறு
பக்தி தருவதுநீறு பரவ இனியதுநீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே.

காண இனியதுநீறு கவினைத் தருவதுநீறு
பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை
கொடுப்பது நீறு
மாணந் தகைவதுநீறு மதியைத் தருவதுநீறு
சேணந் தருவதுநீறு திருஆலவாயான் திருநீறே.

பூச இனியதுநீறு புண்ணிய மாவதுநீறு
பேச இனியதுநீறு பெருந்தவத் தோர்களுக்கெல்லாம்
ஆசை கெடுப்பதுநீறு அந்தம தாவதுநீறு
தேசம் புகழ்வதுநீறு திருஆலவாயான் திருநீறே.

அருத்தம தாவதுநீறு அவலம் அறுப்பதுநீறு
வருத்தந் தணிப்பதுநீறு வானம் அளிப்பதுநீறு
பொருத்தம தாவதுநீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்ததிரு ஆலவாயான்
திருநீறே.

எயிலது அட்டதுநீறு இருமைக்கும் உள்ளதுநீறு
பயிலப் படுவதுநீறு பாக்கிய மாவதுநீறு
துயிலைத் தடுப்பதுநீறு சுத்தம தாவதுநீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவாயான் திருநீறே.

இராவணன் மேலதுநீறு எண்ணத் தகுவதுநீறு
பராவண மாவதுநீறு பாவம் அறுப்பதுநீறு
தராவண மாவதுநீறு தத்துவ மாவதுநீறு
அராவணங் குந்திரு மேனிஆலவாயான் திருநீறே.

மாலொ டயனறியாத வண்ணமு முள்ளதுநீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது
வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவதுநீறு
ஆலமது உண்ட மிடற்றுஎம் ஆலவாயான் திருநீறே.

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர்
கூட்டமுங்கூடக்
கண்டிகைப் பிப்பதுநீறு கருதஇனியது நீறு
எண்டிசைப் பட்டபொருளார் ஏத்தும் தகையதுநீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆலவாயான் திருநீறே.

ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவாயான்
திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞான சம்பந்தன்
தேற்றித் தென்னன் உடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர்தாமே.

திருச்சிற்றம்பலம்

## திருநீற்றை இடும்போது அனுசரிக்க வேண்டிய சில விதிகள்

1) இரண்டு கைகளால் வாங்க வேண்டும்.
2) கிழக்கு அல்லது வடக்கு முகமாகத் திரும்பி இடவேண்டும்.
3) வாங்கி அணியும் போது திருநீறு மிஞ்சி விட்டால் கீழே போடுதல், வாயால் ஊதி விடுதல் தவறாகும்.
4) இறைவன் திருமுன்னும், குரு முன்னும், அக்கினி முன்பும் நின்று அணியாது முகத்தைத் திருப்பி நின்று அணிந்து கொள்ள வேண்டும்.

5) நடந்து செல்லும் போது அணியக்கூடாது.

6) உட்கார்ந்து கொண்டு வாங்குதல் கூடாது.

7) நிலத்தில் சிந்திவிட்டால் அதை எடுத்தபின் நீரால் சுத்தம் செய்யவேண்டும்.

8) திருநீற்றைக் காலை, நண்பகல், மாலை, நள்ளிரவு, உணவின் முன்னும், பின்னும், நித்திரைக்கு முன்பதாகவும், பின்னும் அணிந்து கொள்ள வேண்டும்.

9) உத்தூளனமாகவும், திரிபுண்டமாகவும் தரிக்கலாம். உத்தூளனம் என்பது, பரவிப் பூசுதல் ஆகும். திரிபுண்டரம் என்பது புனித நீரால் குழைத்த திருநீற்றை உரிய மந்திரங்களை ஓதியவண்ணம் உச்சி, நெற்றி, மார்பு, தொப்புள், இரு முழந்தாள், இரு தோள், முழங்கைகள், மணிக்கட்டுகள், இரு காது, கழுத்து, முள்ளந்தண்டின் அடி ஆகிய பதினாறு இடங்களிலும் முக்குறிகளாக அணிவது திரிபுண்டரம் எனப்படும். திரிபுண்டரமாகத் திருநீற்றைத் தரிப்பவர்கள் முறைப்படி சமய தீட்சை பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

## ஹோமங்கள் செய்வதால் ஏற்படும் நன்மைகள்

1. **சங்கடஹர சதுர்த்தி தின கணபதி ஹோமம் :** தடைகள், கஷ்டங்கள் நீங்க.

2. **தட்சிணாமூர்த்தி ஹோமம் :** கல்வி, ஞாபக சக்தி பெற

3. **குபேர தனாகர்ஷண மஹாலக்ஷ்மி ஹோமம் :** ஐஸ்வர்யங்களைப் பெற.

4. **ஸ்ரீ சுதர்சன ஹோமம் [ஸ்ரீ விஷ்ணுவுக்கு] :** சத்துரு பயம், வியாபாரத் தடை நீங்க.

5. சூரிய நவக்கிரக ஹோமம் : கிரகஹ தோஷம் நீங்க, கண் வியாதிகள் அகல.

6. அதிருத்ர மஹன்யாஸ மஹா மிருத்யுஞ்சய ஹோமம் : வியாதிகள் அகல, நீண்ட ஆயுள் கிடைக்க.

7. ஸ்வயம்வரா பார்வதி ஹோமம் : திருமணத் தடைநீங்கி, குழந்தை பேறு கிடைக்க.

8. சந்தான கோபாலகிருஷ்ண ஹோமம் : குழந்தை பாக்கியம் கிடைக்க.

9. மகா சிவராத்திரி ஹோமம் : வியாதிகள் தீர, ஆரோக்கியம் பெற.

10. ஆலஹந்தி ஹோமம் : அன்னம் குறைவில்லாமலிருக்க.

11. சரஸ்வதி தேவி ஹோமம் : கல்விச் செல்வம் பெற.

12. ஸ்ரீ சதசண்டீ மஹாயக்ஞ ஹோமம் : ஆரோக்கியம் மற்றும் சகல செல்வங்களையும் பெற.

## ஆலயங்களில் இசைக்கப்படும் வாத்திய இசைகளும் அவற்றால் ஏற்படும் பலன்களும்

| | | |
|---|---|---|
| மத்தளம் | - | சுகம் |
| பேரிகை | - | புஷ்டிவிருத்தி |
| தாளம் | - | கிலேச நாசம் |
| கைத்தாளம் | - | அபயம் |
| சல்லரி | - | காமிகபலன் |
| நரம்பு வாத்தியம் | - | காமிசுபலன் |
| துளை வாத்தியம் | - | புத்திர பௌத்திர விருத்தி |

| | | |
|---|---|---|
| சங்கு | - | சத்துரு நாசம் |
| தோல் வாத்தியம் | - | பிணி தீர்தல் |

## அபிஷேகப் பொருட்களும் அவற்றினால் கிடைக்கும் பலன்களும்

| | | |
|---|---|---|
| தூய நீர் | - | சாந்தி |
| மலரிட்ட தூயநீர் | - | மலநீக்கம் |
| வாசனைத் திரவியம் | - | நீடித்த ஆயுள் |
| சந்தனம் | - | செல்வம், சாயுச்சிய முத்தி |
| பால் | - | ஆயுள் விருத்தி |
| தயிர் | - | புத்திர பாக்கியம் |
| நெய் | - | மோட்சம் |
| தேன் | - | இசைஞான விருத்தி |
| கருப்பஞ்சாறு | - | நித்திய சுகம் |
| சர்க்கரை | - | சத்துருநாசம் |
| வாழைப்பழம் | - | பயிர்விருத்தி |
| பலாப்பழம் | - | உலக வசீகரம் |
| மாம்பழம் | - | வேண்டியதைப் பெறல் |
| மாதுளம் பழம் | - | பகை நீக்கம் |
| நாரத்தம் பழம் | - | சற்புத்தி |
| தேங்காய்ப்பூ | - | அரசுரிமை |
| இளநீர் | - | நன்மக்கட்பேறு |
| கோரோசனை | - | தீர்க்காயுள் |

| | | |
|---|---|---|
| பச்சைக் கற்பூரம் | - | பயம் நீங்கும் |
| கஸ்தூரி | - | வெற்றி உண்டாகும் |
| பன்னீர் | | சாலோக முத்தி |
| அன்னம் | - | ஆரோக்கியம் |
| மாக் காப்பு | - | மலநாசம் |
| மஞ்சட் காப்பு | - | இராசவசியம் |
| பஞ்ச கவ்வியம் | - | ஆன்மசுத்தி |
| பஞ்சாமிர்தம் | - | செல்வம். |


■■■

# குறிப்புகள்

# உறவுகள் மேம்பட...

குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி, மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க:

- நானே பெரியவன். நானே சிறந்தவன் என்ற அகந்தையை(Ego) விடுங்கள்.
- அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள்.(Loose Talks)
- எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசுக்காக கையாளுங்கள். (Diplomacy) விட்டுக் கொடுங்கள் (Compromise).
- சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்பதை உணருங்கள் (Tolerance).
- எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- உங்கள் கருத்துகளில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள் (Flexibility).
- மற்றவர்களுக்குரிய மரியாதையை காட்டவும், இனிய, இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள் (Courtesy).
- புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும்கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- பிரச்சனைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள்.


இந்த இனிய,
என்றும் பயன் தரும்
நூலை பரிசாக
வழங்குவதில்
பெரு மகிழ்வுகொள்ளும்-
தங்கள்
அன்புள்ள,



ஒவ்வோர் ஆலயத்திலும் நடைபெறும் வழிபாடும், விரதங்களும், வகைகளும், அவற்றுக்கான காரணமும், விளக்கமும் கூறும் இந்நூலைப் பெரும் பொக்கிஷமாகக் கருதுவது இன்றியமையாததாகும்.

**சிவஸ்ரீ கனக பாலகுமார சர்மா**

புலம் பெயர்ந்து வாழ்ந்து வரும் சைவத்தமிழ் மக்களிடையே இருக்கின்ற ஆன்மீகப் பற்றுக்கு உறுதுணையாக, ஆன்மீக சிந்தனையோடு, உருவாக்கப்பட்டுள்ள இந்நூலின் தேவையானது இன்றைய காலகட்டத்தில் மிக இன்றியமையாததாகும்.

**சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள்**
**சிவஸ்ரீ ச. குமாரசாமி குருக்கள்**

ஆன்மீக மணம் கமழும் அற்புதப் படைப்பாக திருவாளர் சாம்பசிவம் அகிலேஸ்வரன் அவர்கள் தமது கடுமையான உழைப்பாலும், ஆராய்ச்சியாலும், ஆர்வத்தோடும், பொது நலத்தோடும் இச் சேவையை உவகையுடன் செய்துள்ளார்.

**நா. விக்கினேஸ்வரக் குருக்கள்**

விரதங்களை அனுஷ்டித்துப் பயன்பெற்ற ரிஷிகள், தேவர்கள், அரசர்கள், பக்தர்கள் – இவர்களின் வரலாற்றையும் நமக்கு எடுத்துரைத்து நம்மை இறையுணர்வில் திரு. அகில் அவர்கள் ஈடுபடச் செய்துள்ளார்கள்.

**கயிலை சிவஸ்ரீ இராம நாகநாதசிவம்**

இந்நூல் ஒவ்வொரு விரதத்திற்கும் உரிய வரலாறு அல்லது புராணம், அதனை நோற்கும் முறை, நோற்ப தாலாகும் பயன் என்பவற்றைத் தந்து நிற்கின்றது.

**கவிஞர் க. இராஜமனோகரன்**

செந்தமிழ்ச் செல்வர் திரு. அகில் அவர்கள் இயற்றி யுள்ள 'நமது விரதங்களும் பலன்களும்' எனும் இந்நூல் அவரது எழுத்து ஆற்றலுக்கும், தான் வாழும் சமூகத்தின்பால் கொண்டிருக்கும் அக்கறைக்கும் ஒரு சோற்றுப் பதமாக அமைந்துள்ளது.

**நாகர்கோவில் கிருஷ்ணன்**